
காங்கிரஸ் கட்சியினரை தூக்கியெறிய வேண்டும் பக். 06


படை நடவடிக்கை நிறுத்தம் பக். 07


தென்மராட்சி வலயக் கிரிக்கெட்; சாவகச்சேரி ஹிறிபேர்க் சம்பியன் பக். 22


விடைபெறும் கிரேம் சிமித் பக். 23


இன்றைய காலநிலை

கூடிய வெப்பநிலை 33°c

குறைந்த வெப்பநிலை 27°c

வெப்பமான காலநிலை


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 32

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 099 வள்ளுவர் ஆண்டு: 2045 மாசி21, புதன் 05.03.2014


## மஹிந்த - மன்மோகன் நேற்று சந்தித்துப் பேச்சு

***ஜெனிவா தொடர்பில் நம்பிக்கையான முடிவு சிங்கிடமிருந்து கிடைக்கவில்லை***

***வடக்கு மாகாண சபையுடன் மேலும் நெருங்கிச் செல்வதாக ஜனாதிபதி உறுதியளிப்பு***

றேபிடோ, மார்ச் 5

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் நேற்று மியான்மரில் சந்தித்துப் பேசினர். இருதரப்பு விவகாரங்கள் பல தொடர்பில் அவர்கள் பேசியபோதும் ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படுவது தொடர்பில் சாதகமான பதில் எதனையும் மன்மோகன்சிங் இந்தச் சந்திப்பில் வழங்கவில்லை என்று தெரியவருகிறது.

வங்காள விரிகுடா நாடுகளின் பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாடு மியான்மரில் இடம்பெற்று வருகின்றது.



21 ஆம் பக்கம் பார்க்க

# சர்வதேச விசாரணையை கோருகிறது அமெரிக்கா

***கடந்தகால மீறல்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் மீதான அண்மைய தாக்குதல்கள் தொடர்பில் வலியுறுத்து***

ஜெனிவா, மார்ச் 05

இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற முறைகேடுகள் - மீறல்கள் தொடர்பிலும் பத்திரிகையாளர்கள் மீது நடத்தப்பட்ட அண்மைய தாக்குதல்கள், மனித உரிமைகளின் பாதுகாவலர்கள் மற்றும் மதச் சிறுபான்மையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் என்பன குறித்தும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் விசாரணை ஒன்றை நடத்தவேண்டும் என்று அமெரிக்கா நேற்று தெரிவித்தது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வு ஜெனிவாவில்

21 ஆம் பக்கம் பார்க்க



*சாரா சிவோல்*

## இலங்கையின் பதில் இன்று

கொழும்பு, மார்ச் 05

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வில், இலங்கை தொடர்பில் மற்றொரு தீர்மானம் கொண்டுவரப்படுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கையில் தமது நாட்டின் நிலைப்பாட்டை அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இன்று சபையில் விளக்க உள்ளார்.

மனித உரிமைகள் சபை அமர்வில் பங்குபற்றும் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைமை தாங்கிச் சென்றுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இன்று காலை இலங்கை

21 ஆம் பக்கம் பார்க்க

## விடுதியில் கைதானோருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 05

யாழ். அரியாலையில் இயங்கி வந்த விடுதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட 4 பேரையும் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்று உத்தரவிட்டது.

யாழ். நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்

21 ஆம் பக்கம் பார்க்க

## மோ. சைக்கிள் பள்ளத்தில் பாய்ந்ததில் பூசகர் சாவு

மாங்குளம், மார்ச் 05

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் 15 அடிப் பள்ளத்தில் பாய்ந்ததில் அதில் பயணம் செய்த பூசகர் தூக்கி வீசப்பட்டு உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மாங்குளம் - முல்லைத்தீவு வீதியிலுள்ள பேராற்றுப் பாலத்துக்கு அண்மையில் இடம்பெற்றது. இதில் இரு பிள்ளைகளின் தந்

21 ஆம் பக்கம் பார்க்க

## 3 சிறுவர் உட்பட இந்திய மீனவர் 32 பேர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 05

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 3 சிறார்கள் உட்பட 32 பேர் இலங்கைக் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்க

21 ஆம் பக்கம் பார்க்க

## தீவிரவாதம் ஒடுக்கப்பட்டாலும் தொடர்ந்து கண்காணிப்பு

*- ஜனாதிபதி*

நேபிடோ, மார்ச். 05

இலங்கையில் தீவிரவாதம் தோற்கடிக்கப்பட்டுவிட்டாலும், தொடர்ச்சியான கண்காணிப்பு மிகவும் முக்கியமானது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மியான்மர் தலைநகர் நேபிடோவில் நடைபெற்ற வங்காள விரிகுடா நாடுகளின் தொழில்

21 ஆம் பக்கம் பார்க்க

## வடக்குக்கான ரயில் சேவையில் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு


***போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு***

யாழ்ப்பாணம், மார்ச் 05

வடபகுதிக்கு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இங்கு எமக்குப் பெருமளவானவர்கள் வேலைக்குத் தேவை. அந்த வேலைக்கு உங்கள் பகுதியைச் சேர்ந்தவர்களையே நாம் நியமிப்போம் என்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம நேற்றுத் தெரிவித்தார்.

28 வருடங்களின் பின்னர் யாழ். தேவி ரயில் முதல் முறையாகப் பளையை நோக்கிய சேவையை நேற்று முதல் மீண்டும் ஆரம்பித்தது. கிளி

21 ஆம் பக்கம் பார்க்க




*28 வருடங்களின் பின்னர் நேற்று யாழ்தேவி ரயில் பளையை வந்தடைந்தது. கிளிநொச்சியிலிருந்து பளை வரையான சேவையை போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம நேற்று ஆரம்பித்து வைத்தார். (து-21)*

## மஹிந்தவின் உறுதிப்படி ஏப்ரலில் யாழ்ப்பாணம் வரமாட்டாது யாழ்.தேவி

*யாழ்ப்பாணம், மார்ச். 05*

*ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்குறுதியளித்தபடி, எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு அன்று யாழ். தேவி ரயில் யாழ்ப்பாணத்துக்கு வரமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*'முன்னர் தெரிவித்தவாறு ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணத்*

21 ஆம் பக்கம் பார்க்க

## தலைமன்னாரிலிருந்து விரைவில் இராமேஸ்வரத்துக்கு செல்லலாம்

யாழ்ப்பாணம், மார் 05

தலைமன்னார் வரை ரயில் சேவை விஸ்தரிக்கப்பட்டதும், தமிழ் மக்கள் தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரத்துக்குச் செல்ல முடியும் என்று தெரிவித்த போக்குவரத்து அமைச்சர், கடந்த காலங்களில் தான் அவ்வாறு சென்று வந்ததையும் நினைவு கூர்ந்தார்.

கிளிநொச்சியிலிருந்து பளை வரையிலான ரயில் சேவை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம மேற்கண்டவாறு தெரிவித்தார்.

21 ஆம் பக்கம் பார்க்க

# நம்பகமான உள்ளக விசாரணை இன்றேல் சர்வதேச தலையீடு

***அமெரிக்கத் தீர்மானத்தின் முதற்கட்ட வரைவு வெளியானது***

ஜெனிவா, மார்ச் 5

இலங்கையில் நடைபெற்று முடிந்த போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக இலங்கை அரசு சுதந்திரமான உள்ளக விசாரணை ஒன்றை நடத்தித் தெளிவான முடிவை வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யாத பட்சத்தில் நம்பக மான - சர்வதேச சுயாதீன விசாரணையொன்று நடத் தப்படுவது அவசியம் என இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள தீர்மானத்தின் உத்தேச வரைவில்

21 ஆம் பக்கம் பார்க்க

## தமிழர்கள் கடும் அதிருப்தி

யாழ்ப்பாணம், மார்ச் 5

இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்படவுள்ள அமெரிக்காவின் உத்தேச தீர்மானம் தொடர்பில் தமிழர்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். இந்தத் தீர்மானம் இலங்கை அரசுக்கு மேலும் கால அவகாசத்தை வழங்கிச் சர்வதேச விசாரணையில் இருந்து அதனைத் தப்பிக்க வைக்கும் முயற்சி என்று தமிழர் தரப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

21 ஆம் பக்கம் பார்க்க

# சமந்தா பவரின் உரை முதல் நாளில் இல்லை

ஜெனிவா,மார்ச்.05

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முதல் நாள் அமர்வில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவரின் உரை இடம்பெறவில்லை.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமான ஐ.நா மனித உரிமைகள் சபையின் முதல்நாள் அமர்வில் உயர் நிலைப் பிரதிநிதிகளின் உரைகள் வரிசையில் அமெரிக்கா சார்பில் ஐ.நாவுக்கான தூதுவரும் அமெரிக்காவின் மூத்த ராஜதந்திரியுமான சமந்தா பவர் உரையாற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன்போது, இலங்கை தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாடு குறித்து சமந்தா பவர் விவரிப்பார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முதல்நாள் அமர்வில் சமந்தா பவரின் உரை இடம்பெறவில்லை.

உக்ரைன் விவகாரத்தினால் எழுந்துள்ள நெருக்கடி குறித்து ஆராய நியூயோர்க்கில் நேற்று முன்தினம் நடந்த ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் பங்கேற்றதால் சமந்தா பவர் ஜெனிவா செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே, அமெரிக்கா சார்பில் சமந்தா பவருக்குப் பதிலாக இராஜாங்கத் திணைக்களத்தின் கீழ்நிலைச் செயலர் சாரா சீவோல் உரையாற்றுவார் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது. (த-5)

# பிரச்சினையை இலங்கையே தீர்த்துக் கொள்ள வேண்டும்

## உள்ளகப் பொறிமுறைக்கு தென்னாபிரிக்கா ஆதரவு

**25 ஆவது மனித உரிமைகள் கூட்டத் தொடர் மிக முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது. எங்களுடைய சொந்தப் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அவற்றுக்கு நாமே தீர்வு கண்டோம். இதனையே இலங்கையும் கடைப்பிடிக்க வேண்டுமெனத் தென்னாபிரிக்க மக்கள் விரும்புகின்றனர்.**

ஜெனிவா,மார்ச்.05

இலங்கைப் பிரச்சினையை இலங்கையே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று உள்ளகப் பொறிமுறைக்கான ஆதரவை தென்னாபிரிக்கா நேற்று வெளியிட்டுள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையத்தின் 25 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. இதில் முக்கிய பிரதி நிதிகளின் உரைகள்இடம்பெற்றுவருகின்றன.

இதனடிப்படையில் தென்னாபிரிக்காவின் சர்வதேச உறவுகள் மற்றும் கூட்டுறவு அமைச்சர் எமிலி என்குவானா மாஷாபானே நேற்று மனித உரிமைகள் சபையில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை தொடர்பான பிரச்சினைகளுக்குச் சர்வதேச சமுகம் தீர்வைக் கண்டுபிடிக்க இந்த 25 ஆவது மனித உரிமைகள் கூட்டத் தொடர் மிக முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது. எங்களுடைய சொந்தப் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அவற்றுக்கு நாமே தீர்வு கண் டோம். இதனையே இலங்கையும் கடைப்பிடிக்க வேண்டுமெனத் தென்னாபிரிக்க மக்கள் விரும்புகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கடந்த மாதம் தென்னாபிரிக்காவுக்குப் பயணம் செய்து, அந்த நாட்டு அரசுடன் பேச்சு நடத்தியிருந்ததுடன், தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# ஜனநாயக மக்கள் முன்னணியை மேல் மாகாணத்தில் ஆதரியுங்கள்

## தமிழ்க் கட்சிகளிடம் கோரிக்கை

**“மேல் மாகாணத்தில் எமது கட்சி பலமாக இருப்பது தலை நகரில் வாழும் தமிழ் மக்களுக்கு மட்டு மல்ல, வடக்கு கிழக்கிலும், மலையகத்திலும் வாழும் எங்கள் உடன் பிறப்புக்களுக்கும் பலம் சேர்ப்பது**

நடைபெறவுள்ள மேல் மாகாண சபைத் தேர்தலில் தமிழர் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக ஜனநாயக மக்கள் முன்னணிக்கு தார்மீக ஆதரவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட சகோதரக் கட்சிகள் வழங்க வேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் வைத்து அந்தக் கட்சியின் சார்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாநாகரசபை உறுப்பினரும், ஊடகச் செயலாளருமான சின்னத்தம்பி பாஸ்கரா யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர் ஐக்கியம், தமிழர் வாக்கு, தமிழர் பலம் என்று கோஷத்துடன் நாங்கள் இந்த முறை மேல் மாகாண சபைத் தேர்தலில் களமிறங்கியுள்ளோம். தலைநகரில் தமிழ் பேசும் மக்கள் எங்களுடன் தான் இருக்கின்றார்கள் என்பதை நாங்கள் ஆளும் தரப்புக்கும், இந்த நாட்டு அரசியல் கட்சிகளுக்கும், சர்வதேசத்துக்கும் நிரூபித்துக் காட்ட வேண்டிய வரலாற்றுத் தேவை இருக்கின்றது.

தலைநகரை உள்ளடக்கும் மேல் மாகாணத்தில் எமது கட்சி பலமாக இருப்பது தலை நகரில் வாழும் தமிழ் மக்களுக்கு மட்டு மல்ல, வடக்கு கிழக்கிலும், மலையகத்திலும் வாழும் எங்கள் உடன் பிறப்புக்களுக்கும் பலம் சேர்ப்பது என்ற கட்சியின் தலைவர் மனோ கணேசனின் செய்தியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அந்த நோக்கத்தை அடைந்து காட்டவே, வடக்கு கிழக்குச் சகோதரத் தமிழ் தலைமைகளின் ஒத்துழைப்பு அரசியல் ஆதரவாக அறிவிக்கப்பட வேண்டும் என்பது எங்கள்கட்சியின்எதிர்பார்ப்பாகும். வடக்கு மாகாணத் தேர்தலில் 80 சதவீத வாக்களிப்பு என்ற நடைமுறை மேல்மாகாண தேர்தலிலும் எங்கள் மக்கள் மத்தியில் நடைமுறையாக வேண்டும்.

அந்த இலக்கை எட்டுவதற்குரிய நோக்கிலேயே எங்கள் பரப்புரைகள் இடம்பெறுகின்றன. அந்த இலக்கை நோக்கி நமது மக்களை உந்தித் தள்ளும் விதமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய சகோதரக் கட்சிகள் தமது ஆதரவை அறிவிக்க வேண்டும்.

இங்குள்ள மக்களின் உறவுகளே கொழும்பிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். எனவே இங்குள்ள தமிழ் மக்கள், கொழும்பிலுள்ள தங்கள் உறவுகளை எங்களுக்கு வாக்களிக்கச் செய்ய வேண்டும் - என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான த.சித்தார்த்தன், விந்தன் கனகரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-5)




மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணிக்கு மேல் மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பின் ஆதரவை வேண்டி பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை நேற்று முன்தினம் திருமறை கலாமன்ற கலைக்கோட்ட மண்டபத்தில் ஜனநாயக மக்கள் முன்னணியினர் நடத்தினர். இதில் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் சி.பாஸ்கரா, தமிழ்தேசியக் கூட்டமைப்பின் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வட மாகாணசபை உறுப்பினர்களான த.சித்தார்த்தன், க.விந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ-21)

# தமிழ்ப் பெண்ணைக் குத்திக் கொலை செய்த தமிழ் இளைஞர் குற்றவாளி எனத் தீர்ப்பு

பிரிட்டன், மார்ச் 5

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்திருந்த தமிழ்ப் பெண்ணைக் கழுத்தில் பலமுறை வெட்டிக் கொலை செய்த தமிழர், குற்றவாளி எனப் பிரிட்டன் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் மயூரதி என்ற தமிழ்ப்பெண்ணை, மற்றொரு தமிழர் கழுத்தில் பலமுறை வெட்டிக்கொலை செய்துள்ளார். இது தொடர்பான வழக்கு விசாரணைகள் பிரிட்டனில் இடம்பெற்று வந்தது. இதில் கொலையுடன் தொடர்புடைய இளைஞர் குற்றவாளி என நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

பிரிட்டனில் வசிக்கும் தமிழ்ப் பெண் ஒருவரை கொடூரமான முறையில் கத்தியால் கழுத்தை பலமுறை வெட்டிக்கொலை செய்த மற்றொரு தமிழரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கோபிநாத் வேலுச்சாமி என்ற இலங்கை தமிழரைக் கைகளில் இரத்தக் கறையுடன் கைது செய்த பொலிஸார் கொலை சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

மயூரதி பேரின்பமூர்த்தி (வயது 32) என்னும் ஒரு பிள்ளையின் தாயாரான தமிழ்ப் பெண்ணே கொலையுண்டவர் ஆவார். பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்திருந்த இவரைக் கழுத்தில் எண்ணற்ற தடவைகள் வெட்டிக் கொலை செய்துள்ளார் கோபிநாத்.

'இந்தப் பூமியில் வாழ்வதற்குச் சில மனிதர்களுக்கு தகுதி இல்லை' என்று தன்னைக் கைது செய்த பொலிஸாரிடம் கோபிநாத் மிக அமைதியாகக் கூறியுள்ளார்.

மயூரதி கொலை செய்யப்படுவதை அவதானித்த அயல் வீட்டார் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். உடன் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மயூரதியை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். அவரது கழுத்தில் எத்தனை காயங்கள் உள்ளன எனக் கணக்கிட முடியாத அளவுக்கு வெட்டப்பட்டுள்ளது என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

உறவு தொடர்பான பிறழ்வே இக் கொலைக்கு காரணம் என்று விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. (உ-400)



யாழ். மாவட்டத்தில் பரவியுள்ள பாதீனியச் செடியை அழிக்கும் நடவடிக்கையை யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா முன்னெடுத்துள்ளார். யாழ். மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள படையினர் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதன் ஒரு கட்டமாக நேற்று மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்துக்கு முன்னால் 513ஆவது படைகளின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் பிரியந்தபீரிஸ் தலைமையில் பாதீனியம் அழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (த-86)

# சுன்னாகத்தில் விபத்து பெண் மருத்துவர் படுகாயம்

வலி.வடக்கு, மார்ச் 5

மோட்டார் சைக்கிள் - ஓட்டோ விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த பெண் வைத்தியர் மயக்கமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை சுன்னாகம் மதவடிக்கு அண்மையில் இடம்பெற்ற இந்த விபத்தில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் மனநல மருத்துவரான திருமதி பாரதிதாஸன் தயாபரணி (வயது 47) என்பவரே படுகாயமடைந்தவராவார்.



விபத்து இடம்பெற்ற இடத்தில் மோட்டார் சைக்கிள்.

அலுவலகக் கடமைகளுக்காக மோட்டார் சைக்கிளில் வைத்திய சாலைக்குச் சென்றுகொண்டிருந்த போது முன்னால் சென்றுகொண்டிருந்த ஓட்டோ நடு வீதியில் திரும்பிய போது இந்த விபத்து இடம்பெற்றது.


இதன்போது படுகாயமடைந்த பெண் மருத்துவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (த-400-50-86)

## அபராதத் தொகை செலுத்தினார் பத்தமேனி வாசி

தென்மராட்சி,மார்ச் 5
ஆவணங்கள் எதுவுமின்றி, மதுபோதையில் வாகனம் செலுத்திய அச்சுவேலி பத்தமேனி வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 19 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாரதிய அனுமதிப் பத்திரம், வாகன வரி சான்றிதழ், காப்புறுதி சான்றிதழ் ஆகியவை இன்றியும், மதுபோதையிலும் வாகனம் செலுத்தியதாக பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 4 குற்றங்களுக்குமாக 19 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த வாரம் வண்ணாத்திப் பாலம் அருகில் இடம்பெற்ற வீதி விபத்தில் உயிரிழந்த உறவினரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள வந்த வேளையில் பொலிஸாரிடம் அவர் அகப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)



ஏசியன் பௌண்டேஷன் நிறுவனத்தினரால் வடமாகாணத்திலுள்ள 58 நூலகங்களுக்கான நூல்கள் நேற்று கையளிக்கப்பட்டன. நிகழ்வில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் கலந்து கொண்டு நூலகங்களுக்கான நூல்களை வழங்கி வைத்தார். அருகில் ஏசியன் பௌண்டேஷன் நிகழ்ச்சித்திட்ட அலுவலர் அன்ரன் நல்லதம்பி காணப்படுகிறார். (வ-10)

## பனையிலிருந்து தவறி விழுந்தவர் சாவு


யாழ்ப்பாணம், மார்ச் 5
பனை மரத்தில் இருந்து தவறி விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழுந்தார்.

நேற்றுக் காலை கரவெட்டி துன்னாலை தெற்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இரந்தினசபாபதி தங்கவேல் (வயது-45) என்பவரே உயிரிழுந்தவர் ஆவார்.

இவர் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பயனின்றி சாவடைந்தார். (ஒ-78)

## வற்றாப்பளை முருகன் ஆலயத்தில் திருட்டு

*மூலஸ்தான கதவைத் தீயிட்டு கொளுத்தி திறக்க முயன்றும் பயனில்லை*



வற்றாப்பளை முருகன் ஆலய கருவறை பூட்டப்பட்ட நிலையில்

வற்றாப்பளையில் அமைந்துள்ள முருகன் ஆலயத்தில் திங்கட்கிழமை இரவு கூரையை பிரித்து உள் இறங்கிய திருடர்கள் மூலஸ்தானக் கதவை திறக்க முடியாததால் அதனை தீயிட்டுக் கொளுத்தியுள்ளார்கள். அதன் பின்னரும் கதவைத் திறக்க முடியாததால் மண்டபத்திலிருந்த உண்டியலை உடைத்ததுடன் அம்பிளிபயர் போன்ற சில பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர். பொலிஸார் ஆலயத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். வவுனியாவிலிருந்து கைரேகை நிபுணர்களை வரவழைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஒ)

## வலி.வடக்கில் மீளக்குடியமரவுள்ளோர் விவரங்களில் தொடர்ந்தும் முரண்பாடு

*உடனடியாக அதனைத் திருத்தியமைக்கத் தீர்மானம்*

யாழ்ப்பாணம்,மார்ச்.05
வலி.வடக்கில் மீளக்குடியமர்த்தப்படவேண்டியவர்கள் தொடர்பான புள்ளி விவரங்களுக்கு இடையில் தொடர்ந்தும் முரண்பாடுகள் காணப்படுவதால் அவற்றை உடனடியாகத் திருத்தியமைப்பது என்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் மீள்குடியமர்வு நிலைமைகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இதில் மீள்குடியேற்ற அமைச்சின் மேலதிக செயலாளர் மற்றும் அகதிகளுக்கான ஐ.நா தூதரகப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அத்துடன் யாழ்.மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர்களும் இதில் பங்கெடுத்திருந்தனர்.

வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர்பில் . தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் ஒரு புள்ளி விவரமும், மாவட்ட செயலகத்தில் வேறொரு புள்ளி விவரமும் காணப்படுகின்றது. இவ்வாறு வேறுபாடுகள் காணப்படுவதற்கான காரணம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

**வலி.வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள நலன்புரி நிலையங்களின் புனரமைப்புத் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.**

இறுதியில் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்வதற்குப் பதிவு செய்துள்ள மக்கள், அவர்கள் எந்தப் பிரதேச செயலாளர் பிரிவில் வசித்துக் கொண்டிருப்பதாகப் பதிவு செய்தார்களோ, அந்தப் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குத் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் பதிவுகளை . அனுப்பி உறுதி செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் வலி.வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள நலன்புரி நிலையங்களின் புனரமைப்புத் தொடர்பிலும் கலந்துரையா டப்பட்டுள்ளது. (த-5)

## சட்ட விரோதமாக மணல் ஏற்றிய 14 பேருக்கு மறியல்

தென்மராட்சி,மார்ச் 5
கெற்பேலிப் பகுதியில் சட்ட விரோதமாக அரச காணியில் மணல் ஏற்றிய 14 பேரையும் 14 தினங்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றால் நேற்று உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலிப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் செல்லப்படுவதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமலசேன சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தார். அதனைஅடுத்து சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வன்னியாராய்ச்சியின் பணிப்பின் பேரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அங்கு சென்ற பொலிஸார் மண் அகழ்வில் ஈடுபட்டதாக ஐந்து உழவு இயந்திரங்களைக் கைப்பற்றியதுடன் 14 பேரையும் கைது செய்தனர்.

குறித்த 14 பேரையும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தியபோது அனைவரையும் விளக்க மறியலில் வைக்கு மாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (வ-9)

## தமிழ் சுதேச வைத்தியர் நியமனத்தில் இன, மொழி ரீதியான புறக்கணிப்பு

*நடவடிக்கை எடுக்கக் கோருகிறார் வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர்*

வலி.தென்மேற்கு, மார்ச் 5
தமிழ் பேசும் சுதேச வைத்தியர்களின் நியமனத்தின் போது வடக்கு, கிழக்கு பகுதிகளில் மட்டும் கடமையாற்ற முடியும் என்று குறிப்பிடப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. இது இன ரீதியாகவும் மொழி ரீதியாகவும் எம்மைப் புறக்கணிக்கும் செயல் என்பதற்கும் மேலாக இதனை ஓர் அடிப்படை உரிமை மீறல் செயலாகவே கருதுகிறேன். இது தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் சுதேச வைத்திய அமைச்சரைக் கோரியுள்ளார்.

"புதிதாக வழங்கப்பட்ட நியமனத்தின் போது தமிழ் பேசும் சுதேச வைத்தியர்கள் பாதிக்கப்பட்டமை" என்ற தலைப்பில் தவிசாளர் சுதேச வைத்திய அமைச்சர் சலிந்த திசநாயக்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

புதிதாக நியமிக்கப்பட்ட தமிழ் பேசும் சுதேச வைத்தியர்களுக்கு அண்மையில் நியமனம் வழங்கப்பட்டது. இந்த நியமனம் தொடர்பில் தமிழ் பேசும் சுதேச வைத்தியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறியத் தரப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் மேற்படி நியமனத்துக்கான விண்ணப்பம் கோரப்படும்போது தீவு முழுவதற்குமான சேவை என்று கோரப்பட்டிருந்தது. எனினும் அண்மையில் தமிழ் பேசும் சுதேச வைத்தியர்களுக்கு நியமனம் வழங்கும் போது வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் மட்டுமே கடமையாற்ற முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் குறித்த வைத்தியர்களுக்கான நியமனம் அண்மையில் ஆயுள் வேத ஆணையாளரால் வழங்கப்பட்டது. இதேவேளை சுதேச மருத்துவத்துறை பட்டதாரிகளை மொழி ரீதியாக நியமனம் செய்யும் நடைமுறையை ரத்துச் செய்யும் (திருத்தப்பட்ட) வர்த்தமானி அறிவித்தல் 2007 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையிலும் கூட மொழி ரீதியாக வடக்கு, கிழக்கு பகுதியில் மட்டுமே கடமையாற்ற முடியும் என்று தமிழ் பேசும் சுதேச வைத்தியர்களுக்கு குறிப்பிடப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். இவ்வாறு கூறப்பட்டமையானது இந்த நாட்டில் மொழி ரீதியாகவும், இன ரீதியாகவும் எம்மைப் புறக்கணிக்கும் செயல் என்பதற்கு மேலாக ஓர் அடிப்படை உரிமை மீறலாகவே கருதுகின்றேன்.

இந்த விடயம் தொடர்பில் தாங்கள் உரிய நடவடிக்கையை மேற்கொள்வீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

இந்த நிலை தொடருமானால் நாட்டில் இனரீதியான புறக்கணிப்பு தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு வழங்கும் சந்தர்ப்பத்திலும் உள்ளது என்பது தெளிவாக்கப்படும்.

இந்த நிலையில் தொடர்ச்சியாக எதிர்காலத்திலும் மொழி அடிப்படையில் சுதேச மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள். ஆனால் குறைந்த அளவான தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மட்டுமே வாய்ப்பு உருவாகும். இதனால் எதிர்காலத்தில் இவ்வாறாக மருத்துவத்துறையில் கற்றவர்கள் கூட வேலை வாய்ப்பற்ற நிலையில் இருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மேற்படி விடயம் தொடர்பில் தாங்கள் உரிய நடவடிக்கை எடுப்பீர்கள் என்று கருதுகின்றேன் - என்றுள்ளது. (வ-115)

**வைத்தியர்களுக்கான நியமனம் அண்மையில் ஆயுள் வேத ஆணையாளரால் வழங்கப்பட்டது. இதேவேளை சுதேச மருத்துவத் துறை பட்டதாரிகளை மொழி ரீதியாக நியமனம் செய்யும் நடை முறையை ரத்து செய்யும் (திருத் தப்பட்ட) வர்த்தமானி அறிவித்தல் 2007 ஆம் ஆண்டில் வெளி யிடப்பட்டுள்ளது.**

# புலிகளே புதைத்தனராம்

## இராணுவ தாக்குதலில் கொல்லப்படவில்லையென மறுக்கிறது பொலிஸ்

யாழ்ப்பாணம்,மார்ச் 05
முல்லைத்தீவில் கடந்த வாரம் மீட்கப்பட்ட 9 எலும்புக் கூடுகளையும் தமிழீழ விடுதலைப் புலிகளே புதைத்துள்ளார்கள் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். அவை இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுடையவை என்னும் அவற்றை தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினரே புதைத்ததாகவும் சாட்சிகள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மூங்கிலாறு 200 வீட்டுத் திட்டப் பகுதியில், கடந்த 27 ஆம் திகதி வீட்டு வளவை, உழவு இயந்திரத்தைப் பயன்படுத்தி உழுத போது இரண்டு மனித எலும்புக்கூடுகள் பாய் ஒன்றில் சுற்றிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து மறு நாள் 28 ஆம் திகதி நீதிவான் முன்னிலையில் அந்த இடத்தைத் தோண்டியபோது 9 மனித எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டிருந்தன. 2009 ஆம் ஆண்டு இறுதிக் கட்டப் போரின் போது குறித்த பகுதியில் இடம்பெற்ற இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்ட 9 பேரின் உடலை அந்த இடத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் புதைத்ததாகவும், மேலும் எஞ்சிய சிலரது உடலை குறித்த இடத்திற்கு அருகிலுள்ள கிணற்றில் போட்டு மூடியதாக, புதை குழியைத் தோண்டு போதும், அங்கு வந்திருந்த சாட்சி ஒருவர் வாக்கு மூலம் வழங்கியிருந்தார். இந்தச் சாட்சியம் அரச அலுவலர்களால் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இதனை மறுத்து கருத்து வெளியிட்டுள்ள பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண, கோபால்கோஸ்வரன் என்ற சாட்சி, 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும் குறித்த சடலங்களை தமிழீழ விடுதலைப் புலிகளே டிரக்ரர் ஒன்றில் கொண்டுவந்து புதைத்ததாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் சடலங்களைக் கொண்டு வந்து புதைத்தவர் பளையில் உயிருடன் உள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் குறித்த நபரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-5)

# இராணுவம் வெளியேறினால் மட்டுமே வட பகுதியை அபிவிருத்தி செய்ய முடியும்

## வட மாகாண விவசாய அமைச்சர் கருத்து

யாழ்ப்பாணம்,மார்ச் 5
மக்களின் பொருளாதாரத்தை மழுங்கடிக்கும் வகையில் காணிகளை அபகரிக்கும் இராணுவம் இங்கிருந்து வெளியேற்றப்பட வேண்டும்.
இராணுவம் வெளியேறினால் மட்டுமே மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதுடன் அவர்களின் பாது காப்பையும் உறுதிப்படுத்த முடியும். இவ்வாறு தெரிவித்தார் வட மாகாண விவசாயஅமைச்சர் பொ. ஐங்கரநேசன்.
முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் விவசாய விழா நேற்று ஒட்டுசுட்டான் தட்டயாமலைப்பிரதேசத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கு மாகாண சபையால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்றிட்டங்களுக்கு நிர்வாக ரீதியாகப் பல்வேறு தடங்கல்கள் ஏற்படுத்தப்படுகின்றன .
இவ்வாறானதொரு நிலையிலேயே வட மாகண சபையின் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.
முன்னர் முத்தையன்கட்டு, விவசாயத்துக்கு பெயர் பெற்ற அதிகளவு உற்பத்தியை தேடித் தந்த ஒரு கிராமமாக இருந்தது. இப்போது அந்த நிலைமை மாற்றப்பட்டு விட்டது.
பொருளாதார ரீதியாக உயர்ந்திருந்த எமது சமூகம் தற்போது கடனாளி சமூகமாக மாற் றப்பட்டுள்ளது.
நான் குறிப்பிடுவது முத்தையன்கட்டை மட்டும் அல்ல. வட மாகாணத்திலுள்ள விவசாயிகள் அனைவரினதும் நெருக்கடிகள் பற்றி எனக்கு நன்கு தெரியும்.
நாங்கள் மாகாணசபையை பொறுப்பேற்றிருக்கிறோம். ஆனால் நாங்கள் சில நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிர்வாக ரீதியாக ஏராளமான தடங்கல்கள் வந்துள்ளன.
இதனால் மக்களுக்கு சேவையை வழங்குவதில் நெருக்கடியாக உள்ளது. இவை தவிர இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளதை விடுவிப்பதிலும் நெருக்கடிகள் தொடர்கின்றன. இராணுவம் வட பகுதியை விட்டு வெளியேறுவதன் ஊடாகவே எல்லா பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும் - என்றார். (ஐ-14)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி சா.பவளகுமாரன்
அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி தங்கம்மா சின்னத்தம்பி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கைதடி குருசாமி வித்தியாலயம். (45342) (12.3.6)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா சிவசாமி



யாழ்.கைதடியை பிறப்பிடமாகவும், தும்பளை பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட செல்லம்மா சிவசாமி நேற்று (04.03.2014) செவ்வாய் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சிவசாமியின் அன்பு மனைவியும் கந்தையா - சின்னாச்சி தம்பதியரின் மகளும் சுந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் கமலா தேவி, காலஞ்சென்ற அம்பிகாவதி மற்றும் சரஸ்வதி, பாலகிருஷ்ணன் (சட்டத்தரணி), பஞ்சலிங்கம் (ஓய்வுபெற்ற நிர்வாக கிராம உத்தியோகத்தர் பிரதேச செயலகம் வேலணை), மங்களேஸ்வரி (விடுதி சகோதரி மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி), சற்குணராசா (ஜேர்மனி), அவர்களின் அன்பு தாயாரும், காலஞ்சென்ற குமாரவேலு மற்றும் சண்முகவடிவேல் (ஜேர்மனி), வனிதாமணி, கமலாம்பாள்(உதவி கல்விப் பணிப்பாளர் ஆரம்பக்கல்வி வடமராட்சி வலயம்), சிவஞானமதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் (05.03.2014) புதன்கிழமையன்று பி.ப 2 மணிக்கு நடைபெற்று கோரியடி இந்து மயானத்தில் தகனக்கிரியை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெளிச்சவீட்டு ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.
தகவல் : க. சி. பாலகிருஷ்ணன் (மகன்) 021 2056090

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் முத்துக்கிருஷ்ணன் (J.P)

(ஓய்வு பெற்ற P.H.I. பருத்தித்துறை - நகரசபை வடமராட்சி வடக்கு இணக்கசபை விசாரணைக்குழு உறுப்பினர்)

தும்பளை மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் முத்துக்கிருஷ்ணன் (04.03.2014) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - நாகம்மா தம்பதியரின் அன்பு புதல்வனும் காலஞ்சென்ற சிவபாக்கியின் அன்புக்கணவரும் பிரபாகர் (ஆசிரியர் யா/கட்டைவேலியார்க்கரு விநாயகர் வித்தியாலயம்), காண்டீபன் (ஆசிரியர் யா / ஆழியவளை சீ.சீ.த.க. பாடசாலை), திருநிறைச்செல்வி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பருத்தித்துறை பிரதேச செயலகம்), குணநேசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இன்பமதியின் (காசாளர் சிறிலங்கா ரெலிகொம் நெல்லியடி) பாசமிகு மாமனும் மகிழினி, பிரநிகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (05.03.2014) புதன்கிழமை மு.ப. 11.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக பி.ப. 1.00 மணியளவில் தும்பளை கோரியடி இந்து மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுவளை தும்பளை, மேற்கு. தகவல்
077 5027443 பிள்ளைகள்

# தமிழக மீனவர்களின் 9 படகுகள் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 05
எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களிடமிருந்து கடந்த வருடம் பறிமுதல் செய்யப்பட்டிருந்த 9 படகுகளை உரியவர்களிடமே ஒப்படைக்க ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்த தமிழக மீனவர்களும் அவர்களின் 5 படகுகளும் காரைநகர் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டிருந்தன. அதேபோன்று கடந்த ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறிய தமிழக மீனவர்களின் 4 படகுகள் நெடுந்தீவுக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டிருந்தன.
குறித்த இரு சந்தர்ப்பங்களிலும் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். ஆனால் அவர்களின் 9 படகுகளும் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் ஊர்காவற்றுறை நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
இதன் போது சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து கிடைக்கப் பெற்ற அறிவுறுத்தலுக்கு அமைய, 9 படகுகளையும் நீதிமன்றம் விடுவித்தது. இவற்றை காங்கேசன்துறைக் கடற்படையினர், இந்தியக்
கடற்படையினரிடம் இன்று ஒப்படைப்பார்கள்.
இந்தியக் கடற்படையினரிடம் படகு உரிமையாளர்கள் தமது படகுகளை மீட்டுக் கொள்ள முடியும். அவ்வாறு உரியவர்கள் தமது படகுகளைப் பெற்றுக் கொண்டதை, யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகம் உறுதி செய்ய வேண்டும் என்று நீதிமன்று தெரிவித்துள்ளது. (த-5-17)

# லொறியில் ஷெல் குழாய்கள் கொண்டு சென்ற 2 பேர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 05
யாழ்ப்பாணத்திலிருந்து லொறியில் எடுத்துச் செல்லப்பட்ட இரும்புகளுடன் செல் குழாய்கள் மற்றும் துண்டுகளாக்கப்பட்ட தண்டவாளங்கள் என்பவற்றை மீட்டதோடு அவற்றைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் இரண்டு பேரைக் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.
நல்லூர் கந்தசுவாமி கோயிலை அண்மித்துப் பயணித்துக் கொண்டிருந்தபோது லொறியை மடக்கிய பொலிஸார், அதனை யாழ்.பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்று தடுத்து வைத்துள்ளனர்.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அதனைக் கைப்பற்றியதாகப் பொலிஸார் கூறினர். ஷெல் குழாய்கள் மற்றும் தண்டவாளங்கள் இவர்களுக்கு எங்கிருந்து கிடைத்தன என்பது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்டவர்கள் மானிப்பாய் மற்றும் நீர்வேலியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை இராமநாதன்

(மூத்தப்பா ராசு)



வரணி இயற்றாலை வரணியைப் பிறப்பிடமாகவும், ஒக்லாந்து நியூசிலாந்தை வதிவிடமாகவும் கொண்ட திரு. கணபதிப்பிள்ளை இராமநாதன் (02.03.2014) அன்று இறைபதமடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் வரணி இயற்றாலையில் உள்ள சகோதரரான காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் (மூத்தப்பா மணியம்) அவர்களின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (06.02.2014) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் குடமியன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர் (077 1606158)

## மரண அறிவித்தல்

### திருமதி பவளம் நடராசா



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளம் நடராசா நேற்று (04.03.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், நாகமுத்து -செல்லாச்சி தம்பதிய ரின் அன்பு மருமகளும், நடராசாவின் அன்பு மனைவியும், சரஸ்வதி, விமலா தேவி (மலர்), மகேந்திரராசா, பாலசுந்தரம் (சின்ராசு), தேவராசலிங்கம் (சின்னக்குஞ்சு), சிவயோகசிந்தாமணி (மணி), தவராசலிங்கம் (வவா), தனபாலசிங்கம் (கோபால்), கௌசலா தேவி (றோசா), சிவலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயும், தேவராசா, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் வசந்தாதேவி, ஜெயராணி (கிளி), விஜயலக்ஷ்மி (விசயா), காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் விமலாதேவி (செல்லம்), விஜயகுமாரி (தேவி), யோகநாதன் (சின்ரா), ஜெயசோதி (சோதி) ஆகியோரின் அன்பு மாமியும், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளின் பேர்த்தியும், பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2014) புதன்கிழமை நண் பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

தகவல் :
புதுவீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகமணி தில்லையம்பலம்



ஏழாலை மயிலங்காட்டைப் பிறப்பிடமாகவும், 37, மலர் மகள் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் கனகமணி நேற்று (04.03.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா-தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமணி - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் (ஓய்வு பெற்ற மின்சார சபை ஊழியர்) அன்பு மனைவியும், தயாளினி (பிரான்ஸ்), விமலினி (லண்டன்), யசிந்தினி ஆகியோரின் அன்புத்தாயும், சண்முகராசா, சந்திரன், சிவநேசன் (சிவா) ஆகியோரின் அன்பு மாமியும், கிருஷ்ணர், காலஞ்சென்றவர்களான தவமணி, சின்னத்துரை மற்றும் நவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற சண்முகம் மற்றும் தவமணி, மயில்வாகனம், சரஸ்வதி, இந்திராதேவி மற்றும் காலஞ்சென்ற நடராசா, பாக்கியம், மகாலிங்கம், இராசலிங்கம், செல்வமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் யதுனன், பிரதீப், பிரசாந், பகீரன், மதீசன், மயூன், பிரவீனா, பரனியா, அபிசானி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.03.2014) புதன்கிழமை பி.ப. 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண் பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : சிவநேசன் (சிவா-மருமகன்)

## யானை விரட்ட 40 பேருக்கு வெடிகள் விநியோகம்

புதுக்குடியிருப்பு, மார்ச் 5
மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் யானைகளின் அட்டகாசத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற முன்வந்துள்ள வன ஜீவ ராசிகள் திணைக்களம் ஐந்து வெடிகள் வீதம் 40 பேருக்கு யானைகளை விரட்டும் வெடிகளை வழங்கியுள்ளது.
மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் வன்னிவிளாங்குளம் கிராமத்துக்குள் இரவு நேரங்களில் செல்லும் யானைகள் அங்குள்ள பயன்தரும் மரங்களை அழித்து அட்டகாசம் செய்கின்றன. இதனால் பீதியடைந்த மக்கள் யானைகளிடம் இருந்து தங்களைக் காப்பாற்றுமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியிருந்தனர்.
அதையடுத்து மக்களைக் காப்பாற்ற முன்வந்துள்ள ஜீவ ராசிகள் திணைக்களம் வன்னி விளாங்குள அ.த.க. பாடசாலையில் வைத்து ஐந்து வெடிகள் வீதம் 40 பேருக்கு யானைகளை விரட்டும் வெடிகளை வழங்கியுள்ளது. (ஓ-115)

# தற்காலிக ரயில் கடவையை நிரந்தரமாக்குமாறு போராட்டம்

தென்மராட்சி, மார்ச் 5
தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள ரயில் கடவையை நிரந்தரப் பாதையாக அமைத்துத் தருமாறு மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு அருகில் உள்ள சப்பச்சி மாவடிப் பிள்ளையார் ஆலய வீதியைப் பயன்படுத்தும் நூற்றுக்கணக்கான மக்கள் குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.
ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் இது குறித்து தெரிவிக்கையில்;
"சாவகச்சேரி ஏ-9 வீதியிலிருந்து 7 கிராம அலுவலர் பிரிவுகளை ஊடறுத்துச் செல்லும் சுமார் 4 கிலோ மீற்றர் நீளமான சப்பச்சி மாவடிப் பிள்ளையார் கோயில் வீதி நீண்டகாலமாக மக்கள் பயன்பாட்டில் உள்ளது.


ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பிரதேச மக்கள்

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை, கல்லூரிகள், வங்கிகள், பிரதேச செயலகம், நகரசபை, வர்த்தக நிலையங்கள் சந்தை போன்றவற்றுக்குச் செல்வோர் குறித்த கோயில் வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.
முன்னர் ரயில் சேவை காலத்தில் நிரந்தரக் கடவையாக இருந்ததாகவும் தற்போது புதிதாக ரயில் பாதை அமைக்கும் பணிகளின் போது கடவை அமைக்கப்படாததால் தாங்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதன் பின்னர் தற்காலிகமாக கடவை அமைக்கப்பட்டது.
இதனை முன்னரைப் போன்று நிரந்தரக் கடவை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்தனர்.
இதேவேளை பளையில் நேற்று ஆரம்பிக்கப்படவிருந்த ரயில் சேவை ஆரம்ப நிகழ்வுக்குக் கலந்து கொள்ளச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.
மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த அமைச்சர் சாவகச்சேரி நகரசபையில் வீதி அமைப்பது தொடர்பான கடிதத்தைப் பெற்றுக் கொண்டு பளைக்கு வருமாறும் அங்கு வரும் உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ரயில் கடவை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். (வ-9)

## மாணவர் எவருமின்றி இயங்கும் சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்

யாழ்ப்பாணம், மார்ச் 5
தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த சரசாலை சரஸ்வதி வித்தியாலயம் மாணவர்கள் எவரும் இல்லாத நிலையில் இயங்கி வருகிறது. அதிபர், ஆசிரியர்கள் வந்து போகிறார்கள். மாணவர்கள் தான் எவரும் இல்லை.
இது குறித்து ஏற்கனவே கல்வி பயின்ற பிள்ளைகளின் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.
"அங்கு கடமையாற்றும் பெண் அதிபர், ஆசிரியைகளுக்கிடையில் அடிக்கடி சச்சரவு ஏற்படுகிறது. அவர்கள் மோசமான கடும் சொற்களைப் பயன்படுத்தி வாக்குவாதங்களில் ஈடுபடுகின்றனர். இதனால் பிள்ளைகளின் மனோநிலையும் கல்விச் செயற்பாடும் பாதிக்கப்பட்டு வந்ததால் அங்கு கல்வி கற்ற எமது பிள்ளைகளை வேறு பாடசாலைகளில் இணைத்து விட்டோம்" என்றனர் பெற்றோர்.
மாணவர்கள் எவரும் இல்லாத நிலையில் இயங்குவதால் பாடசாலை மூடப்படும் அபாயம் உள்ளது என்றும் பெற்றோர் தெரிவித்தனர்.
கடந்த வருடம் ஊட்டப் பாடசாலைகள் திட்டத்தில் இந்தப் பாடசாலை 5 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-9)


நல்லூர் செம்மணிப் பகுதியில் வீதியோரத்தில் கட்டட இடிபாடுகளின் கழிவுகள் கொட்டப்பட்ட இடத்தில் சிறுவன் ஒருவன் கழிவு இரும்புகளை சிமெந்துக் கட்டடத் தூண்களில் இருந்து அகற்றி விற்பனைக்காக எடுத்துச் செல்வதற்காக கொளுத்தும் வெயிலில் தூண்களை உடைக்கும் காட்சி. (ஓ-288)

## வீதியை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, மார்ச் 5
கைதடி-நுணாவில் ஏ-9 வீதியிலிருந்து மட்டுவில் தெற்கு ஊடாக மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்குச் செல்லும் வீதி புனரமைப்புக்கென 20 லட்சம் ரூபாவை வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர் ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
மிக மோசமாகச் சேதப்படுத்தப்பட்டுள்ள நிலையில் காணப்படும் 4 கிலோ மீற்றர் நீளமான குறித்த வீதியில் முதற்கட்டமாக 475 மீற்றர் தூரம் வரை வீதி அமைக்க ஒப்புதல் வழங்கியதை அடுத்து ஆரம்பக் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
ஏ-9 வீதியிலிருந்து பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு இவ் வீதியால் செல்வதற்கு குறுகிய தூரம் என்பதால் வருடா வருடம் குறித்த வீதியைப் புனரமைக்குமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் இந்த வருடம் 475 மீற்றர் தூரம் மட்டுமே புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## பிரதேச செயலகத்துக்கு வந்தவரின் சைக்கிள் அபகரிப்பு

தென்மராட்சி, மார்ச் 5
தென்மராட்சி பிரதேச செயலகத்தில் விடப்பட்ட பெண்கள் சைக்கிள் திருட்டுப்போயுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றது.
பிரதேச செயலகத்தில் இயங்கும் சமுர்த்திப் பிரிவுக்கு அலுவலாக வந்த ஒருவர், பிரதேச செயலக வளாகத்தினுள் சைக்கிளை விட்டுப் பூட்டிவிட்டு மேல் மாடிக்குச் சென்றார். அங்கிருந்து சில நிமிடங்களில் திரும்பி வந்தார். விட்டுச் சென்ற இடத்தில் சைக்கிளைக் காணவில்லை. அதிர்ந்து போனார் அவர். இது குறித்து அங்குள்ள பொறுப்பு வாய்ந்த அதிகாரியிடம் அவர் முறையிட்டார். அதற்கு அவர்; பகல் காவலாளி அலுவலகத்தில் இல்லாததால் உங்களது பொருள்களுக்கு நீங்களே பொறுப்பாக இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.
பல பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேச செயலகத்தின் தேவைகளுக்கு வரும் பொது மக்கள் பிரதேச செயலக வளாகத்தில் தமது சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் போன்றவற்றை தரிப்பிடத்தில் விட்டுச் செல்கின்றனர். இதேவேளை பிரதேச செயலகத்தில் ஏற்கனவே செயலக அலுவலர்கள் உட்பட பொது மக்களால் விடப்பட்ட சைக்கிள்கள் பல தடவைகள் திருட்டுப் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## கைதடியில் நேற்று பாதீனிய அழிப்பில் ஈடுபட்ட படையினர்

தென்மராட்சி,மார்ச் 5
18 ஆவது படைப் பிரிவினர் நேற்று கைதடி பனை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் கைதடி கோப்பாய் பாலம் ஆகிய பகுதிகளில் பாதீனியம் அழிப்புப் பணியில் ஈடுபட்டனர்.
18 ஆவது படை அணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் அல்விஸ் தலைமையில் 200 இற்கு மேற்பட்ட படையினரும் கைதடிப் பகுதி இளைஞர்களும் இணைந்து பாதீனிய அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
துப்புரவு செய்யப்பட்ட இடங்களில் பாதீனிய அழிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் மக்களை அந்த இடங்களில் நடமாடவேண்டாம் என்று அறிவிப்புப் பலகை போடப்பட்டுள்ளது. (வ-9-131)

## சிகரெட் விற்பனையைத் தடுத்ததாக சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு

### உரிய விளக்கம் தந்தார் சுகாதாரப் பரிசோதகர்

தென்மராட்சி, மார்ச் 5
வெள்ளிக்கிழமைகளில் சிகரெட் விற்பனை செய்வதில்லை என்பது சாவகச்சேரி வர்த்தகர்கள் எடுத்த முடிவு.
கடந்த சில வாரங்களாக இந்த நடைமுறை இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.
இவ்வாறான நிலையில், சிகரெட் விற்பனையைத் தடுத்து வருவதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
சிகரெட் விற்பனையைத் தடுத்து வருகிறார் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. சிகரெட் விற்பனை முகவரே இந்த முறைப்பாட்டைச் செய்திருந்தார்.
அந்த முறைப்பாட்டில்-
வர்த்தக நிலையங்களில் சிகரெட் விற்பனைக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் 'ஸ்ரிக்கர்'கள் ஒட்டி தமது வியாபாரத்தைத் தடுத்து வருவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.
இது தொடர்பான விசாரணை நேற்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.
அவ்வேளை இந்தக் குற்றச்சாட்டை முற்றாக மறுத்தார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்.
வெள்ளிக்கிழமைகளில் சிகரெட் விற்பனை செய்வதை நிறுத்துவது குறித்து வர்த்தகர்களே முடிவு செய்தனர்.
அதனைத் தடுக்கும் அதிகாரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு இல்லை என்று கூறினார். புகைப்பதனால் மனித உயிர்கள் அநியாயமாக காவு கொள்ளப்படுகின்றன என்பன தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் சுகாதாரத் திணைக்களத்தினால் எமக்கு வழங்கப்பட்டிருந்தன. அவற்றை வர்த்தக நிலையங்களில் ஒட்ட வேண்டியது எமது முக்கிய கடமை என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் விசாரணையின் போது குறிப்பிட்டார்.
அதேவேளை இரு வாரங்களுக்கு முன்னர் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் அனுமதியின்றி நடமாடும் சிகரெட் விற்பனை மேற்கொண்ட ஓட்டோவை வர்த்தகர்களின் வேண்டுகோளுக்கிணங்க நகரசபை பொதுச் சுகாதார பரிசோதகர் பி.தளிர்ராஜ் கைப்பற்றியிருந்தார். பின்னர் நகரசபைத் தலைவரிடம் பாரப்படுத்தினார். அங்கு வந்த யாழ். மாவட்ட பிரதிநிதி தலைவருடன் கலந்துரையாடி ஓட்டோவையும் அதில் வந்தவர்களையும் அழைத்துச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-9)

# கூட்டணி குறித்து விரைவில் அறிவிக்கப்படும்

## தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞானதேசிகன்

சென்னை, மார்ச் 5

நாடாளுமன்றத் தேர்தல் கூட்டணி தொடர்பாக காங்கிரஸ் உயர்மட்டத் தலைவர்கள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

விரைவில் கூட்டணி குறித்து அறிவிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞானதேசிகன்.

சென்னையில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்தும் நோக்கில் பாதயாத்திரைகள் நடத்தப்படவுள்ளன. அந்த நடைப் பயணத்தில் ராகுல்காந்தியும் கலந்துகொள்ளவுள்ளார்.

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் 7 பேர் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற தமிழக அரசின் உத்தரவு மக்களின் ஆதரவைப் பெறவில்லை. தமிழக அரசின் தேர்தலுக்கான யுக்தியே அந்த அறிவிப்பு" - என்று தெரிவித்துள்ளார். (ற)

# பா.ஜ. கூட்டணியில் தி.மு.க. இல்லை

## பா.ஜ.க. தேசியத் தலைவர் ராஜ்நாத்சிங் திட்டவட்டம்

சென்னை, மார்ச் 5

பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு.க. இடம்பெறுவது குறித்துப் பேச்சுக்கள் எதுவும் நடைபெறவில்லை. தமிழகத்தில் கூட்டணி குறித்து ஒருவாரத்தில் முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.கவின் தேசியத் தலைவர் ராஜ்நாத் சிங்.

இதுதொடர்பாக மேலும் அவர் கூறுகையில்,

"குஜராத் கலவரம் தொடர்பாக பாரதிய ஜனதா கட்சி எந்த தவறையும் இதுவரை இழைத்ததாக நான் கருதவில்லை. ஆனால் காங்கிரஸ் கட்சியும், அரசும் நாட்டின் சமூக ஒற்றுமையை சீர்குலைக்கின்றன. அவர்கள்தான் மன்னிப்பு கேட்க வேண்டும். நாங்கள் யாராவது தவறு இழைத்திருக்கிறோம் எனில் மன்னிப்புக் கோருகிறோம்.

தமிழ்நாட்டில் கண்டிப்பாக பாரதிய ஜனதா தலைமையில் ஒரு கூட்டணி விரைவில் அமையும். யாருடன் கூட்டணி என்பதை இப்போது கூற முடியாது. ஆனால் கூட்டணி உண்டு. தி.மு.க.வுடன் கூட்டணி தொடர்பாக இதுவரை பேச்சுக்கள் எதுவும் இடம்பெறவில்லை. பாரதிய ஜனதாவின் பிரதமர் வேட்பாளர் மோடியை தி.மு.க. தலைவர் கருணாநிதி புகழ்ந்து பேசியிருக்கிறார். அதற்காக என் நன்றியை அவருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் எந்தக் கூட்டணி அமைந்தாலும் அதனை மிகவும் விரைவாக முடிக்க வேண்டும் என்று தமிழக பா.ஜ.க. தலைவர்களிடம் கூறியுள்ளேன். தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்பு ஏதாவது ஒரு கூட்டணி கண்டிப்பாக அமையும். ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தொடர்புடையவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பது பற்றிய கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். அதனால் சில கேள்விகளைத் தவிர்க்கலாம் அல்லவா?" என்று தெரிவித்துள்ளார். (ற)

## தி.மு.கவின் கூட்டணியில் புதியவர்களுக்கு இடமில்லை

சென்னை, மார்ச் 5

தி.மு.கவின் தேர்தல் கூட்டணியில் புதிய கட்சிகளுக்கு இடம் இருப்பதாகத் தெரியவில்லை என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் தலைவர் மு.கருணாநிதி.

இதுகுறித்து அவர் கூறுகையில்,

"தி.மு.க. கூட்டணியில் உள்ள கட்சிகளுடனான தொகுதிப் பங்கீடு எதிர்வரும் இரண்டு நாள்களில் முடிவடையும். நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர்கள் பட்டியல் சில நாள்களில் வெளியிடப்படவுள்ளது. அதேபோன்று தி.மு.க. தேர்தல் அறிக்கையும் வெளியிடப்படவுள்ளது. இந்தநிலையில் தி.மு.க. கூட்டணியில் புதிய கட்சிகளுக்கு இடம் இருப்பதாகத் தெரியவில்லை"- என்று தெரிவித்துள்ளார். (ற)



பிம்ஸ் டெக் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மியன்மார் சென்றுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நை பை தா விமான நிலையத்தில் கோலாகலமாக வரவேற்கப்பட்டார். (ற)

# காங்கிரஸ் கட்சியினரை தூக்கியெறிய வேண்டும்

## தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஆவேசம்

காஞ்சிபுரம், மார்ச் 5

காங்கிரஸ் தலைமையிலான அரசு கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவைச் சின்னாபின்னமாக்கி விட்டது. தமிழர்களுக்கு விரோதமான காங்கிரஸ் கட்சியினரை மத்திய ஆட்சியில் இருந்து தூக்கி எறிய வேண்டும் என்று ஆவேசமாகத் தெரிவித்துள்ளார் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான அ.தி.மு.கவின் பரப்புரைக் கூட்டங்கள் நேற்றுமுன்தினம் காஞ்சிபுரத்தில் ஆரம்பமாகின. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜெயலலிதா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,



காஞ்சிபுரத்தில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா.

"சுதந்திரத்திற்கு முன்னர் வெள்ளையர்கள் நாட்டைக் கொள்ளையடித்ததைப் போன்று கடந்த 10 ஆண்டுகளாக காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு கொள்ளையடித்து வருகின்றது. எந்தத் தியாகத்தைச் செய்தாவது வெள்ளையர்களிடம் இருந்து நாட்டை காப்பாற்ற வேண்டும் என்று மக்கள் அப்போது எண்ணியதைப் போன்றே, தற்போதும் காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசிடம் இருந்து நாட்டை மீட்க வேண்டும் என்று மக்கள் எண்ணுகின்றனர்.

மத்தியில் உள்ள தமிழர் விரோத அரசு தூக்கி எறியப்பட வேண்டும். எனது இந்த வேண்டுகோளை தமிழக மக்கள் ஏற்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. தமிழகத்தின் கோரிக்கைகள் ஏற்கப்படவும், தமிழர்களின் நலன்கள் பாதுகாக்கப்படவும் அ.தி.மு.க. அங்கம் வகிக்கும் அரசு மத்தியில் அமைய வேண்டும். இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டதற்கு மத்திய காங்கிரஸ் அரசு ஆயுத உதவிகளை வழங்கியிருந்தது. அவ்வாறான காங்கிரஸ் கட்சியினரைத் தூக்கி எறிய வேண்டும்" - என்று தெரிவித்துள்ளார். (ற)

## குற்றமிழைத்த அரசியல்வாதியா? பாதுகாப்பை மீளப் பெறுங்கள்

### நீதிமன்று உத்தரவு

லக்னோ, மார்ச் 5

குற்றப் பின்னணியுள்ள அரசியல்வாதிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பை பத்து நாள்களுக்குள் திரும்பப் பெற வேண்டும் என்று உத்தரப் பிரதேச அரசுக்கு லக்னோ உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. [illegible]டன் உயிருக்கு அச்சுறுத்த[illegible] உள்ளவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது தொடர்பாக வேறு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக லக்னோ உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு விசாரணையின் போது குற்றப் பின்னணி உடைய 288 நபர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக உத்தரப் பிரதேச அரசு எதிர்வரும் பத்து நாள்களுக்குள் பதிலளிக்க வேண்டும் என்றும் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. (ற)

## சினிமாவுக்கு குட்பை சொல்லும் ரம்யா



ரம்யா.

புதுடில்லி, மார்ச் 5

எதிர்காலத்தில் சினிமாவில் நடிக்கப்போவதில்லை என்று அறிவித்துள்ளார் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரான ரம்யா.

நடிகையான ரம்யா அண்மையில் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து அரசியலில் களம் இறங்கினார். இவர் தற்போது மண்டியா தொகுதி காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கின்றார். அவருக்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அதே தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், தீவிர அரசியலில் களம் இறங்க வசதியாக, சினிமாவில் நடிக்க போவதில்லை என்று ரம்யா அறிவித்துள்ளார்.

"அரசியலில் இருந்து கொண்டு சினிமாவில் நடிக்க இயலவில்லை. எனது தொகுதியில் வளர்ச்சிப் பணிகளை செய்து வருகிறேன். இதனால் சினிமாவில் நடிப்பதற்கு கஷ்டமாக உள்ளது. அதற்காக நான் சினிமாவை விட்டு விலகுவதாகவோ அல்லது ஓய்வு பெறுவதாகவோ கருத வேண்டாம். ஒரு வேளை வயதான பிறகு மீண்டும் சினிமாவுக்கு வரலாம்." என்று தெரிவித்துள்ளார். (ற)

# பயங்கரவாதத்துக்கு எதிராக அனைவரும் திரள வேண்டும்

## இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அழைப்பு

நைப்பியிதோ, மார்ச் 5

பயங்கரவாதத்துக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.

மியன்மார் தலைநகர் நைப்பியிதோவில் நடைபெற்றுவரும் பிம்ஸ்டெக் அமைப்பின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பீம்ஸ்டெக் உறுப்பு நாடுகள் பயங்கரவாதத்துக்கு எதிராக ஒன்றிணைந்து போராட கையெழுத்திட்டுள்ளன. தொழில் வளர்ச்சி மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கு ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு நல்கவேண்டும். சர்வதேச நாடுகளில் குற்றச் செயல்களைத் தடுக்க, போதை மருந்து கடத்தல் போன்ற சட்ட விரோத நிகழ்வுகளைத் தடுக்க, பிம்ஸ்டெட் அமைப்பு நாடுகள் கைகோர்த்து நிற்க வேண்டும். இயற்கைப் பேரழிவு பயங்கரவாதம் உட்பட பல பொதுவான சவால்களை கூட்டாக எதிர்கொள்வோம்.

பிம்ஸ்டெக் நாடுகளுக்குள் சுதந்திரமான நடமாட்டத்துக்கு ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். பிம்ஸ் டெக் நாடுகளுக்குள்ளான முதலீடு மற்றும் சேவைகள் நீடிக்கப்பட வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

பிம்ஸ்டெக் அமைப்பில் இந்தியா, பங்களாதேஷ், இலங்கை, தாய்லாந்து, மியன்மார், பூட்டான், நேபாளம் ஆகிய 7 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. (ற)

# தேர்தல் வெற்றி குறித்து நம்பிக்கை வையுங்கள்

## சோனியா காந்தி அறிவுரை

சென்னை, மார்ச் 5

நாடாளுமன்றத் தேர்தலை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி.

நாடாளுமன்றத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள நிலையில் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரிவுபசார நிகழ்வு ஒன்றை சோனியா காந்தி ஏற்பாடு செய்திருந்தார். அதில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள அனைவரும் தயாராக வேண்டும். தேர்தலில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

இந்தநிகழ்வில் அமைச்சர்கள் ப.சிதம்பரம், சுஷில்குமார் ஷிண்டே, ஜி.கே. வாசன், கமல்நாத், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுரேஷ் கல்மாடி, ரேணுகா சௌத்ரி, சஞ்சய் நிருபம், அஜித் ஜோகி உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற)

## சீன விண்கலம் யூட்டுவில் கோளாறு

பீஜிங், மார்ச் 5
சீனாவால் நிலவுக்கு ஏவப்பட்ட விண்வெளி ஓடம் செயலிழந்ததை அடுத்து தற்போது அதனைச் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்றுசீனவிண்வெளிஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.
சந்திரனில் ஆய்வுக்காக சீனா அனுப்பிய யூட்டு என்ற இந்த விண்வெளி ஓடம் அதன் மூன்றாம் கட்ட நிலையில் செயலிழந்துள்ளது. தொழில்நுட்ப ரீதியாக ஏற்பட்டுள்ள கோளாறுகள் தற்போது சீர் செய்யப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகின்றது. இந்தப் பிரச்சினைகள் விரைவாகச் சீர் செய்யப்பட்டுவிடும் என்றும்சீன விண்வெளிமைய விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (ற)

## ரயில் நிலைய தாக்குதல்; மூவர் கைது

பீஜிங், மார்ச் 5
கடந்த சனிக்கிழமை சீனாவின் குன்மிங் ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 33 பேர் உயிரிழந்தனர். 130க்கும் அதிகமானவர்கள் படுகாயங்களுக்கு ஆளாகியுள்ளனர்.
குறித்த தாக்குதலில் ஈடுபட்டவர்களில் நால்வர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
8 பேர் கொண்ட தீவிரவாதக் குழுவே இந்தத் தாக்குதலை மேற்கொண்டது என்று விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ற)

## குட்டி இளவரசர் வெளிநாட்டுக்கு

லண்டன், மார்ச் 5
பிரிட்டன் அரச குடும்பத்தின் குட்டி இளவரசரான ஜோர்ஜ், முதன்முறையாக பெற்றோருடன் வெளிநாட்டுக்கு பயணிக்க உள்ளார். இளவரசர் வில்லியம் மற்றும் அவரது மனைவி கேத் ஆகியோர், மூன்று வார காலம் சுற்றுலா மேற்கொள்ள இருக்கின்றனர். நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவுக்கே இவர்கள் சுற்றுலா செல்லவுள்ளனர். (ற)



உக்ரைனை நோக்கி விரையும் ரஷ்யக் கடற்படைக்குச் சொந்தமான போர்க்கப்பல்கள்

# படை நடவடிக்கை நிறுத்தம்

### *ரஷ்ய ஜனாதிபதி திடீர் உத்தரவு; உக்ரைனில் தொடர்கின்றது பதற்றநிலை*

கீயவ், மார்ச் 5
உக்ரைனின் கிரிமீயா நகரைச் சுற்றி வளைத்திருந்த ரஷ்யப் படைகளை தமது தளங்களுக்குத் திரும்புமாறு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் திடீரென உத்தரவு பிறப்பித்துள்ளார். உக்ரைனுக்கு அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி அவசர பயணம் மேற்கொண்டுள்ள நிலையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
உக்ரைன் தலைநகர் கியவில் உள்ள கிரிமீயா நகரைச் சுற்றி வளைத்த ரஷ்யப் படைகள் அவர்களைத் தடுக்கும் நோக்குடன் முன்னேறிய உக்ரைன் வீரர்களை எச்சரிக்கும் வகையில் வானத்தை நோக்கி பலமுறை துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதனால் கிரிமீயாவில் உச்சபட்ச போர்ப் பதற்றம் நீடித்து வந்தது.
ரஷ்யாவின் இந்த இராணுவ நடவடிக்கைக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன. உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கையை ரஷ்யா மேற்கொள்ளுமானால் விளைவுகள் விபரீதமாக இருக்கும் என்றும் அவை தெரிவித்திருந்தன. இந்தநிலையில் உக்ரைனின் புதிய ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி அங்கு விரைந்துள்ளார். இந்தநிலையில் கிரிமீயா நகரைச் சுற்றி வளைத்திருந்த தமது படைகளைத் தளத்துக்குத் திரும்புமாறு ரஷ்ய ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.
உக்ரைனின் புதிய தலைமையை ஏற்க முடியாது என்றும் உக்ரைனை விட்டு வெளியேறித் தற்போது ரஷ்யாவில் தஞ்சமடைந்துள்ள விக்டர் யனுகோவிச்தான் அதிகாரபூர்வமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி என்றும் ரஷ்ய பிரதமர் மெத்வெதேவ் கருத்துத் தெரிவித்துள்ளார். (ற)

**ரஷ்யாவின் இந்த இராணுவ நடவடிக்கைக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.**

## பில் கேட்ஸ் மீண்டும் முதலிடம்

நியூயோர்க், மார்ச் 5
ஃபோர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் அமெரிக்காவைச் சேர்ந்த மைக்ரோசொப்ட் நிறுவனங்களின் தலைவர் பில் கேட்ஸ் மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார். இந்தப் பட்டியலில் தொழிலதிபர் முகேஷ் அம்பானி உட்பட 56 இந்தியக் கோடீஸ்வரர்கள் இடம் பெற்றுள்ளனர்.
பில்கேட்ஸ் கடந்த 20 ஆண்டுகளில் 15 ஆண்டுகள் உலகின் கோடீஸ்வரர்கள் பட்டியலில் இடம்பிடித்துள்ளார். தற்போது 76 பில்லியன் டாலர் சொத்துகளுடன் அவர் மீண்டும் முதலிடம் பெற்றுள்ளார். (ற)

## ஷூமாக்கர் குணமடைவது சிக்கல்

லண்டன், மார்ச் 5
பனிச்சறுக்கில் படுகாயமடைந்த பிரபல கார் பந்தய வீரரான ஜெர்மனியின் மைக்கேல் ஷூமாக்கர் பூரண குணமடைய வாய்ப்பில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பாக பிரிட்டனிலிருந்து வெளிவரும் டெய்லி மெயில் நாளிதழ், ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழக மருத்துவர் திப்பு அஜீஸ் கூறியுள்ள கருத்தை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.
எனினும் இது தொடர்பாக ஷூமாக்கரின் உறவினர்கள் மற்றும் மருத்துவர்கள் கருத்து எதுவும் கூறவில்லை. (ற)



அமெரிக்காவில் எரிவாயு குழாய் பதிப்பு திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வொஷிங்டனில் உள்ள ஜனாதிபதி வாசஸ்தலமான வெள்ளை மாளிகை முன்பு மாணவர்கள் தரையில் படுத்துப் போராட்டம் நடத்தினர்.


## 3 இலட்சம் குடும்பங்கள் சிரியாவில் இடம்பெயர்வு

டமஸ்கஸ், மார்ச் 5
சிரியாவில் 3 லட்சத்து 50 ஆயிரம் குடும்பங்கள் உள்நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்து முகாம்களில் அகதிகளாக வாழ்கின்றனர் என்று அந்நாட்டின் சமுக விவகாரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
இடம்பெயர்ந்தவர்களுக்கான வேலை மற்றும் அடிப்படைத் தேவைகளை செஞ்சிலுவை அமைப்புடன் இணைந்து அவர்கள் தங்கியுள்ள முகாம்களிலேயே சிரியா அரசு வழங்கி வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அண்மைய புள்ளி விபரங்களின் படி 9.3 மில்லியன் சிரிய மக்கள் அடிப்படைத் தேவைகள் இன்றித் தவிக்கின்றனர் என்று கூறப்பட்டுள்ளது. சுமார் 1.9 மில்லியன் குழந்தைகளின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.
சிரியாவில் 2011ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதி பஷர் அல் அசாத்தின் அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. (ற)

## வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனை

### *தென்கொரியா குற்றச்சாட்டு*

சியோல், மார்ச் 5
கொரிய தீபகற்பத்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் வடகொரியா ஏவுகணைகளை சோதனை செய்துள்ளது என்று தென் கொரிய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.
சுமார் 500 கிலோமீற்றர் தூரம் பறந்து சென்று தாக்கக் கூடிய, இரண்டு ஏவுகணைகள் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.
வடகொரியாவின் இந்த நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவித்துள்ள தென் கொரிய அரசு, வட கொரியா இது போன்ற நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று எச்சரித்துள்ளது.
அதேவேளை, தென்கொரியாவும் அமெரிக்காவும் இணைந்து நடத்திய போர்ப் பயிற்சிக்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே வடகொரியா இது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றது என்று கூறப்படுகின்றது. (ற)



கோப்புப்படம்

# எவரெஸ்டைச் சுத்தப்படுத்த அதிரடித் திட்டம்

### *நடைமுறைப்படுத்துகின்றது நேபாள அரசு*

லண்டன், மார்ச் 5
எவரெஸ்ட் சிகரத்தைச் சுத்தப்படுத்தும் நோக்குடன் அங்கு செல்லும் மலையேறிகளுக்கு நேபாள அரசு அதிரடி உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. மலையிலிருந்து கீழே வரும் ஒவ்வொருவரும் தலா எட்டு கிலோகிராம் எடையுள்ள குப்பைகளைக் கொண்டு வரவேண்டும் என்பதே அந்தத் திட்டம்.
உலகின் உயரமான மலைச் சிகரமான எவரெஸ்டின் மீதும் அதனைச் சூழவும் கழிவுப் பொருள்கள் குவிந்து வருகின்றமை தொடர்பான கவலைகளை அடுத்தே அரசு இந்தப் புதிய விதிமுறைகளை அறிவித்துள்ளது என்று கூறப்படுகின்றது. அதிகளவான வெளிநாட்டு மலையேறிகளை ஈர்ப்பதற்காக எவரெஸ்ட் மற்றும் ஏனைய இமயமலைச் சிகரங்களுக்குச் செல்லும் தனிப்பட்ட மலையேறிகளுக்கான கட்டணத்தை கடந்த மாதம் நேபாள அரசு ரத்துச் செய்திருந்தது.
அதனால் மலையேறிகளின் எண்ணிக்கை அதிகரித்தாலும் மலைகளில் குப்பைகள் குவிந்துவிடும் என்ற கவலைகளும் அதிகரித்தன. மலையுச்சிகளில் குவிந்துள்ள கழிவுப் பொருள்களை அகற்றுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் அவசியம் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் மலையேறிகளின் குழுக்களும் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றன. அதையடுத்தே நேபாள அரசு இந்த அதிரடித் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. (ற)



சிகர உச்சியில் காணப்படும் கழிவுப் பொருள்கள்

# சமய சந்நிதிகளில்

இளவாலை ஆனைவிழுந்தான் விக்ன விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 12 தினங்கள் உற்சவம் இடம்பெறும்.
எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 15 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த் தோற்சவமும் இடம்பெற்று இரவு 7 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும். (ஓ)

♦ ♦ ♦

யாழ்ப்பாணம் - நீர்வையம்பதி வீரபத்திரப் பெருமான் ஆலய அலங்கார உற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இரதோற்சவமும், 17 ஆம் திகதி திங்கட்கிழமை உத்தர நட்சத்திரத்தில் பிற்பகல் 2 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஓ)

♦ ♦ ♦

கோண்டாவில், மார்ச் 5
கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள் திருக்கோயில் பங்குனி உத்தர இலட்சார்ச்சனை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. முதல்நாள் வியாழக்கிழமை கணபதி ஹோமத்துடன் பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகவுள்ளன.
உற்சவ காலத்தில் தினமும் மாலை 4 மணிக்கு அபிஷேக ஆராதனைகளை அடுத்து 5.30 மணிக்கு இலட்சார்ச்சனை நடைபெறும். பத்தாம் நாள் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இலட்சார்ச்சனை ஆரம்பமாகி நிறைவுற்று மாலை 4 மணிக்கு சக்கர பூசையும், 5 மணிக்கு பௌர்ணமி திருவிளக்குப் பூசையையும் அடுத்து வசந்த மண்டபப் பூசை நடைபெற்று அம்பாள் வீதியுலா வருதல் இடம்பெறும்.
17 ஆம் திகதி திங்கட்கிழமை சங்காபிஷேகம் நடைபெறுவதுடன் இரவு 7 மணிக்கு அம்பாள் ஏனைய பரிவார மூர்த்திகள் சகிதம் பூந்தண்டிகையில் தெருவீதி வலம் வருதல் இடம்பெறும். (ஓ)

♦ ♦ ♦

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.
உற்சவத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 8 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 16 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு வசந்த மண்டபப்பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணித்து அருட்காட்சி கொடுப்பார்.
மறுநாள் 17 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்குத் திருமஞ்சன தீர்த்தமும், இரவு 7 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும். (ஓ)

♦ ♦ ♦

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயில் வருடாந்த கொடியேற்றத்திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணி முதல் பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.
உற்சவ நாள்களில் தினமும் தெய்வீகத் தொடர் விரிவுரையை இந்து சமயத்தின் மகிமை என்ற தலைப்பில் சிவச் சொல்வாரி மா.அ.கமலானந்தன் நிகழ்த்துவார். தினமும் ஸ்ரீமுருகன் அன்னதான சபையினர் நண்பகல் அன்னதானம் வழங்குவர். (ஓ-28)

# வட பகுதி மீனவர் மூலம் அரசியல் பிழைப்பு நடத்தி வரும் மத்திய, மாகாண அரசுகள்

***மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் குற்றச்சாட்டு***

மன்னார், மார்ச்.5
வட பகுதி மீனவர்கள் மூலம் மத்திய, மாகாண அரசுகள் அரசியல் பிழைப்பு நடத்தி வருவதாக மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் என்.எம்.ஆலம் குற்றம் சாட்டியுள்ளார்.
இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
"வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சிவமோகனால் அண்மையில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. குறித்த அறிக்கையில் "இந்திய மீனவர்களால் எமது கடல் வளம் அழிக்கப்படவில்லை என்றும், எமது தொப்பிள் கொடி உறவுடன் வாழ்பவர்கள் அவ்வாறு நடந்து கொள்ள மாட்டார்கள், மாறாக தென் பகுதி மீனவர்களும், வெளிநாட்டு மீனவர்களுமே எமது வளங்களை அழிக் கின்றனர்" என்ற கருத்தைத் தெரிவித் தார்.
இதற்கு ஒரு படி மேலே மத்திய கடற்றொழில் அமைச்சர் கடந்த கடந்த 24 ஆம் திகதி வழங்கிய தகவலில்,
"இரு நாட்டு மீனவர்களின் உடன்பாட்டுடன் இந்தப் பகுதியில் தொழில் புரியலாம்" என்று தெரிவித்திருந்தார்.
ஆனால் பேச்சுவார்த்தை ஆரம்பித்தவுடன் அமைச்சரால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் "எல்லை தாண்டிவரும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதுடன் அவர்களின் படகுகளும் பறி முதல் செய்யப்படும்" என்று தெரிவித்திருந்தார்.
தற்போது அவர்களின் இவ்வாறான இந்திய மக்கள் மீதும் எல்லை மீறும் மீனவர்கள் மீதும் திடீர் காதல் ஏன் என்பதும் இதன் உள் நோக்கமும் அனைவருக்கும் தெரிகின்றது. அவர்கள் மீனவர்களை எந்தளவுக்கு புரிந்து வைத்துள்ளனர் என்பது தற்போது தெரிகின்றது.
வட பகுதி மீனவர்கள் கடந்த காலங்களில் இந்திய மீனவர்களின் தொழில் முறை மற்றும் அவர்களின் அத்து மீறிய வருகையை எதிர்த்து உணவுதவிர்ப்பு, பாதயாத்திரை, அமைதி ஊர்வலம், ஆர்ப்பாட்டப் பேரணி என்பவற்றை முன்னெடுத்ததை அவர்கள் பிழை என்று கருதுகின்றார்களா?
மேலும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் "இந்திய மீனவர்கள் எமது கடல் வளங்களை கொள்ளையிடுவதுடன் எமது கரைக்கு வந்து இளநீர் குடித்து விட்டுச் செல்லும் நிலை உள்ளது" என்று தெரிவித்தமை வெறுமனே மீனவர்களின் கை தட்டலைப் பெற்றுக் கொள்வதற்காகவா? வடபகுதி மீனவர்களுக்காக இன்று வரை மாகாண சபையில் ஒரு தீர்மானமாவது நிறை வேற்றப் பட்டுள்ளதா? அவர்களின் பிரச்சினைகள் இந்தச் சபையில் பேசப்பட்டுள்ளதா?
எனவே வட பகுதி மீனவர்களின் உணர்வைக் கொச்சைப் படுத்தி அரசியல் செய்ய வேண்டாம் என்று சம்பந்தப்பட்டவர்களை மீனவ சங்கம் சார்பாகக் கேட்டுக் கொள்கின் றோம்" - என்றுள்ளது. (வ-56)



அல்வாய் அம்பாள் வித்தியாலயத்தில் கற்கும் வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு கடந்த 26ஆம் திகதி நடைபெற்றது. நெல்லியடி லயன்ஸ் கழகத்தினரின் அனுசரணையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கழகத்தின் செயலாளர் பாடசாலை அதிபரிடம் உபகரணங்களை வழங்கி வைத்தார். (ஐ)

## இலத்திரனியல் அ.அ. புகைப்படம் எடுக்க நிலையங்கள் பதியலாம்

ஆள்களை பதிவு செய்யும் திணைக்களத்தால் 15 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகிப்பதற்காக புகைப்படங்கள் எடுப்பதற்கு பதிவு செய்வதற்காக புகைப்பட நிலையங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இதற்கான பதிவு செய்யும் விண்ணப்பங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் புகைப்பட நிலையங்களால் ஆள்களை பதிவு செய்யும் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். இது தொடர்பான மேலதிக விவரங்கள், மாதிரி விண்ணப்பப்படிவம் என்பவற்றை அலுவலக நேரத்தில் நல்லூர் பிரதேச செயலக அடையாள அட்டைப் பிரிவில் பார்வையிடலாம் என்று நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (வ)


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.03.2013 வரையும் அடகுவைத்து மீட்கப்படாத நகைகள் 22.04.2014 இலிருந்து காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | ... |
| நெல்லியடி | ... |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(சி.12376) (45.6.3)








## பணிநிலை வேண்டுகை

வைண்டிங் வேலைகள் தெரிந்த அனுபவம் உள்ளவர்கள் தேவை.
(ஆண்/பெண்) இருபாலாரும் சாயிபிறின் டேர்ஸ்
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில். 077 220 9474
(45341) (45.3.6)

## உடனடித் தேவை

தரமான, சுத்தமான ஒடியல், புளுக்கொடியல் சிறுதொகையாகவும், மொத்தமாகவும் கொள்வனவு செய்யப்படும்.
தொடர்பு: அண்ணா பாம் ஸ்ரேசன் றோட், இணுவில்.
T.P:021 720 0900
(சி/12375) (4.3.6)

## NSB National Savings Bank
## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.01.2013 வரையிலும் அடகு வைத்து குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மீட்கப்படாத நகைகள் 08.03.2014 **சனிக்கிழமை காலை 8.30** மணிக்கு அந்தந்தக் கிளைகளில் நடைபெறும் ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

கிளை விவரம்: 01.சாவகச்சேரி
02.யாழ்ப்பாணம் 2 ஆம் கிளை
03.மல்லாவி
04.வவுனியா

இந்த ஏலவிற்பனையை இரத்துச்செய்யும் அல்லது பிற்போடும் அதிகாரம் வங்கிக்குண்டு.

**பிராந்திய முகாமையாளர் (வடக்கு)**
**தேசிய சேமிப்பு வங்கி.**
(45364)(3.6.4)

## போதையில் மோ.சைக்கிள் செலுத்தியவருக்கு அபராதம்

கிளிநொச்சி, மார்ச் 5
கிளிநொச்சி நகர் பகுதியில் மதுபோதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவருக்கு 10 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமும் இருவார கடூழிய சிறைத் தண்டனையும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கிளிநொச்சி ஏ-9 வீதியில் மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற ஒருவருக்கு எதிராக கிளிநொச்சிப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஜ. வகாப்தீன் முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர்.

இதன்போது குறித்த நபருக்கு 10 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் இரண்டு வாரம் கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. (வ-55)

## உயர் வகுப்பு இல்லாததால் மாணவர்கள் பாதிப்பு

கிளிநொச்சி,மார்ச் 5
கிளிநொச்சி மாயவனூர் பகுதியில் மேல் வகுப்புக்களுடன் பாடசாலை ஒன்று இல்லாததால் மேற்பிரிவு மாணவர்கள் பல்வேறு இடர்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாயவனூர் கிராமத்தில் உள்ள பாடசாலையில் தரம் 9 வரையே வகுப்புக்கள் உள்ளன. அதற்கு மேற்பட்ட வகுப்புகளில் கல்வி கற்க நீண்ட தூரம் பயணித்து வட்டக்கச்சி மகாவித்தியாலயத்துக்கே செல்ல வேண்டியுள்ளது. இதனால் ஒரு படவேளை நிறைவு பெற்ற பின்னரே தாம் வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தைச் சென்றடைய முடிவதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

மாயவனூர் கிராமத்தில் 850 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. இங்கு போதிய அடிப்படைகள் இன்மையால் வெளியிடங்களுக்கு அனைத்துத் தேவைகளுக்கும் செல்ல வேண்டியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே மாணவர்களின் நன்மை கருதி உயர்தர வகுப்புக்களையும் அமைத்து தருவதுடன் சீரான போக்குவரத்து சேவையையும் பெற்றுத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-55)

**மாயவனூர் கிராமத்தில் 850 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன.**

## விவசாயம், காணிப் பிரச்சினை; கிளிநொச்சியில் ஆராய்வு

வவுனியா,மார்ச் 5
நீர் வரி இடாப்பினை புதுப்பித்து கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படாத வகையில் செயற்படுவது குறித்தும் கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய காணிகள் அபகரிக்கப்படுவதை நிறுத்துவது குறித்தும் கிளிநொச்சி செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட விவசாய மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் கடந்த 28 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் நீர்வரி இடாப்பினை புதுப்பிப்பதற்காக காணி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் பதிவுகளை மேற்கொள்வ தற்கு பத்திரிகைகள் மூலம் அறிவித்தல் விடுதல், திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்ட காணிகள், கழிவு வாய்க்கால்கள் என்பவற்றை ஆக்கி ரமிக்கும் நடவடிக்கைகளைத் தடுத்தல், கமநலசேவைநிலையங்களை சீராக இயங்கவைத்தல், காணிகளை அளவீடு செய்து உரிய வகையில் பதிவினை மேற்கொள்ளல், காணிப் பிணக்குகள் தொடர்பில் மாவட்டச் செயலக பிரதிநிதி, கிராம அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர், குறித்த பிரதேச கமக்கார அமைப்பின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் மூலம் கலந்துரையாடி அதனை தீர்த்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன. இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ் வரன், மேலதிக அரச அதிபர் எஸ். ஶ்ரீநிவாசன் கரைச்சி பிர தேச செயலர் கோ. நாகேஸ்வரன், கண்டாவளை பிரதேச செயலர் எஸ்.முகுந்தன். கிளி நொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எட்மன்ட் மகேந்திரா, கிளிநொச்சி நீர்ப்பாசன திணைக்கள பிரதிப் பணிப்பாளர் எஸ். சுதாகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-402)

# அடிப்படை வசதிகளை ஏற்படுத்துமாறு தம்பனை கிராம மக்கள் கோரிக்கை

### *குறைகளை கூட்டமைப்பினரிடம் நேரில் தெரிவித்தனர்*

வவுனியா,மார்ச் 5
வவுனியா தம்பனை பிரதேச மக்கள் தமக்கு அடிப்படை வசதிகளை பெற்றுத்தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கோரிக்கை விடுத்தனர்.

கடந்த சனிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளுக்கும் பெரியதம்பனை, பிரமாணங்குளம், தம் பனைக்குளம், நீலியா மோட்டை, கன்னாதிட்டி ஆகிய கிராமங் களைச் சேர்ந்த மக்களுக் கிடையில் இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் 1977 ஆம் ஆண்டு நாம் இந்தக் கிராமத்தில் குடியேறினோம். அன்று போலவே இன்று வரை இருக்கிறோம். நிரந்தர வீடு மலசல கூட வசதிகள் போன்ற எந்த அடிப்படை வசதிகளும் எமக்கு ஏற்படுத்தித்தரப்படவில்லை. ஆதிக் குடிகளைப் போன்றே கவனிப்பார் இன்றி நாம் நடுக்காட்டில் விடப்பட்டோம். சீரான போக்குவரத்து வசதி எவையும் இல்லை. காட்டு யானைகள் நாம் மேற்கொள்ளும் பயிர்ச் செய்கைகளை அழித்தொழிக்கின்றன. விஷ ஜந்துக்கள் தீண்டினால் உடனடியாக மருத்துவ வசதிகளை பெற முடியாதுள்ளது. எனவே எமதுநிலைமைகளை கருத்திற் கொண்டு உரிய வசதிகளைப் பெற்றுத் தாருங் கள் என மக்கள் கோரிக்கை விடுத்தனர். இந்தக் கலந்துரையாடலில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-402)

**ஆதிக் குடிகளைப் போன்றே கவனிப் பார் இன்றி நாம் நடுக்காட்டில் விடப்பட்டோம். சீரான போக்கு வரத்து வசதி எவையும் இல்லை. காட்டு யானைகள் நாம் மேற் கொள்ளும் பயிர்ச் செய்கை களை அழித்தொழிக்கின்றன.**




*வடமாகாண சபையால் கரைச்சி பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட கனரக வாகனத்தை வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா இயக்கி வைக்கிறார். (வ-18)*

## போதைப் பொருளுடன் கைதான இருவரையும் தடுப்பில் வைத்து விசாரிக்க அனுமதி

### *மன்னார் நீதிவான் வழங்கினார்*

மன்னார் பேசாலை பகுதியில் ஹேரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களையும் தலைமன்னார் பொலிஸார் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்திய போது குறித்த இரண்டு சந்தேக நபர்களையும் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ள மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் அனுமதி வழங்கினார்.

மீண்டும் சந்தேக நபர்களை எதிர்வரும் 8 ஆம் திகதி மன்றில் முன்னிலைப்படுத்துமாறும் நீதிவான் பொலிஸாரைப் பணித்தார்.

பேசாலைப் பகுதியைச் சேர்ந்த இரு சந்தேகநபர்களே கடந்த ஞாயிற்றுக்கிழமை போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டு தலைமன்னார் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பேசாலைப் யூட் வீதியில் வைத்து ஒருவர் ஹேரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார். பின்னர் இவரிடம் விசாரணைகளை மேற்கொண்ட போது ஓட்டோவில் வைத்து மேலும் ஒருவரிடமிருந்து போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பேசாலை 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவர் என்றும், இவர் 13 கிராம் 600 மில்லி கிராம் ஹெரோயின் போதை பொருள் வைத்திருந்ததாகவும், மற்றவர் பேசாலை முருகன் கோயில் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் இவரிடமிருந்து 210 மில்லிகிராம் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் தலைமன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது குறித்த இருவரிடமும் நீதிமன்றத்தின் உத்தரவுக் கமைவாக தலைமன் னார் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப்பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-56)

## ஓட்டோ பயணங்களால் ஆபத்து

கிளிநொச்சி,மார்ச் 5
கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு மாவட்டங்களில் பாடசாலை மாணவர்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபடும் ஓட்டோ சாரதிகள் கண்மூடித் தனமான வேகத்தில் ஓட்டோக்களை செலுத்துவதால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை மாணவர்களை ஏற்றி இறக்கும் பணியில் ஓட்டோக்களே அதிகம் ஈடுபடுத்தப்படுகின்றன. இவற்றில் அளவுக்கு அதிகமாக மாணவர்களை ஏற்றும் சாரதிகள் அதி வேகமாக பயணிக்கின்றனர். பொலிஸார் அற்ற பகுதிகளில் இவ்வாறு போக்குவரத்து விதி களை மீறி ஓட்டோ சாரதிகள் செயற்படுவதால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து பொலிஸார் உரிய கவனம் எடுக்க வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-55)

## கவிதை நூல் வெளியீடு

முல்லைத்தீவு, மார்ச் 5
முல்லைத்தீவில் கவிதை நூல் ஒன்று வெளியிட்டு வைக்கப் படவுள்ளது.

வள்ளுவர்புரம் யோ. புரட்சி எழுதிய "எதிர்வீட்டு நாயும் என் ஏழை நாயும்" என்ற கவிதை நூல் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் முல்லைத் தீவு கடற்கரையிலுள்ள சுனாமி நினைவாலயத்துக்கு அருகில் வைத்து வெளியிட்டு வைக்கப் படவுள்ளது. (க)

# அம்பகாமம் செல்வதில் அவலப்படும் இராமநாதபுரம் கிராம மக்கள்

### பழைய கண்டி வீதி மூடப்பட்டதால் அவலம்

கிளிநொச்சி, மார்ச் 5
கிளிநொச்சி இராமநாதபுரம் கிராம மக்கள் அம்பகாமம் கிராமத்துக்கு இலகுவாகச் செல்ல முடியாத அவல நிலையில் உள்ளனர்.

கிளிநொச்சி கிழக்கிலுள்ள முக்கிய கிராமங்களில் ஒன்றாக இராமநாதபுரம் விளங்குகின்றது. இராமநாதபுரம் கிராம மக்கள் பழைய கண்டி வீதி வழியாகச் சென்றால் முல்லைத்தீவின் அம்பகாமம் கிராமத்தை இலேசாகச் சென்றடைய முடியும். ஆனால் இரணைமடு விமானப் படைத் தளத்தின் பாதுகாப்பு என்ற பெயரில் பழைய கண்டி வீதி மூடப்பட்டுள்ளதால் இராமநாதபுரம் கிராம மக்கள் கிளிநொச்சி நகருக்குச் சென்று மாங்குளம், ஒலுமடுச் சந்தி வழியாக 40 கிலோ மீற்றர் தூரம் பயணித்து அம்பகாமம் கிராமத்துக்குச் செல்லவேண்டியுள்ளது. ஆனால் இராமநாதபுரத்திலிருந்து எட்டுக் கிலோ மீற்றர்தூரத்திலேயே அம்பகாமம் கிராமம் அமைந்துள்ளது.

அம்பகாமம் கிராமத்தில் சிறப்பு வாய்ந்த பிள்ளையார் ஆலயம் உள்ளமையால் கிளிநொச்சி கிழக்கு மக்கள் 8 கிலோமீற்றர் தூரத்துக்குப் பதிலாக 40 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்து கோயிலுக்குச் செல்ல வேண்டிய நிலையிலுள்ளனர்.

பழைய கண்டி வீதியை இராணுவமும், தென்னிலங்கை மக்களும் பயன்படுத்தி வருவதாக இராமநாதபுரம் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)

## அம்பகாமத்தில் இருந்து கிரவல் மண் அகழ்வு

### *தடுத்து நிறுத்த மக்கள் கோரிக்கை*

முல்லைத்தீவு,மார்ச் 5
முல்லைத்தீவு அம்பகாம பகுதியில் இருந்து டிப்பர் வாகனங்களில் நாள்தோறும் கிரவல் மண் ஏற்றிச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தினமும் நூற்றுக்கணக்கான தடவை டிப்பர் வாகனங்களில் மண் ஏற்றப்பட்டு இராமநாதபுரம் ஊடாக வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இது குறித்து வட மாகாண விவசாய அமைச்சரின் கவனத்துக்குத் தாம் கொண்டு வந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

குறித்த பகுதிக்கு பொது மக்கள் எவரும் செல்ல முடியாது என்றும் இராணுவத்தினரின் பிடியில் இருக்கும் இந்தப் பகுதியில் அவர்களின் துணை யுட னேயே கிரவல் மண் அகழப்படுவதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (ஐ-18)

# கிழக்குப் பல்கலை விரிவுரையாளர்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியாத நிலை

## பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

களுவாஞ்சிக்குடி,மார்ச் 5
கிழக்கு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்கள் சுதந்திரமாக கடமையாற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த குற்றச்சாட்டை கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் வைத்தியர் டி. ஜெயசிங்க சுமத்தியுள்ளார்.



கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் செய்தியாளர் சந்திப்பு மட்டக்களப்பில் நடைபெற்றபோது சங்கத் தலைவர் டி. ஜெயசிங்க, செயலர் கே. கருணாகரன், உபதலைவர் வர்ணகுலசிங்கம் மற்றும் சங்க உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பு மட்டக்களப்பு கல்லடி கிறீன் காடன் ஹோட்டலில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்குப் பலகலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கத்தினரின் பிரச்சினைகள் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி அமைச்சின் செயலர் ஆகியோருக்கு மனு சமர்ப்பிக்கப்பட்டது.

எனினும் இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் உயர்கல்வி அமைச்சர் ஆகியோரை நேரடியாகச் சந்திக்கவுள்ளோம்.

எமது பல்கலைக்கழகத்துக்குள் உள்ள பிரச்சினைகளை எமக்குள்பேசி தீர்க்க முடியாத சூழ்நிலையிலேயே இங்குள்ள பிரச்சினைகளைபட்டியலிடும்நிலைக்குத் தள்ளப்பட்டோம். இங்கு கடமையாற்றும் பலர் சம்பளத்துக்காக அல்லாமல் கௌரவம் மற்றும்மண்மீது கொண்டபற்று காரணமாக இந்தத் தொழிலில் இணைந்துள்ளனர். திறமைகளைக் கொண்ட ஆசிரியர் களை நாங்கள் கொண்டுள்ளோம்.

அவர்களை நாங்கள் எமது பல்கலைக்கழகத்துக்குள் தொடர்ந்து வைத்திருக்க வேண்டும்.

அதற்காக சுதந்திரமாக கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் ஒரு சூழல் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். ஆசிரியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதே எங்களது நோக்கமாகும்.

ஆசிரியர்களின் பதவி உயர்வு, நிரந்தரமாக்கல், விடுமுறைகள் திட்டமிடப்பட்ட வகையில் மறுக்கப்படுகின்றன.

சில விரிவுரையாளர்களின் பதவியுயர்வுகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் பட்டம் வழங்கிய திகதிகளும் மாற்றப்பட்டுள்ளன. நிரந்தரமாக்கப்பட்ட விரிவுரையாளர்கள் சட்டத்துக்கு முரணாக ஏனைய பீடங்களுக்கு தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளனர்.

அங்கீகாரமளிக்கப்படாத குழுக்களினால் சில விரிவுரையாளர்களின் சம்பளங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

விரிவுரையாளர்களுக்கான விடுமுறை வழங்குவதற்கான ஒழுங்குமுறைகள் மாற்றப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் நிர்வாக முறைகளில் எதேச்சதிகாரமாக மாற்றங்கள் செய்யப்படுகின்றன. பல்கலைக்கழக முகாமைத்துவத்தில் வெளிப்படைத் தன்மையற்ற தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன- என்றார். (ச-32)

### திண்மக் கழிவு அகற்றல் செயற்றிட்டம் குறித்து ஆராய்வு

அம்பாறை,மார்ச் 5
அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பகுதிக்குட்பட்ட மாநகர சபை மற்றும் பிரதேச சபைகளுக்கான கொத்தணித்திட்ட திண்மக் கழிவகற்றல் செயற்றிட்டம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம் ஒலுவில் கிறீன் வில்லேஜ் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்தச் சபைகளுக்கான கொத்தணித்திட்ட திண்மக் கழிவகற்றல் செயற்றிட்டம் தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலர் யு.எல்.எம். அஸீஸ், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை.சலீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அவர்கள் திண்மக்கழிவு தொடர்பாக விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

திண்மக்கழிவுகளைக் கொண்ட திறன்மிக்க மாற்றுத்திட்டம் மற்றும் சுழற்சி முறைகளை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பிலும் மீளாய்வுக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டன. (ச)

# ‘பணம் தண்ணீரில்’ கிழக்குக் கடற்கரைகளில் பிரசுரங்கள்

மட்டக்களப்பு,மார்ச் 5
ஆள்கடத்தல்காரர்களின் பொய்களால் ஏமாந்து நீங்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை வீணாக்க வேண்டாம் என்று எழுதப்பட்ட பிரசுரங்கள் கிழக்கு மாகாண கடற்கரையோரங்களில் பரவலாக விநியோகிக்கப்பட்டுள்ளன. விளம்பரப் பலகைகளும் மக்கள் கூடும் இடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

பணம் தண்ணீரில் என்ற தலைப்பிட்டு வெளியிடப்பட்டுள்ள பிரசுரத்தில்,விசா இல்லாமல் படகில் ஏறும் நீங்கள் ஆஸ்திரேலியாவைச் சென்றடையமாட்டீர்கள், நீங்கள் யாராக இருந்தாலும் எங்கிருந்து வந்தாலும் ஆஸ்திரேலியாவில் குடியமர முடியாது,விசா இல்லாமல் படகுகளில் ஆஸ்திரேலியாவுக்குப் போக வேண்டாம் என்று எச்சரித்து பல வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. (ச)




ஆஸ்திரேலியாவுக்கு செல்லவேண்டாம் என்று அறிவுறுத்தி பிரசுரங்கள் விநியோகம்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 ★ 10 ★ 1939



உதிர்வு 14 ★ 02 ★ 2013

அமரர் க.சி.சண்முகலிங்கம்
[ஓய்வுபெற்ற உபஅதிபர்]
திதி: 05.03.2014

எம் அருமை அப்பாவே! ஓராண்டு ஓடி ஒளிந்ததப்பா....
உங்கள் அன்பு முகம் காண ஆவலாய் உள்ளதப்பா...
அன்பின் உருவமாய் அமைதியின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் எம் வாழ்வின் வழிகாட்டியாய்
ஊர்புகழும் உத்தமனாய் சிறந்த ஆசானாய்
சென்ற இடமெல்லாம் சிறப்புடன் வாழ்ந்தீர்கள்
என் அருமைத் தெய்வமே' கனவுலகில் எம்முடன் வாழ்கின்றீர்கள்
நிஜ உலகில் காணாமல் தவிக்கின்றோம்
ஊமையாய் அழுகின்றோம்
எம்முள்ளே எம் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு அகலா

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி. (45007)(3.6.4)

# பிச்சைக்காரர்களின் தொகை திருமலை நகரில் அதிகரிப்பு

திருகோணமலை,மார்ச் 5
திருகோணமலை நகரத்தில் பிச்சைக்காரர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை காணக்கூடியதாக உள்ளது என்று திருகோணமலை வாலிபர் அமைப்பு தெரிவித்துள்ளது.

பிச்சை எடுப்பவர்களின் பெயர் மற்றும் உறவினர்கள் விவரங்களை விசாரிக்கின்றபோது, பண வசதி படைத்த குடும்பங்களைச்சேர்ந்தவர்களும் பிச்சை எடுக்கின்றனர் என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த தாய்க்கு வயதாகி விட்டால் அந்த வயோதிபத் தாயை வீட்டிலிருந்து அப்புறப்படுத்தி அநாதையர்க்கும் விதத்தில்பிள்ளைகள் நடந்து கொள்வதாகக் கூறப்படுகிறது.

திருகோணமலை நகரத்தில் பிச்சை எடுப்பதைத் தொழிலாக மேற்கொள்வோரும் அதிகளவில் காணப்படுகின்றனர் என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

வீதிகளில் இரவு பகல் என்று பாராமல் திரியும் பிச்சைக்காரர்களின் குடும்பத்தவர்கள் ஒன்றிணைந்து முதியோர்களைக் கவனிக்க முன்வர வேண்டும் என்று திருகோணமலை வாலிபர் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ச)



6ஆம் ஆண்டு நினைவஞ்சலி
செல்வன்
இராசேந்திரம் கருணாகரர்
(யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவனும், முன்னாள் முகாமைத்துவ உதவியாளர் - மாவட்டச் செயலகம், வவுனியா).

தோற்றம் 18.05.1982
மறைவு 05.03.2008

ஆண்டுகள் பல ஓடினாலும் உங்கள் நினைவுகள்
மாறாது மகனே! இறுதிவரை துணையிருப்பாய் என்று
எண்ணி இருந்தோம். எங்களைப் பாதியில் பரிதவிக்கவிட்டு
ஓடி மறைந்ததால் வாடுகின்றோம் அன்பான உன் வார்த்தை அயராது
எங்கள் செவியில் ஒலித்தது மகனே!

உன் பிரிவால் வாடும்:
பெற்றோர்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (45314)(12.6.3)

## தொழுநோயைக் கட்டுப்படுத்த மாதிரித் திட்டம்

கொழும்பு,மார்ச் 5
தொழுநோயைக் கட்டுப்படுத்துவதற்கு மாதிரி திட்டமொன்று 5 மாவட்டங்களில் முன்னெடுக்கப் படவுள்ளது.
வருடாந்தம் 2,000 தொழுநோயாளர்கள் பதிவாகி உள்ளனர் என்று தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் பணிப்பாளர் நிலந்தி பெர்னாண்டோ தெரிவித்தார்.
கொழும்பு, கம்பஹா, அம்பாறை, புத்தளம், ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்கள் தொழுநோயைக் கட்டுப்படுத்தும் திட்டத்துக்கான மாவட்டங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். மேல், கிழக்கு, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் அதிகளவு தொழுநோயாளர்கள் பதிவாகின்றனர் என்று அவர் கூறினார்.
2013 ஆம் ஆண்டு 2,434 நோயாளர்கள் பதிவாகியதுடன் அவர்களில் 44 வீதமானவர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச)



பிம்ஸ்டெக் அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மியன்மாருக்கு சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ,நேஸைடோ விமான நிலையத்தில் அந்த நாட்டின் தொழில் அமைச்சர் யூ. அய். மின்ட், பிரதி வெளிவிவகார அமைச்சர் யூடின் ஓ வின் ஆகியோரினால் வரவேற்கப்பட்டார். அருகில் வெளி விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ், மியன்மாரிலுள்ள இலங்கைத் தூதர் எச். ஆர். பியசிறி ஆகியோர் காணப்படுகின்றனர்.

# சிங்கள இனத்தை அழிக்கத் திட்டம்

### சீரகத்தில் 'சதகுப்த' என்ற பொருள் கலப்பு என்கிறார் நாபானே தேரர்

கொழும்பு, மார்ச்5
சிங்கள இனத்தை அழிக்க நூதன திட்டமொன்று வகுக்கப் பட்ட வருவது குறித்து விழிப் புடன் செயற்படவேண்டும் என்று ராமன்ய நிக்காயாவின் பீடாதிபதி நாபானே தேரர் தெரிவித்தார்.
அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு பாராட்டு வழங்கும் வகையில் பொல்கொல்ல பிரதேசத்தில் நடத்தப்பட்ட நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
வெளிநாடொன்றில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சீரகத் தொகுதியில் சதகுப்த என்ற சீரகத்தைப்போன்ற பொருள் கலக்கப்பட்டுள்ளது.
இந்தப் பொருள் பெண்களின் கர்ப்பத்தைக் கலைப்பதுடன் பெண்க ளுக்கு மலட்டுத் தன்மையையும் உருவாக்குகின்றது என்று அவர் கூறினார்.

**கடந்த காலங்களிலும் சிங்கள இனத்தை அடியோடு அழிப்பதற்கு நூதன திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.**

திட்டமிட்ட வகையில் சிங்கள இனத்தை அடியோடு அழிப்பதற்காகவே இத்தகைய உத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன; இவை குறித்து மக்கள் விழிப்புடன் செயற்படவேண்டும்.
அவ்வாறு செயற்பட்டால் எமது இனத்தை அழிக்க முடியாது என்று அவர் குறிப்பிட்டார்.
கடந்த காலங்களிலும் சிங்கள இனத்தை அடியோடு அழிப்பதற்கு நூதன திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்று அவர் மேலும்தெரிவித்தார். (ச-10-22)

## அரசிலிருந்து மு.காவை வெளியேற்ற மாட்டோம்

### சுசில் பிரேம் ஜயந்த தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 5
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள கூட்டுக் கட்சிகள் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அரசி லிருந்து முஸ்லிம் காங்கிரஸை வெளியேற்றும் நோக்கம் அரசுக்கு இல்லை என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலர் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசில் இருந்து வெளியேற்றப்பட உள்ளது என்று தெரிவிக்கப்படும் விவகாரம் குறித்து ஊடகவியலாளர் மாநாட்டில் வினவப்பட்டது. இதற்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.
ஐ. ம. சு. முன்னணியில் உள்ள கூட்டுக் கட்சிகளிடையே வேறுபட்ட கொள்கைகள் உள்ளன. அவை பொது நோக்கின்படி ஒன்றாக இயங்கி வருகின்றன என்று அவர் கூறினார்.



சுசில் பிரேம் ஜயந்த

இந்தப் பிரச்சினையை பேசித் தீர்க்க முடியும். ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியும்.
சில அமைப்புகளே பள்ளிவாசல்களுக்கு சேதம் ஏற்படுத்துகின்றன. அதற்கும் அரசுக்கும் தொடர்பு இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## வெளிநாட்டவரிடம் திருடிய நபர் கைதானார்

கொழும்பு,மார்ச் 5
புறக்கோட்டை பிரதேசத்தில் வெளிநாட்டு நபர் ஒருவரின் பொருள்களைத் திருடிய சம்பவத்தில் இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த நபரிடம் 21,000 ரூபா இலங்கை பணம், வெளி நாட்டு கடனட்டை என்பன திருடப்பட்டுள்ளதாக குறித்த சந்தேகத்தில் இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளான்.
இந்தச் சம்பவம் தொடர்பில் புறக்கோட்டைபொலிஸாருக்குகிடைத்த முறைப்பாட்டை தொடர்ந்து மேற் கொண்ட விசாரணைகளுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

## திருட்டுக்காக பயன்படுத்திய வாகனம் சிக்கியது

நீர்கொழும்பிலுள்ள நகைக் கடையொன்றில் ஒரு கோடி 48 லட்சம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்துக்கு பயன்படுத்திய வாகனம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தத் திருட்டை மேற்கொண்ட குழுவினர், திருட வருவதற்கும் தப்பிச்செல்வதற்கும் இந்த வாகனத்தை பயன்படுத்தியுள் ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித்ரோஹண குறிப்பிட்டார்.
திருட்டுச் சம்பவம் தொடர்பில் மேல் மாகாண சபைக்கான ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ஒருவர் உட்பட மேலும் சில சந்தேகநபர்கள் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச)

## தேர்தல் சட்ட மீறல்களில் ஈடுபடுகிறது ஆளும்கட்சி

### ஜே.வி.பி.குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 5
ஆளும் கட்சி தேர்தல் சட்ட மீறல் களில் ஈடுபட்டு வருகிறது என்று ஜே.வி.பி குற்றஞ்சுமத்தியுள்ளது. தென் மற்றும் மேல் மாகாண சபைத் தேர்தல் பரப்புரைப் பணிகளில் ஈடுபட்டு வரும் அரசு, பல்வேறு தேர்தல் விதிமுறை மீறல்களில் ஈடுபட்டு வருகிறது என்று கட்சியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.
அரச அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களின் பிரதானிகளின் பங்களிப்புடன் அரசு சட்ட விரோதமான முறையில் தேர்தல் கூட்டங்களை நடத்தி வருகிறது என்று அவர் கூறினார்.
காலி, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் தலைமையில் இவ்வாறான கூட்டங்கள் நடத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.
பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் இவ்வாறு கூட்டங்களில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (ச)



ரில்வின் சில்வா

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
ஈராண்டு நினைவலைகள்

பிறப்பு
25.05.1940



இறப்பு
27.03.2012

அமரர் கந்தையா சச்சிதானந்தன்
(சச்சி - நாவற்குழி கிழக்கு)
திதி: 05.03.2014

ஆண்டுகள் இரண்டாகிச் சென்றதப்பா!
ஆனாலும் உங்கள் பிரிவு ஆற முடியவில்லையப்பா!
வாழ்ந்த நாள் தன்னில் வையகத்தார் போற்றிடவே
வாழ் வாங்கு வாழ்ந்தே இறைவன் பாதம் சேர்ந்தீரே!
நீண்டநாள் சென்றாலும் உங்கள் பாசம் நாம் மறவோமப்பா!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

366, கோயில் வீதி,
நல்லூர்.
தொ.பே. 021 222 6156

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(45358)(45.6.3)

நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் இராசலிங்கம் நவரத்தினஅம்மா



கடந்த 02.02.2014 ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்திகேட்டு நேரிலும் மற்றும் சகல தொடர்புகள் மூலமும் கலந்துகொண்ட அனைவருக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவிப்பதுடன்
இன்று (05.03.2014) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குட்டிப்பிள்ளையார் கோயிலடி,
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

குடும்பத்தினர்.

(45290) (45.6.3)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தட்டிக் கேட்க எவரும் இல்லையெனில் தம்பி சண்டப் பிரசண்டன் என்ற போக்கில்......

வடக்கில் தமிழ் மக்களின் இனப்பரம்பல், இதுவரை பதினான்கு லட்சத்தால் வீழ்ச்சி கண்டுள்ளதாகவும், அதனால் அது தமிழர்களின் பிரதிநிதித்துவத்தில் பல்வேறு வகைகளிலும் பாதிப்புக்களை உண்டாக்குவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அகதிகளாக மாறியுள்ள எமது மக்களின் வாக்கு உரிமையை மீள்விக்க நடவடிக்கை மேற்கொள்வதன் மூலமே, தமிழர்களின் பிரதிநிதித்துவம் குறையாதிருக்க வகை செய்ய இயலும்.

தமிழ் மக்களைச் சூழ்ந்துள்ள இந்தப் பேராபத்தை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா, துலாம்பரமாகச் சுட்டிக்காட்டி உள்ளார்.

வடக்கில் மட்டும் தமிழ் மக்களின் சனத்தொகை ஆறு லட்சத்தால் குறைந்துள்ளது. தமிழ் மக்கள் கொல்லப்பட்டும், காணாமற் போயும், அகதிகளாக மாற்றப்பட்டுள்ளதாலும், பிறப்பு வீதம் வீழ்ச்சி அடைந்ததாலும், இந்தப் பாதகநிலை தோன்றியுள்ளது-

இந்தியாவில் மட்டும், சுமார் இரண்டு லட்சம் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக நாள்களை ஓட்டுகிறார்கள்-என்றும் அவர் கள நிலைமையை விவரித்திருக்கிறார்.

தமிழ் மக்களின் இனப்பரம்பல், வடக்கில் மட்டுமன்றி கிழக்கிலும் மிகமிக மோசமாகப் பாதிப்புற்று உள்ளது. தமிழர் பிரதேசங்கள் அரசின் உடந்தையோடும், இனவாதிகளின் உந்துதலோடும், போருக்குப் பிந்திய காலத்தில் நிலப்பறிப்பு அங்கு மிகுந்த உத்வேகத்துடன் நடத்தப்படுகிறது.

ஆகக் குறைந்தது இன்னமும் ஒரு தசாப்த காலத்தில், கிழக்கு இலங்கையில் தமிழர் விகிதாசாரம் ஆகக் குறைந்தது எழுபது சதவீதத்தால் வீழ்ச்சி அடையும் போக்கு, நாளாந்தம், மாதாந்தம் என்ற காலக்கணக்கில், உயர்மட்ட ஆசியுடனும் அனுசரணையுடனும் ஒப்பேறப்பட்டு வருகிறது.

போர் முடிவுற்ற, கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த இடங்களைக் கபளீகரம் செய்யும் போக்கு வேகவேகமாக, மிகுந்த வீச்சுடன் நடைபெற்று வருவதனை கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் கலையரசன் புட்டுக் காட்டி இருந்தார்.

இலங்கை அரசினால், காணி தொடர்பாக எந்தத் திருத்தச் சட்டவரைவு நாடாளுமன்றில் கொண்டு வரப்பட்டாலும், அவை வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களுக்குப் பெரும் பாதிப்பையே பலப்பல வழிகளில் ஏற்படுத்துகின்றன-என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் கடந்த மாதம் சபையில் சுட்டிக்காட்டி இருந்தார்.

வவுணதீவு, செங்கலடி, பட்டிப்பளை ஆகிய பிரதேசங்களில் 25,000 ஏக்கர்களுக்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் காணிகளைச் சுவீகரிக்க அரசு திட்டமிட்டிருப்பதாகவும் அவர் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி என்ற போர்வைக்குள், இன்னும் மிகக் குறுகிய காலத்தில், தமிழர் பிரதேசங்கள் மட்டுமன்றி, தமிழ் மக்களின் குடிப்பரம்பல் மற்றும் குடிசன எண்ணிக்கையும் முழுங்கப்படுவதற்கான அறிகுறிகள் மேல் எழுந்து வருகின்றன.

தட்டிக் கேட்க எவரும் இல்லையெனில் தம்பி சண்டப் பிரசண்டன் என்ற போக்கில், தமிழ் மக்களின் வாழ்வியல் தொடர்புபட்ட அனைத்து அம்சங்களையும், மனித உரிமைகளையும்-

எவ்வளவுக்கு எவ்வளவு மலினப்படுத்த இயலுமோ, அந்தத் திசை நோக்கி நடப்பதனை அரசு நிறுத்தும் என்று எதிர்பார்ப்பதற்கு எந்த அறிகுறியும் தென்படவில்லையே.......!

ஆனால் ஜெனிவாவில் மாத இறுதியில் கொண்டு வரப்பட உள்ள பிரேரணை, தீர்மானமாக உருவெடுப்பதனைத் தடுப்பதற்கு, தன்னாலான ராஜதந்திரத்தைக் கைக்கொள்வதற்குத் துடியாய் துடிக்கிறது......

# அரபு வசந்தம் குறித்து அச்சம் அடைகிறதா அரசு?

சிங்கள மூலம் - மவ்பிம
தமிழில் -வீஎஸ்ரீ

எந்த விதத்திலும் நாட்டையும் அரசையும் காட்டிக் கொடுக்கும் விதத்தில் செயற்பட வேண்டாம் என ஒரு வாரத்துக்கு முன்னர் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி மஹிந்த கருத்து வெளியிட்டிருந்தார். எதற்காக ஜனாதிபதி இத்தகைய கருத்தை அமைச்சரவைக் கூட்டத்தில் வெளியிட்டார் என ஊடகவியலாளரொருவர் அமைச்சரொருவரிடம் வினாவியபோது, இலங்கையிலுள்ள மேற்குலக நாடுகளின் தூதரகங்கள், ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு எதிராக இலங்கை அரசின் அமைச்சர்களின் மனதில் விஷ விதைகளை விதைக்கும் செயற்பாட்டை ஆரம்பித்து இருப்பதாக ஜனாதிபதிக்குத் தகவல் கிட்டியிருப்பதே அதற்கான காரணமென அந்த அமைச்சர் தெரிவித்திருந்தார்.

1964 ஆம் ஆண்டில் அரசு பதவியிலிருந்து அகற்றப்பட்டபோது, அவ்வேளைய பிரதமர் சிறிமாவோ, அரசை வீழ்த்துவதற்காக அமெரிக்க சீ.ஐ.ஏ. உளவுச் சேவை அரசுக்கு எதிராக வாக்களிப்பதற்காக அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு லஞ்சம் வழங்கியதாக குற்றம் சாட்டியிருந்தார். 2001 ஆம் ஆண்டில் அரசு வீழ்த்தப்பட்ட போதும் கூட அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா அத்தகைய குற்றச்சாட்டொன்றையே சுமத்தியிருந்தார். 2008 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் போது அரசை வீழ்த்த ஐ.தே.கட்சி முயற்சித்த போது கூட மஹிந்த ராஜபக்ஷ அத்தகையதொரு குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

மேற்குறிப்பிட்ட மூன்று சந்தர்ப்பங்களிலும் மேற்குலக நாடுகளோ, விடுதலைப் புலிகளோ அரசின் அமைச்சர்களின் மனங்களில் விஷ வித்துக்களை விதைக்கவில்லை. தொடர்ச்சியாக அரசில் தாம் புறமொதுக்கப்பட்டமையாலேயே அமைச்சர்கள் அரசினின்றும் வெளியேறினார்கள். 1964 ஆம் ஆண்டில் அதுவரை அரசின் முக்கிய அமைச்சராக இருந்த சீ.பீ.டி. சில்வா, தம்மைப் புறமொதுக்கிவிட்டு பிரதமராயிருந்த சிறிமாவோ, அரசில் புதுமுகமாக அறிமுகப்படுத்தப்பட்ட பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவையும், இடதுசாரிகளாக என்.எம்.பெரேரா தரப்பினரையும் அரசில் முன்னணிக்குக் கொண்டு வந்ததன் காரணமாக வெறுப்புற்றே அரசிலிருந்து வெளியேறினார். 2001 ஆம் ஆண்டில் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த எஸ்.பி.திஸநாயகா சந்திரிகாவின் அரசினின்றும் வெளியேறியமை, 1999 இல் சந்திரிகாவை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற வைக்க முழுவீச்சில் செயற்பட்ட தன்னை சந்திரிகா புறமொதுக்கியதால் ஏற்பட்ட விரக்தி காரணமாகவே ஆகும். 2007 ஆம் ஆண்டில் மங்கள சமரவீர அரசினின்றும் வெளியேறியமை, 2005 ஆம் ஆண்டில் மஹிந்தவை ஜனாதிபதியாக்க அயராது உழைத்த தம்மை அரசில் புறமொதுக்கி வைத்ததனால் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாகவே. அதே போன்று அனுர பண்டாரநாயகவும், தமக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட பிரதமர் பதவி வழங்கப்படாததால் ஏற்பட்ட மனவெறுப்புக் காரணமாகவே அரசினின்றும் வெளியேறினார்.

இம்மூன்று சந்தர்ப்பங்களிலும் இடம்பெற்ற அரசியல் மாற்றங்களுக்குக் காரணம் அரசின் இரண்டாம் நிலைத் தலைவர்கள், அரசுத் தலைமைகளின் புறமொதுக்கல்களால் மனதுடைந்து அரசை வீழ்த்தத் துணிந்ததன் காரணமாகவே அவ்வேளைய அரசுகள் கவிழ நேர்ந்தன. 1964 ஆம் ஆண்டில் சி.பி.டிசில்வாவும், 2001 ஆம் ஆண்டில் எஸ்.பி.திஸநாயகாவும், 2007 ஆம் ஆண்டில் மங்கள சமரவீரவும், 1991 இல் லலித் அத்துலத் முதலி மற்றும் காமினி திஸநாயகாவும் அவ்வவ் வேளைகளில் அரசில் இரண்டாம் நிலைத் தலைவர்களாக இருந்த தாம் அரசின் முதல் நிலைத் தலைவர்களால் புறமொதுக்கப்பட்டமையாலேயே அரசினின்றும் வெளியேறி அரசைக் கவிழ்க்க முயன்றனர்.

இது இலங்கையில் ஆட்சியிலிருந்த அரசுகள், எதிர்பாராத வகையில் அரசின் உள் வீட்டுக்குள் உருவான பேதங்களால் கவிழ்க்கப்பட்ட விதங்களாகும்.

அதேவேளை வேறு இடங்களிலும் கூட இத்தகைய சம்பவங்கள் நிறையவே இடம்பெற்றுள்ளன. அண்மைக் காலத்தில் உலக அரசியலில் தலைதூக்கிய அரபு வசந்தத்தின்போது அரசுகள் வீழ்ச்சி காண நேர்ந்ததுண்டு. வெளிநாடுகளில் கூட அரசுகளில் பொறுப்பான அமைச்சர் பதவிகளை வகித்தவர்கள். அரசினின்றும் வெளியேறியதைத் தொடர்ந்து அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தமை வரலாறு.

அந்த வகையில் லிபியாவின் அரச தலைவர் கடாபியின் வீழ்ச்சி குறிப்பிட்டுக் கூறக் கூடியதொரு உதாரணமாகும். ஒரு சந்தர்ப்பத்தில் கடாபியின் தலைமையிலான அரசில் அங்கம் வகித்த வெளியுறவு அமைச்சர், பெற்றோலியத் துறை அமைச்சர், பொலிஸ் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோர் நாட்டை விட்டுத் தப்பி வெளிநாடுகளில் தஞ்சமடைந்தனர். இவ்விதம் அரசில் முக்கிய பொறுப்புக்களை வகித்த அமைச்சர்கள் ஒரேயடியாக நாட்டை விட்டுத் தப்பியோடி அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகளில் தஞ்சமடைந்ததையடுத்தே கடாபியின் வீழ்ச்சி ஆரம்பமாயிற்று.

தென்னாசிய வட்டகை நாடான மாலைதீவிலும் இத்தகைய அரசியல் மாற்றம் ஏற்பட்டமை நாமறிந்ததொன்றே. 2008 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் நஷீட் போட்டியிட்டபோது துணை ஜனாதிபதி வேட்பாளராக வகீட் கட்சியால் நியமிக்கப்பட்டார். 2012 ஆம் ஆண்டில் மாலைதீவிலும் அரபு வசந்தம் தலைதூக்கியபோது துணை ஜனாதிபதி வகீட், நாட்டின் ஜனாதிபதியான நஷீட்டுக்கு எதிராகச் சதிப் புரட்சியொன்றை மேற்கொண்டார். தம்மை ஜனாதிபதிப் பதவியிலிருந்து அகற்ற வகீட் மேற்கொண்ட சதியே அதுவென ஜனாதிபதி நஷீட்டுக்கு காலம் கடந்தே புரிந்தது. தமக்கெதிராக உருவான அரபு வசந்தத்தால் குழப்பமடைந்த ஜனாதிபதி நஷீட் அதற்கெதிராக கடும் அடக்குமுறையைப் பிரயோகித்தார். தமக்கு எதிராக கிளம்பிய பொதுமக்களை ஈவிரக்கமின்றி அடக்கி ஒடுக்க முயன்றார். நாட்டின் பொலிஸாரையும் இராணுவத்தினரையும் ஜனாதிபதி நஷீட்டுக்கு எதிராகச் செயற்பட வைத்த துணை ஜனாதிபதி வகீட், நஷீட்டை ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலக வைப்பித்து தாமே மாலைதீவின் ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றிக் கொண்டார். இது தமக்கெதிரான சர்வதேசச் சதியென பின்னர் பதவியிழந்த நஷீட் குற்றம் சாட்டத் தவறவில்லை.

இதே போன்று தான் மிக அண்மையில் உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யனுகோ விச்சி, தமது ஜனாதிபதிப் பதவியைக் கைவிட்டு சொல்லாமல் கொள்ளாமல் நாட்டினின்றும் தலைமறைவானார். தமக்கெதிராக உருவான அரபு வசந்தத்தால் பொறுமையிழந்த ஜனாதிபதி விக்டர் யனு கோவிச்சி நாடாளுமன்றத்தில் மக்கள் புரட்சியை அடக்கியொடுக்குவதற்கான சட்ட மூலத்தை நிறைவேற்றி தமக் கெதிராக கிளர்ந்தெழுந்த நாட்டின் பொது மக்களை அடக்கி ஒடுக்க முற்பட்டார். அதனைத் தம்மால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை எனக் காரணம் கூறி அந்த நாட்டின் பிரதமர் தமது பதவியைத் துறந்து வெளியேறினார். பதவி விலகிய பிரதமரின் இடத்துக்கு மற்றொருவரை நியமிக்க இயலாத அளவுக்கு மக்கள் எதிர்ப்பைச் சந்திக்க நேர்ந்த ஜனாதிபதி விக்டர் யனுகோவிச்சி கடைசியில் மேற்குலகச் சதியில் சிக்கி பிரதமர் நாட்டுக்கும் அரசுக்கும் துரோகம் இழைத்து விட்டதாகக் குற்றம் சாட்டிவிட்டு சொல்லாமல் கொள்ளாமல் தலைமறைவாக நேர்ந்தது.


அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட, நாட்டைக் காட்டிக் கொடுக்க முயல வேண்டாமெனத் தமது அமைச்சரவை உறுப்பினர்களுக்கு எச்சரித்திருப்பது, பண்டாரநாயக பரம்பரையினரின் தலைமையிலான அரசுகள் வீழ்ச்சியுற்ற வரலாறு, மறைந்த ஜனாதிபதி பிரேமதாசவுக்கு எதிராக குற்றவியல் பிரேரணைச் சதி மேற்கொள்ளப்பட்டமை, அரபு வசந்தம் என்ற பொது மக்கள் எழுச்சி அண்மைக் காலமாக உலக அரசியல் அரங்கில் தலைதூக்கி அரசுகளை ஆட்டிப் படைப்பது என்பவற்றையெல்லாம் மனதில் ஒரு கணம் கணக்கிட்டுப் பார்த்ததன் காரணமாக இருக்கக் கூடும்.

2011 ஆம் ஆண்டில் அவ்வேளைய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பிடரறிக்கா புதனீஸ், சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து, அவ்வேளையில் சிறைவாசம் அனுபவித்து வந்த முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை சிறையிலிருந்து விடுவிக்காவிட்டால், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடும் நெருக்கடியை அரசு சந்திக்க நேருமென எச்சரித்திருந்தார். அதைக் கேட்டு ஜனாதிபதி மஹிந்த கடும் கோபமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அமெரிக்கத் தூதுவர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் அத்தகைய கருத்தை வெளியிட்டமை, திட்டமிட்டே அரசுக்குள் பிரிவினையை ஏற்படுத்துமொரு சதி முயற்சி என அவ்வேளையில் அரசு விமர்சித்திருந்தது.

2011 ஆம் ஆண்டில் அமெரிக்கத் தூதுவர். அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேசியதைக் கண்டு ஜனாதிபதி மஹிந்த அந்த அளவுக்கு அச்சமடைந்திருந்தால், அண்மைய நாள்களாக மேற்குலக நாடுகளின் தூதுவர்கள், அடிக்கடி அமைச்சர்களைச் சந்தித்து உரையாடுவது குறித்து அரசு அச்சமடையாதிருந்தால் அது ஆச்சரியத்துக்கு உரியதொன்றே.

லிபியாவின் அரச தலைவர் கடாபியின் வீழ்ச்சி குறிப்பிட்டுக் கூறக் கூடியதொரு உதாரணமாகும். ஒரு சந்தர்ப்பத்தில் கடாபியின் தலைமையிலான அரசில் அங்கம் வகித்த வெளியுறவு அமைச்சர், பெற்றோலியத் துறை அமைச்சர், பொலிஸ் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோர் நாட்டை விட்டுத் தப்பி வெளி நாடுகளில் தஞ்சமடைந்தனர். இவ்விதம் அரசில் முக்கிய பொறுப் புக்களை வகித்த அமைச்சர்கள் ஒரேயடியாக நாட்டை விட்டுத் தப்பியோடி அமெரிக்கா உட்பட்ட மேற் குலக நாடுகளில் தஞ்சமடைந் ததையடுத்தே கடாபியின் வீழ்ச்சி ஆரம்பமாயிற்று.

# சித்த மருத்துவத்தில் மூட்டுவாத நோய்கள்



சித்த வைத்திய ரீதியாகச் சொல்லப் போனால், மூட்டுக்கள் எல்லாம் சிலேற்பனத்தின் ஸ்தானமாக கூறப்பட்டுள்ளது. வாத தோசம் அதிகரித்த நிலையிலேயே மூட்டுவாத நோய் ஏற்படுகிறது. வாத தோசம் அதிகரிக்கும் போது வறட்சித் தன்மை அதிகரிக்கும். இதனால் மூட்டுகளுக்கு இடையே காணப்படும் சிலேஷ்மிக கபம் (எண்ணெய்த் தன்மையான பசை) குறைவடையும்.

தொகுப்பு: சித்த மருத்துவபீட மாணவர்கள்



நம்மை நீண்ட காலம் துன்புறுத்தும் நோய்களில் மூட்டுவாத நோயும் ஒன்றாகும். இடுப்பு, கைமூட்டு, கழுத்து, விரல் முதலிய ஒவ்வொரு உறுப்பிலும் பல மூட்டுக்கள் உள்ளன. இந்த மூட்டுக்களின் எலும்புகளை இணைப்பவை திசுக்கள் (சவ்வு) எனப்படும். இந்தத் திசுக்களில் (சவ்வுகளில்) ஆரம்பத்தில் வீக்கம் தோன்றும். பின்பு வலி ஏற்படும். அதன் பின்னர் மூட்டுக்களின் செயற்பாடு குறைவடைந்து உறுப்புகளைச் சரியாக இயக்க முடியாத நிலை தோன்றும்.

சித்த வைத்திய ரீதியாகச் சொல்லப் போனால், மூட்டுக்கள் எல்லாம் சிலேற்பனத்தின் ஸ்தானமாக கூறப்பட்டுள்ளது. வாத தோசம் அதிகரித்த நிலையிலேயே, மூட்டு வாத நோய் ஏற்படுகிறது. வாத தோசம் அதிகரிக்கும் போது வறட்சித் தன்மை அதிகரிக்கும். இதனால் மூட்டுகளுக்கு இடையே காணப்படும் சிலேஷ்மிக கபம் (எண்ணெய்த் தன்மையான பசை) குறைவடையும். இதனால் மூட்டுக்களிடையே உராய்வுத் தன்மை அதிகரித்து வீக்கம், வேதனை, நீட்ட மடக்க முடியாத நிலைமை, மூட்டுக்களின் செயற்பாடு படிப்படியாக குறைவடைதல் போன்றவை ஏற்படும்.

இன்றைய ஆடம்பரமான சொகுசு வாழ்க்கையும் நவீன உணவு வகைகளும் தான் இந்த நோய் ஏற்படக் காரணங்களாக அமைந்துள்ளன.

### இந்த நோய் ஏற்பட அடிப்படைக் காரணம்

நமது உடலைப் பத்து வாயுக்கள் இயக்குகின்றன. இந்த வாயுக்களில் இதயத்தின் செயற்பாட்டை பிராணவாயு இயக்குகின்றது. நாம் உண்ணும் உணவின் கழிவுகளை வெளியேற்ற வைப்பது அபானவாயு. இந்த இரண்டு வாயுக்களும் தமது செயற்பாட்டு இயக்கத்தை விட்டு ஒன்று சேர்ந்து மாறுபட்டுச் செயற்படுவதனால் இந்த நோய் ஏற்படுகிறது. இதற்கான காரணங்கள்;

1. துவர்ப்பு, உறைப்பு ஆகிய சுவைகள்கொண்ட உணவுகளை அதிக அளவில் உண்ணுதல் (கிழங்கு வகைகள், பயிற்றங்காய், பூசணிக்காய், பாகற்காய், ஈரப்பலாக்காய், கீரை வகைகள், தக்காளிப்பழம், பயறு, சோளம், கடலை, எருமை நெய், இறால், நெத்தலி, மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி), மிகுந்த கடினமான வேலைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளல், பகலில் அதிக நேரம் உறங்குதல், மலசலத்தை நீண்ட நேரம் அடக்குதல், தொடர் விரதங்கள் கடைப்பிடித்தல், இரவில் தயிர் போன்ற குளிர் உணவுகளை உட்கொள்ளுதல், அதிக குளிரான இடங்களில் அலைந்து திரிதல், அடிகாயங்கள், பரம்பரை.

### இந்த நோயின் வகைகள்

மூட்டுவாத நோய் அல்லது கீல்வாயு நோயில் 10 வகைகள் காணப்படுகின்றன.

முக்கிய வகைகளின் அறிகுறிகளாவன:

**1. வளிக்கீல்வாயு**

கீல்களில் வீக்கம், வீங்கிய மூட்டுக்களில் தாங்க முடியாத வலி, கை கால்களை நீட்டவும் மடக்கவும் முடியாமை, படபடப்பு, நெஞ்சு வலி, தூக்கமின்மை, காய்ச்சல் போன்ற குணங்குறிகள் காணப்படுவதுடன் மூட்டு வீக்கம், வேதனை என்பன ஒரு மூட்டிலிருந்து இன்னோர் மூட்டுக்கு மாறிக்கொண்டு இருக்கும். ஆங்கில மருத்துவத்தில் இது Rhematic Fever உடன் ஒப்பிடப்படுகிறது.

**2. அழல் கீல்வாயு**

முழங்கால் மூட்டில் வீக்கம், வேதனை காணப்படும். இது நாளுக்கு நாள் கூடிக் கொண்டு வரும். அத்துடன் கீல்களுக்கிடையே உள்ள பசை வறண்டு அசையும் போதெல்லாம், 'கலுக் கலுக்' என்ற ஓர் ஒலி உண்டாகும்.

**3. ஐயக்கீல்வாயு**

மூட்டுக்களில் வீக்கம், வேதனை காணுவதுடன் உடல் இளைத்து உருவத்தை மெலிவாக்கும். இருமல், விக்கல், மாலை வேளையில் காய்ச்சல் போன்றன காணப்படும்.

அதிகரித்த கப தோசத்தால் மூட்டுக்களிடையே சீழ் ஏற்பட்டு எலும்பைத் துளைத்துச் செல்லும். அதிகரித்த சீழ் அல்லது நீரினால் முழங்கால் மூட்டு வீங்கிக் காணப்படும்.

ஆங்கில மருத்துவத்தில் இது Tubercular arthritis உடன் ஒப்பிடப்படுகிறது.

**4. வளி அழல் கீல்வாயு**

உண்ட உணவு செரியாமல் புளித்த ஏப்பம் உண்டாதல், வயிற்றுக்குள் காற்றுக்கூடி அடிக்கடி காற்றுப் பறிதல், மலக்கட்டு ஆகிய குறிகுணங்களைக் காட்டி, மணிக்கட்டு, கணுக்கால், விரல்கள் ஆகிய கீல்களில், சிவந்து எரிச்சலையும் வலியையும் உருவாக்கும்.

ஆங்கில மருத்துவத்தில் gouty arthritis உடன் ஒப்பிடப்படுகிறது.

**5. வளி ஐயக் கீல்வாயு**

மூட்டுக்களில் வீக்கம், வேதனை ,குத்தல், குடைதல் உண்டாவதுடன் உடல் நாளுக்கு நாள் இளைத்தல், தோலுக்குக் கீழ் கழலைகள் உருவாகுதல் போன்றன காணப்படும். வீக்கம் கண்ட கையோ காலோ சூம்பி மெலிவடைந்து செயலற்றுப் போகும்.

ஆங்கில மருத்துவத்தில் Rhermatoid arthritis உடன் ஒப்பிடப்படுகிறது.

80 வகையான வாத ரோகங்களில் மூட்டுக்களைப் பற்றிச் சில நோய்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமானவை.

**1. காளாஞ்சுக வாதம்**

கை, கால்களில் மூட்டுக்களில் வேதனை, நடக்க முடியாமை, பலவீனம், தோலில் படைகள், சொறி போன்றன காணப்படும். ஆங்கில மருத்துவத்தில் இது Psoriatic arthritis உடன் ஒப்பிடப்படுகிறது.

**2. நரித்தலை வாதம்**

முழங்கால் மூட்டு போன்று வீங்கிக் காணப்படும். வேதனை, நீட்ட, மடக்க முடியாமை போன்ற குறிகுணங்கள் காணப்படும்.

ஆங்கில மருத்துவத்தில் இது Gonorrhoeal Arthritis உடன் ஒப்பிடப்படுகிறது.

**3. மலைதம்பக வாதம்**

மணிக்கட்டில் வீக்கம், வேதனை காணப்படுவதுடன் கை, கால்களில் நடுக்கம் காணப்படும். உதடுகள் நீல நிறமாகக் காணப்படுவதுடன் வெடிப்புகளும் காணப்படும்.

**4. சந்து வாதம்**

உடலில் உள்ள மூட்டுகளில் வேதனை காணப்படுவதுடன் உடல் குத்தல் , வேதனை காணும், நடக்க முடியாமை, மயக்கம் போன்றவையும் காணப்படும்.

### மூட்டுவாத நோய்க்கான பொதுவான சிகிச்சை முறைகள்

1. சிகிச்சை ஆரம்பிக்க முன்பு பேதி மருந்து எடுப்பது நன்று. பேதி மருந்தை வைத்திய ஆலோசனைப்படியும் நிலைமைகளுக்கு அமையவும் தீர்மானிக்க வேண்டும்.
2. ஆரம்பத்தில் மூலிகை வகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகளையும் பின்பு தாதுச் சரக்குகளால் தயார் செய்யப்பட்ட மருந்துகளையும் நோயாளியின் உடல் வன்மைக்கு ஏற்றவாறு வழங்க வேண்டும்.

### பொதுவாக சித்த வைத்தியசாலைகளில் வழங்கப்படும் மருந்துகள்

1. குடிநீர்- 300மி.லீ, இருவேளை.

தசமூலக் குடிநீர், பலாவில்வ சுண்டி, இராசன சப்தக, இராசன பஞ்சகக் குடிநீர், ஓரண்ட சப்தக குடிநீர்.

2. சூரணம்- 1-2g, இருவேளை.

பறங்கி கிழங்கு சூரணம், முடக்கு சூரணம், வெள்ளறுகு பஸ்பம்,அமுக்கிராய் சூரணம், தசமூல சூரணம்.

3. மாத்திரை- 1-2, இருவேளை.

யோகராஜ குக்கிளு, சீதாராம வட்டி, இராமபாண, சின்னச் சிவப்புக் குளிகை, வாத கஜேந்திரன் குளிகை, வாத ராட்சதன் குளிகை.

4. செந்தூரம்- 80-180mg, இருவேளை.

ஆறுமுக செந்தூரம், அயவீர செந்தூரம், வங்கசுண்ணம், பூரண சந்திரோதயம்.

5. மெழுகு- 10-15 grains, இருவேளை.

இரச கெந்தி மெழுகு, நந்தி மெழுகு, வான் மெழுகு, அம்பர் மெழுகு.

6. வெளிப்பூச்சு மருந்துகள்.

A. சிவப்பு குக்கில் தைலம், மெருகன் தைலம், நாராயணத் தைலம், சரசபாதித் தைலம், தாளங்காய் எண்ணெய், வாத கேசரித் தைலம், உழுந்து எண்ணெய், மெழுகு எண்ணெய் போன்றன.

B. **ஒற்றணம்.**

நொச்சி, தழுதாளை, வாதநாராயணன், ஆமணக்கு, முடக்கொத்தான், எருக்கலை, பாவட்டை, சண்டி, இயங்கு ஆகியவற்றின் இலைகளை சிறிது சிறிதாக வெட்டி கிழிகட்டி சூடாக்கி எண்ணெய் பூசிய பின்பு நன்றாக ஒற்றணமிட வேண்டும்.

மெழுகுத் தைலம் தடவியிருந்தால் ஒற்றணமிடக்கூடாது. கம்பளப் பட்டியைச் சுற்றி வைத்தால் போதுமானது.

C. **பற்று வகைகள்.**

மூசாம்பர பற்று, களற்சிப் பற்று, காவிக்கல் பற்று, பப்பாக்காய் பற்று, வாதப் .பற்று, லாக்சாதி லேப, தசாங்க லேப.

7. கை மருந்துகள்.

i வெள்ளறுகு சமூலத்தை முறைப்படி குடிதண்ணீரிட்டுக் கொடுக்கலாம்.

ii வெங்காயம், கறிவேப்பிலை, சுக்கு ஆகிய வற்றை வகைக்கு 20g எடுத்து 40g கடுக்காய் தோலை சேர்த்துப் போட்டு கசாயம் செய்து 3-4 அவுன்ஸ் வீதம் காலையில் மட்டும் குடித்து வரவேண்டும்.

iii வெங்காயம், கோரைக் கிழங்கு, சுக்கு, வெட்டிவேர், பற்படாகம் வகைக்கு சம எடை எடுத்து சேர்த்து இடித்து கசாயம் செய்து ஒரு அவுன்ஸ் தினம் 3 வேளை குடித்து வர வேண்டும்.

iv புதினா இலையில் சட்னி செய்து சாப்பிட்டு வரவேண்டும்.

v வேப்பம்பட்டை ஒரு பங்கு திப்பிலி 2 பங்கு குடிதண்ணீர் செய்து குடிக்கலாம்.

மாவிலங்கு இலைச்சாறும் தேங்காய்ப்பாலும் சமஅளவு கலந்து 90ml தினம் இருவேளை.

### வெளிப் பிரயோகம்

1. ஊமத்தம் இலை, அரிசி மா அல்லது குரக்கன் மா ஓர் அளவாக எடுத்து நீர் விட்டரைத்து களிபோல் வேக வைத்து மூட்டைச் சுற்றிக் கட்டலாம்.
2. நொச்சி இலையை ஆமணக்கெண்ணெயில் வதக்கி ஒற்றடம் போடலாம்.
3. குப்பைமேனி இலையை அரைத்து சுண்ணாம்புடன் கலந்து பூசலாம்.
4. கருஞ்சீரகத்தை வெந்நீர் விட்டு அரைத்து மேற்பூச்சாக பூசலாம்.
5. வெங்காயத்தை அரைத்து கடுகெண்ணெயுடன் கலந்து பூசலாம்.
6. பற்படாக வேரை எண்ணெயில் போட்டுக் காய்ச்சி கீல்வாயு வீக்கங்களுக்கு பூசலாம்.
7. சதகுப்பை, வெங்காயம் சம அளவு எடுத்து அரைத்து தொடர்ந்து பற்று போட்டு வர நல்ல குணம் தெரியும்.

**உணவு**

1. இருமுறை வடித்த சோறு, கத்தரிப் பிஞ்சு, அவரைப் பிஞ்சு, வெள்ளாட்டுக்கறி, காடை, கவுதாரி போன்றனவும்.
2. கீரை வகைகளில் முடக்கொத்தான், அறக்கீரை, பொன்னாங்காணி, தூதுவளை, வேளைக்கீரை, மூக்கிரட்டை, தீராய் ஆகிய வகைகளை மாற்றி மாற்றிக் கொள்வது நன்று.
3. பருப்பு வகைகளில் துவரை ஒன்றே நன்று.

**படுக்கை**

1. ஈரமில்லாத தரையிலும், ஈரமில்லாப் படுக்கையிலும் படுத்தல் வேண்டும்.
2. காய்ந்து ஆறிய தரையிலும் படுத்தலாகாது.
3. மிக்க காற்றோட்டம் உள்ள இடங்களிலும், குளிர் காற்றும், மோதுகின்ற காற்றும் உடலில் படும்படியான இடங்களிலும் படுக்கக் கூடாது.

மூட்டுவாத நோய்க்கு தேவையான அளவு ஓய்வு அவசியம். அத்துடன் ஓர் இடத்தில் அல்லது ஒரு கதிரையில் தொடர்ந்து உட்கார்ந்து இருக்கக் கூடாது.

**உசாத்துணை நூல்கள்.**

1. சித்த மருத்துவம் தொகுதி-4. வாதம் தொடர்பான நோய்கள் (மரு. வி. சுப்பிரமணியம்) p.71-93.
2. குப்புசாமி முதலியார், சித்த மருத்துவம் p.483.
3. சண்முகவேலு M, நோய்நாடல் நோய் முதல் நாடல் திரட்டு part II, p.130.

உத்தமராயன் c.s; சித்த மருத்துவாங்க சுருக்கம்; p.52.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: எதிர்பார்த்த உதவிகள் தாமதமாகக் கிடைக்கும். வியாபாரத்தில் போராடி பாக்கிகளை பெறுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிருங்கள். எதிலும் போராடி வெல்வீர்கள்.



**இடபம்**: எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக்கொடுப்பீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.



**மிதுனம்**: சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புக்களை ஏற்பீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்களால் இலாபம் பெருகும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.



**கடகம்**: உங்கள் பிடிவாதப்போக்கை சிறிதளவு மாற்றிக்கொள்வீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். விலகிச்சென்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் கூடுதல் இலாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.



**சிங்கம்**: உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும். முன்கோபத்தைத் தவிர்க்கப்பாருங்கள். புது முதலீடுகளை தவிர்க்கவும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள் வீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது.



**கன்னி**: வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.



**துலாம்**: எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய உறவினர், நண்பர்கள் தேடி வந்துப் பேசுவார்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள். உத்தியோகத்தில் உங்களின் உழைப்புக்கு பாராட்டு கிடைக்கும்.



**விருச்சிகம்**: உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்து கொள்வீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.



**தனுசு**: பழைய பிரச்சினைக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். புதிய வேலை அமையும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளையும் தாண்டி முன்னேறுவீர்கள்.



**மகரம்**: தன்னிச்சையாகச் சில முடிவுகள் எடுப்பீர்கள். அதிகார பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. வேற்றுமதத்தவர் உதவுவார். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு அதிகரிக்கும்.



**கும்பம்**: நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். தோற்றப் பொலிவு கூடும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.



**மீனம்**: கடந்த காலத்தை நினைத்து அவ்வப்போது கொஞ்சம் பதற்றம் அடைவீர்கள். நல்ல வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருத்தப்படுவீர்கள். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள்.

## நாளை

**மாசி-22 வியாழக்கிழமை | 06.03.2014**

திதி: பஞ்சமி மு.ப.09.03 வரை
நட்சத்திரம்: பரணி
மு.இ.06.46 வரை

சுபநேரம்: 07.55-09.25 வரை
இராகுகாலம்:.01.55-03.25 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### குறிக்கோள்


கடவுளும், இயற்கையும் எப்பொழுதுமே தனித்திருப்பன என்பது துவைதக் கருத்து. பிரபஞ்சமும் இயற்கையும் என்றென்றும் கடவுளையே சார்ந்திருக்கும் என்கிறது அது.

தீவிர ஏகான்மவாதிகள் இத்தகைய வேற்றுமைகளை ஏற்பதில்லை. முடிவாக ஆராயும்போது எல்லாம் கடவுளே என்று அவர்கள் கூறுகின்றார்கள். பிரபஞ்சம் கடவுளில் அடங்கிவிடுகிறது; கடவுளே பிரபஞ்சத்தின் அழியாத உயிர்.

அவர்களைப் பொறுத்தவரை, 'எல்லையற்றது' 'எல்லைக்குட்பட்டது' என்பவையெல்லாம் வெறும் சொற்களே. இயற்கை, பிரபஞ்சம் முதலியவையெல்லாம் பெயரளவில்தான் வெவ்வேறாக உள்ளன. இயற்கையே பலவித வேறுபாடுகளைக் கொண்டதுதான்.

"கடவுள் ஏன் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தார்?" "முழுமையானவர், முழுமை அல்லாத ஒன்றை ஏன் படைக்க வேண்டும்?" என்ற கேள்விகளுக்கெல்லாம் ஒரு போதும் பதில் அளிக்க முடியாது. ஏனெனில் இப்படிப்பட்ட கேள்விகளெல்லாம் தர்க்க சாஸ்திர அடிப்படையில் பொருத்தமில்லாதன. பகுத்தறிவே இயற்கையில்தான் இருக்கிறது; இயற்கைக்கு அப்பால் அதற்கு இடமில்லை. கடவுள் சர்வ சக்தி வாய்ந்தவர். ஆகையால், அவர் ஏன் இதைச் செய்தார்? ஏன் அதைச் செய்தார்? என்று கேட்பது அவரை ஒரு வரையறைக்குள் கட்டுப்படுத்துவதாகும். ஏனெனில் இந்தக் கேள்விகளிலெல்லாம் கடவுள் ஏதோ ஒரு நோக்கத்துடன்தான் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தார். என்ற பொருள் மறைமுகமாக அடங்கிக் கிடக்கிறது. அவருக்கு ஒரே நோக்கம் இருந்திருந்தது என்றால் ஏதோ ஒரு குறிக்கோளுக்கு அவர் ஒரு சாதனமாகப் படைப்பை மேற்கொண்டிருக்கிறார் என்றாகிறது. அதாவது, ஒரு சாதனம் இல்லாது அவரால் ஒரு குறிக்கோளை வைத்துக் கொள்ள முடியாது என்றாகிறது. தன்னால் தனியாகச் செயற்பட முடியாது? மற்றொன்றைச் சார்ந்திருக்கும் ஒரு பொருளைப் பற்றித்தான் "ஏன்? எங்கிருந்து?" என்ற கேள்விகளெல்லாம் கேட்க முடியும்.

# இலைகளில் வாழும் அபூர்வ பச்சோந்திகள்



ஆள்காட்டி விரலை விட மிகச்சிறிய இந்த பச்சோந்தி டோக்கியோ நகரில் உள்ள சன்ஷைன் சர்வதேச அக்குவாரியத்தில் இருக்கிறது. இது உலகிலேயே மிக அபூர்வமான புருக்ஷியா மினிமா என்ற இலைப் பச்சோந்தி வகையைச் சேர்ந்தது.

இந்தப் பச்சோந்தியின் நீளம் 3 சென்ரி மீற்றர்தான், எடை 8 கிராம், அதிகபட்சமாக 5 சென்ரி மீற்றர் நீளம் வளரும், இவை மடகஸ்கார் தீவில் வசிக்கின்றன. பெரும்பாலான பச்சோந்திகள் மரத்தின் கிளைகளில் தான் வசிக்கும். ஆனால் இதன் வசிப்பிடமே இலைகள்தான்.

இலைகளில் வந்து உட்காரும் பூச்சிகள் இதனுடைய முக்கிய உணவாகும். இரையைப் பிடிப்பதற்காகவும், இந்த இனப் பச்சோந்திகள் நிறத்தை மாற்றிக் கொள்கின்றன.

நிறம் மாறும் காரணம்

பச்சோந்தி எதையாவது கண்டு கோபம் கொள்ளும் போது அச்செய்தி, நரம்புகள் மூலமாக அதன் செல்களுக்கு எட்டுகிறது. உடனே அந்த செல்கள் கறுப்பாகி விடுகின்றன. பயமோ, பரபரப்போ ஏற்படும்போது அச்செய்தியை ஏற்றுக்கொண்ட செல்களில் நிறம் மங்கலாகவோ, மஞ்சள் புள்ளிகளாகவோ மாறுகின்றன.

சூரிய ஒளியும், பச்சோந்தியின் நிறமாற்றத்துக்கு துணை செய்கிறது. சூரிய ஒளி இல்லாத சூழ்நிலை இதன் நிறத்தை பச்சையாக்குகிறது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலினும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | 1 | | | | 5 | |
| | | 8 | | 9 | 3 | 2 | | |
| | | | 7 | | 8 | 1 | | |
| | 5 | 4 | 6 | 1 | | | | 3 |
| | 1 | 9 | | 5 | | 7 | 8 | |
| 6 | | | | 3 | 9 | 4 | 1 | |
| | | 5 | 9 | | 1 | | | |
| | | 6 | 2 | 4 | | 3 | | |
| | 9 | | | | 6 | | 7 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 9 | 2 | 3 | 1 | 6 | 7 | 4 |
| 4 | 1 | 7 | 6 | 9 | 8 | 5 | 2 | 3 |
| 2 | 6 | 3 | 5 | 4 | 7 | 8 | 1 | 9 |
| 5 | 3 | 2 | 8 | 1 | 4 | 7 | 9 | 6 |
| 6 | 7 | 4 | 3 | 2 | 9 | 1 | 5 | 8 |
| 9 | 8 | 1 | 7 | 5 | 6 | 3 | 4 | 2 |
| 3 | 4 | 8 | 1 | 7 | 2 | 9 | 6 | 5 |
| 1 | 2 | 6 | 9 | 8 | 5 | 4 | 3 | 7 |
| 7 | 9 | 5 | 4 | 6 | 3 | 2 | 8 | 1 |


# பாம்புகளுடன் வாழும் சிறுமி




கள் உள்ள டங்கலாக 30 வகையான ஊர்வனவற்றை வளர்த்து வருகின்றார். அவற்றுடன் சாப்பிடவும் உறங்கவும் விளையாடவும் செய்கிறார் கிறிஸ்டா. பாம்புகள் தொடர்பில் வல்லுநரான கிறிஸ்டாவில் தந்தையான ஜெமியே கிறிஸ்டாவுக்கு 2 வயதாக இருக்கும் போது பாம்புகளை அறிமுகம் செய்து வைத்துள்ளார். தந்தையும் மகளும் வார இறுதியில் உலகின் அதி நச்சு வாய்ந்த ரெட்ல் பாம்பினைத் தேடி வருகின்றனர்.

என்றோ ஒரு நாள் உலகின் ஒவ்வொரு வகை ஊர்வனவற்றையும் சொந்தமாகக் கொண்டிருக்க வேண்டும் என நான் ஆசைப்படுகிறேன் என்கிறார் கிறிஸ்டா.

பாம்பைக் கண்டால் படையே நடுங்கும் என்பது முதுமொழி. ஆனால் 9 வயதான சிறுமி ஒருவர் அச்சமின்றி பாம்புடன் வீட்டில் நெருங்கிப் பழகி வருகின்றார். அமெரிக்காவின் மிச்சிகன் மாநிலத்தைச் சேர்ந்த 9 வயதான கிறிஸ்டா குவாரினோ என்ற சிறுமியே பாம்புகள் மீது அதீத விருப்பம் கொண்டு அவற்றுடன் வாழ்கிறார். சிறு வயதாக இருந்தாலும் பாம்புகளை எவ்வாறு கையாள வேண்டும் என்பதைத் தெளிவாக கற்றுத் தேர்ந்துள்ளார் கிறிஸ்டா. இவர் தனது வீட்டில் ஒரு அனகொண்டா மற்றும் 12 மலைப்பாம்பு






வண்ண வண்ணமாய் தெரியும் குடை மிளகாய் பார்க்க மட்டும் அழகானது அல்ல. ஆரோக்கியத்துக்கும் சிறந்தது.

கொழுப்பு, நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதோடு புற்றுநோயைத் தடுக்கும் ஆற்றலும் அதற்கு உண்டு. காரத்துக்காக பச்சை மிளகாய் சேர்க்கப்படுவதுண்டு. அந்த அளவுக்கு காரமற்றது குடை

# நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும் குடைமிளகாய்




மிளகாய். உணவுகளுக்கு அழகூட்டுவது இதன் சிறப்புத் தன்மை. குடைமிளகாயை உணவில் சேர்ப்பது பல விதங்களில் நமக்கு பயன் அளிக்கிறது.

பல் வலி, மலேரியா, மஞ்சள் காமாலை போன்றவைகளைக் கட்டுப்படுத்தும் சக்தியும் குடைமிளகாய்க்கு இருக்கிறது. குடைமிளகாய் கொழுப்பு மற்றும் நீரிழிவு நோயையும் கட்டுப்படுத்துகிறது.

உடலில் ஏற்படும் நீர்க்கட்டை குறைக்கும் தன்மையும் கொண்ட்து. குடைமிளகாயில் விற்றமின் 'ஏ' மற்றும் 'சி' உள்ளன. இவை இரண்டும் உடல் ஆரோக்கியத்தை பாதுகாக்கின்றன. குடைமிளகாய் மஞ்சள், சிவப்பு, பச்சை போன்ற நிறங்களில் அதிகமாக கிடைக்கிறது.

# இங்கிலாந்தில் அறிமுகமான மிகப் பெரிய விமானம்



உலகின் மிகப்பெரிய 300 அடி நீளம் கொண்ட விமானத்தை இங்கிலாந்து அறிமுகம் செய்துள்ளது.

தற்கால நவீன சொகுசு விமானங்களாகக் கருதப்படும் ஏர்பஸ் 380, போயிங் 747-8 போன்றவற்றை விட இந்தப் புதிய விமானம் 60 அடி அதிக நீளம் கொண்டதாகும்.

50 பயணிகளுடன் ஆகாயத்தில் மட்டுமின்றி நீரிலும் ஊர்ந்து செல்லும் ஆற்றலுடன் சுமார் 60 மில்லியன் பவுண்டுகள் விலையில் இந்த விமானம் அமெரிக்க விமானப் படைக்கு எனபிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டது.

அண்மையில் அமெரிக்க பொருளாதாரத்தில் ஏற்பட்ட மந்த நிலையை அடுத்து அந்த நாடு சில சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அப்போது இந்த விமானத்துக்காக முன்னர் அளிக்கப்பட்டிருந்த முன் அனுமதி ரத்துச் செய்யப்பட்டது.

குறைந்த ஓசையுடனும், எரிபொருள் சிக்கனத்துடனும் இயங்கக் கூடிய இந்த விமானம், நிரப்பப்பட்ட எரிபொருளுடன் சுமார் 3 வார காலம் தரையிறங்காமல் ஆகாயத்திலும், நீரிலும் செல்லும் என்பது குறிப்பிடத்தக்கது.




# ஐந்து ஆண்டுகளுக்குள் உயிரிழப்பு ஏற்படுமா? என்பதை கண்டுபிடிக்கும் இரத்தப் பரிசோதனை

அடுத்த 5 ஆண்டுக்குள் உயிரிழப்பு ஏற்படுமா என்பதை ஆராய்ந்து சொல்லும் அதிநவீன இரத்த பரிசோதனை முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பின்லாந்தின் யுலு பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகப் பணியாற்றுபவர் மைகா அலா கோர்பெலா. இவர் அதிநவீன இரத்தப் பரிசோதனை முறையைக் கண்டுபிடித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்:

இரத்தத்தில் உள்ள நுண்ணுயிரிகளின் அடிப்படையில் ஒருவர் ஆபத்தில் உள்ளாரா, இல்லையா என்பது குறித்து கண்டறிய முடியும்.

அந்த வகையில் பின்லாந்தில் 17,000 பேரின் இரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது.


சிகிச்சை எடுத்துக் கொள்ளாத நிலையில் இருக்கும் சிறுநீரக நோயாளிகள், இருதய நோயாளிகள் ஆகியோரின் இரத்த மாதிரிகளில் அவர்களின் உடல்நிலை எந்த அளவுக்கு மோசமாக இருக்கிறது என்பதை இந்த இரத்தப் பரிசோதனை காட்டிக் கொடுத்துவிடும்.

இதேபோல் பிற நோயால் தாக்கப்பட்டவர்களின் உடல்நிலையையும் இதன் மூலம் அறியலாம். நன்றாக இருப்பவர்களின் இரத்தத்துக்கும், நோயாளிகளின் இரத்தத்துக்கும் பெரிய அளவில் வித்தியாசங்கள் உள்ளன. இதைக் கண்டறியும் நவீன சோதனை, நியூக்ளியர் மேக்னடிக் ரிசோனன்ஸ் ஸ்பெக்ட்ராஸ்கோபி என்று அழைக்கப்படுகிறது.















# காய்கறிகளால் உருவான கலைவண்ணங்கள்

காய்கறிகள், பழங்களைக் கொண்டு விதவிதமான உருவங்கள், மிருகங்கள், பறவைகளை உருவாக்குவதில் பலர் கைதேர்ந்தவர்களாக உள்ளனர். கண் கண்டதை கை செய்யும் என்பதற்கு ஒப்ப காய்கறி, பழங்களைக் கொண்டு அழகுமிகு உருவங்களை உருவாக்குகின்றனர்.











### தேவை

அரச, தனியார் கூட்டுறவு ஸ்தாபனங்களில் உள்ள பழைய காகிதாகிகள், பத்திரிகைகள், புத்தகங்கள் முதலானவற்றை மீள்சுழற்சி பயன்பாட்டுக்காக ஸ்தாபனங்களின் விதி முறைகளுக்கமைய பணம் செலுத்திக் கொள் வனவு செய்கின்றோம். (45365)(2.6.3)

தொடர்பு: 077 418 0185

### வேலையாள் தேவை

கொழும்பில் (வெள்ளவத்தை) உள்ள பிரபல வர்த்தக வியாபார நிலையத்துக்கு ஆள் தேவை. தங்குமிடவசதி, உணவு இலவசம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:077 983 5705,075 626 3680 (சி/12371)(3.6.4)

### வீடுவளவு விற்பனைக்கு

ஆனந்தன் வடலி வீதி (AV Road) அரியாலை கிழக்கில் ஒரு பரப்புக் காணியில் 2 அறைகள், ஹோல், சமையலறை, கிணறு, மலசலகூடம் மற்றும் சுற்றிவர மதில் கட்டிய சகல வசதியும் கொண்ட வீடுவளவு விற்பனைக் குண்டு. பார்வையிடும் நேரம் 09.03.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 - 2-30 வரை.

(நிறுவனங்களும் விரும்பத்தக்கது) (45336)(45.6.3)

தொ.பே. 077 154 7488

### ATS Farm

எமது பண்ணையில் இருந்து சுத்தமான பசும்பால், தயிர் என்பன மொத்த விற்பனைக்கு உண்டு. (45348)(2.6.3)

தொடர்பு: 075 264 2824

## விழிநீர் சொரியும் 6 ஆம் ஆண்டு நினைவுகள்



திருமதி
**பூபதி குமாரசாமி**

பிறப்பு 19.01.1937
இறப்பு 12.03.2008

திதி: மாசி மாத வளர்பிறைப் பஞ்சமி

கலங்கரை விளக்கானீர்
கரை சேர்ப்பீர் என்றிருந்தோம்
கடைசியில் பாதிவழியில்
பரிதவிக்க விட்டுச் சென்றீரே!
காத்திருக்கின்றோம் உங்கள் வரவுக்காய்...

குடும்பத்தினர்.
(45333)(2.6.3)
பூபதி', ஐயனார் வீதி,கல்வயல், சாவகச்சேரி.

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் இரத்தினம்
**கந்தவனம்** (வன்னி)
(ஓய்வுநிலை சுகாதார பரிசோதகர்)

மண்ணில்
17.06.1942

விண்ணில்
05.03.2010

கனவினிலும் நினைவினிலும் காண்பதுங்கள் வதனமதே
காலங்கள் கடந்தாலும் கணப்பொழுதும் மறவோமே
ஞாலத்தில் எங்கள் நல்வாழ்விற் (கு) உழைத்தீரே
வாழும்நாள் வரையில் எம் மனதில் வாழ்வீரே!

65, டேவிற் றோட்,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(C/6785) (2.6.3)

### நெல் கொள்வனவு

சகல விதமான நெல் வகைகளும் கொள்வனவு செய்யப்படும். (45327)(7.6.3)
மாப்பியன் மில், சுதுமலை.

### காணி விற்பனைக்கு

உடுவில், ஞானப்பிரகாச வீதியில் இடதுபக்க முதலாம் ஒழுங்கையில் 8¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. அதில் 2½ பரப்புக் காணி துண்டாகவும் விற்கப்படும்.

தொடர்பு:077 194 7426 (45332)(3.6.4)

### வாடகைக்கு உண்டு

அரசடி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஸ்ரீமுருகன் மரக்காலை வாடகைக்கு உண்டு. (45337)(45.6.3)

தொ.பே: 077 817 5926/ 077 803 0659

### ஆசிரியர் தேவை

எமது நிறுவனத்துக்கு பின்வரும் ஆசிரியர்கள் தேவை.

01.சைவசமயம் தரம் 6-O/L 02.கணிதம் தரம் 6-9
03.நிர்வாக உதவியாளர் (முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.)

ஏசியன் அக்கடமி, கேணியடி, கொக்குவில் மேற்கு,
077 740 4883 (45340) (3.6.4)

### உடனடித் தேவை

யாழ்.நகரில் புதிதாக ஆரம்ப மாகும் "ரெஸ்றோரன்ட்" ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.
(இருபாலாரும்)

01.சமையற்காரர், உதவியாளர்
02.உணவு பரிமாறுபவர்
03.வரவேற்பாளர்
04.காசாளர்

வெள்ளி மு.ப. 10.00 மணிக்கு நேரில் வரவும்.

தொடர்பு:077 470 1492
(இரவு 7.00 மணிக்குப் பின் தொடர்பு கொள்க.) (45339) (3.6.4)

## 23ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**இராசம்மா கந்தையா**

மலர்வு: 03.04.1914
உதிர்வு: 05.03.1991

அன்பும் பண்பும் பாசமும்
கொண்டு அனைவரதும்
ஆதரவைப் பெற்ற
உங்கள் வாழ்வு என்றும்
எம் நெஞ்சகலாது
நிலைத்திருக்கும்.

குடும்பத்தினர்,
(மகள்) திருமதி தியாகேஸ்வரி
தில்லைஞானசிங்கம்
16, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (45343)(12.3.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சாமுவேல் செல்வநாயகம்**

தோற்றம் 15*07*1936
மறைவு 14*02*2013

திதி:05.03.2014


புவி மீது புகழ் சேர வாழ்ந்து
விட்டு எம்மை விட்டுப்
போனதேனோ அப்பாவே
எங்குதான் சென்றாலும்
அன்பான உங்களது
ஆத்மாசாந்தி பெறும் என்று
நம்புகிறோம் உங்களுக்காய்
இறைவனையும்
வேண்டுகிறோம்.

என்றுமே உங்கள் நினைவுகள் அகலாத
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
54/2, திருவையாறு, கிளிநொச்சி. (43640)(3.6.4)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு
1939 . 02 . 16

இறப்பு
2014 . 02 . 03



அமரர் **ஆறுமுகம் இராசரத்தினம்**

திதி: வளர்பிறை சதுர்த்தி

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்துவிடல்"


இக்குறளுக்கு பெருமை சேர்க்கும் வண்ணம் வாழ்ந்திட்டீரே!
எம் குலத்தலைவரே எம் குலம் தழைத்திட அளப்பரிய
தொண்டுகள் செய்திட்ட போதிலும் உம் அன்புக் கரத்தினால்
எமை அணைத்து உயர்வுக்கும், ஒழுக்கத்திற்கும் உறுதுணையாய்
நின்றீரே எம் தலைவா! இன்று உம் பிரிவினால் வாடுகின்ற போதிலும்
உம் நினைவுகளுடன் வாழ்ந்த வண்ணம் உம் இழப்பை மறக்கின்றோம்.
கடந்த 03.02.2014 இறைபதம் அடைந்த எமது அன்புத் தந்தையின்
மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசிமூலமும் அனுதாபம்
தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி செய்த
அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்
கொள்வதுடன், இன்று (05.03.2014) புதன்கிழமை எமது இல்லத்தில்
நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும்
மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.152/7A, குட்செட் வீதி,
2ஆம் ஒழுங்கை,
தோணிக்கல், வவுனியா.

குலசேகரி (மனைவி) மற்றும்
பிள்ளைகள்.
024 222 5027/077 507 3591
(43200)(12.)(3.6)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தங்கச்சியம்மா நாகலிங்கம்



நந்தாவிலைப் பிறப்பிடமாகவும், 3 ஆம் கட்டை கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கச்சியம்மா நாகலிங்கம் 01.03.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லர்-தங்கம் தம்பதியரின் ஆசை மருமகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் (முன்னாள் தலைமை ஆசிரியர், குரு/இந்து தமிழ் மகா வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் V.T.நடராஜா ஆகியோரின் அன்புச்சகோதரியும், தில்லைநாயகி (துளசி-கனடா), கிருஸ்ணதாசன் (தாசன்), முருகநாயகி (அகிலா- கனடா), குமாரதாசன் (குட்டி -கனடா), தேவநாயகி (செல்லா -நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரீஸ்கந்தராஜா (காந்தன்-கனடா), பத்மராணி (பத்மா), கீதா (கனடா), ஸ்ரீதர் (ஸ்ரீ-கனடா), திலகேஸ்வரன் (தம்பி- நோர்வே) ஆகி யோரின் அன்பு மாமியும், கருணாகரன், சிவராஜா (விரிவுரையாளர், சந்தைப் படுத்தல் துறை, முகாமைத்துவ வணிக கற்கைகள் பீடம், யாழ். பல்கலைக் கழகம்), சொர்ணதேவா, மனோகரன், பாஸ்கரன் ஆகியோரின் ஆசைக் குஞ்சம்மாவும், யோகராஜ், ஜனனி, அருள்ராஜ், கிருசாந்தி, ஸ்ரீவித்யா, கபில்ராஜ், சந்தியா, ரூபன், தமியா (முன்னாள் ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி), ராஜிதன், மிதுரஜா(5ஆம் வருட மாணவி, சித்தமருத்து வத்துறை- யாழ். பல்கலைக்கழகம்), கஸ்தூரி, மயூரி, அனோஜினி, ரசிகா, ராகேஷ் ஆகியோரின் அன்புபேர்த்தியும், சரண்ஜா, சஜானா, சச்சின், தர்மிகா, ஜனனிகா, மனிசா, ருவித்சன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.03.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3 ஆம் கட்டை,
கல்வியங்காடு,
தொ.பே:021 223 0387, 077 614 1358

தகவல்:
மகன்-கிருஸ்ணதாசன்
(Nila Travels and School Service)
(45345)(3.6.4)

TEGOSL
ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

# அதியுயர் ஊடக விருதுகள் 2013

**சிறந்த ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் 15 ஆவது வருட விருது வழங்கல் நிகழ்ச்சி**

அதியுயர் ஊடக விருது வழங்குவதற்காக இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் பின்வரும் விருதுகளுக்கான விண்ணப்பங்களைக் அச்சு ஊடகத்துறை ஊடகவியலாளர்களிடமிருந்து கோருகின்றது.

- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் சில்வா டி ஞாபகார்த்த விருது
- ஆண்டின் சிறந்த தனித்துவ செய்திக்கான விருது
- ஆண்டின் சிறந்த புலனாய்வுக்கான விருது
- ஆண்டின் சிறந்த சூழலியல் செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது
- ஆண்டின் சிறந்த விளையாட்டு செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான டென்சில் பீரிஸ் விருது (26 வயதுக்கு கீழ்)
- ஆண்டின் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது
- ஆண்டின் சிறந்த வணிக செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த விவரண கட்டுரையாளருக்கான உப்பாலி விஜேவர்தன விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிரிவர்தன விருது. (மும்மொழிகளிலும்)
- நெருக்கடி சூழலில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் கைலாசபதி ஞாபகார்த்த விருது

ஊடகத்துறையைச் சேர்ந்த சிறந்த அனுபவம் வாய்ந்த நடுவர் குழுவின் மூலம் விருதுகளுக்கு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.



இதற்கான விண்ணப்பங்களையும் அறிவுறுத்தல் கையேட்டையும் இல: 96, கிருல வீதி கொழும்பு 05 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது www.slpi.lk, www.pccsl.lk என்ற இணையத்தளத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**விண்ணப்ப முடிவு திகதி 10 ஏப்ரல் 2014 ஆகும்.**

(C/12373) (ஆ)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து


**05.03.2014**

லண்டனில் வசிக்கும்
**சுதர்சன் மீரா** தம்பதியரின்
செல்வப் புதல்வி **சபீனா**
தனது முதலாவது பிறந்த நாளை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் **05.03.2014** இன்று வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா சுதர்சன், அம்மா மீரா லண்டனில் வசிக்கும் அப்பப்பா மயில்வாகனம், அப்பம்மா புஸ்பராணி, இத்தாலியில் வசிக்கும் அன்பு பெரியப்பா சுதாகரன் மற்றும் குடமியன் வரணியில் வசிக்கும் அம்மப்பா மகாலிங்கம், அம்மம்மா இராசமலர், பெரியம்மா தர்மினி, பெரியப்பா பிரதீசன் (சுவிஸ்), அண்ணாமார் சியான், சியாளன் மற்றும் மணிவண்ணன் மாமா, தர்சி அத்தை, மச்சான்மார் மற்றும் லண்டனில் வசிக்கும் மாமா மதியழகன், அத்தை சுமித்திரா, மச்சான், பிரான்சில் வசிக்கும் பாபு பெரியப்பா, மதிவதனி பெரியம்மா, அக்கா அஸ்வினி மற்றும் குடமியனில் வசிக்கும் பூட்டன் சுப்பு, பூட்டி பொன்னாச்சி மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் **சபீனாக் குட்டியைக்** குடமியன் பத்திரகாளி அம்மன் அருளால் பலகலையும் கற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ்க வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

**மயில்வாகனம்** (அப்பப்பா- லண்டன்)




(C/12374)(2.6.3)

## தோணிக்கல் மயானத்தில் இளைப்பாறும் மண்டபம் இன்று திறப்பு

அமரர் ஆறுமுகம் இராசரத்தினம் ஞாபகார்த்தமாக வவுனியா தோணிக்கல் இந்து மயானத்தில் இளைப்பாறும் மண்டபம் ஒன்று இன்று புதன் காலை 8 மணியளவில் அமரரின் குடும்பத்தினரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

8 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த மண்டபம் வவுனியா பிரதேச சபையிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் வவுனியா பிரதேச சபைத் தலைவர் க.சிவலிங்கம், வவுனியாதோணிக்கல் கிராம சேவகர் உட்படப்பலரும் கலந்து கொள்வர். (ஓ-402)

## பண்டிதர் தேர்வுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையினால் நடத்தப்படும் பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், சித் தாந்தபண்டிதர் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள்கோரப் பட்டுள்ளன. இந்தப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர்உரியவிண்ணப் பப்படிவங்களை சைவ பரிபாலன சபையில் (நீராவியடி), நேரிலோ அல்லது கடிதமூலமோ பெற்று எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும். பரீட்சைகள் ஏப்ரல் 18 ஆம், 19 ஆம், 20ஆம்திகதிகளில்சைவ பரிபாலனசபை மண்டபத்தில் நடைபெறும் என்று சபையின் பரீட்சைச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## வவுனியா தமிழ்ச் சங்க நிர்வாகிகள்

வவுனியா தமிழ்ச் சங்கத்தின் வருடாந்த பொது சபை கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் வவுனியா மாவட்ட கலசார உதவியாளர் திருமதி ஜெனானந்த சிவம் தாட்சாயிணி மற்றும் கிராம அலுவலர் சிவசுந்தரம் சிவானந்தன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

புதிய நிர்வாக சபையின் தலைவராக எஸ். என்.ஜி. நாதன், உப தலைவராக க. ஜயம் பிள்ளை, செயலாளராக தமிழருவி த.சிவகுமாரன், உப செயலாளராக கோடீஸ்வரன் பொருளாளராக சி.உதயகுமார் ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாக க.சிவபாலன், ல.சதீஸ்குமார், சி.கஜேந்திரகுமார், சு.விஜயதாஸ், க.அருந்தவ ராஜா, வி.முருகேச பிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஓ-421)

## கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவ பொங்கல் விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும்

## வாணிபர்களுக்கான அறிவித்தல்

நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா எதிர்வரும் **17.03.2014** திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இந்த விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான வியாபார நிலையங்களுக்கான ஏலமும், வாகனத் தரிப்பிடங்களுக்கான ஏலமும் எதிர்வரும் **09.03.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு** ஆலய முன்றிலில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**முக்கிய குறிப்பு:** 2014 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரம், 2014 ஆம் ஆண்டுக்கான கரைச்சிப் பிரதேச சபையின் தற்காலிக உரிமம் என்பன பெற்றிருத்தல் வேண்டும்.
ஏலத்தின்போது முழுப் பணமும் செலுத்தப்படல் வேண்டும்.

**நாகதம்பிரான் ஆலய பரிபாலனசபை.**
**புளியம்பொக்கணை.**

(43542)(2.6.3)



FULL OPTION WHEEL CHAIRS, WHEEL CHAIRS, COMMODE WHEEL CHAIRS FOR INVALIDS WITH ADJESTABLE ARM REST 100% துருப்பிடிக்காத பட்டம், COMMODE CHAIRS.
Available at Colombo Prices- Special Discount to the trade
**VANIKAA SURGICALS**
(Wholesale Dealers of Surgical Laboratory, Chemicals & Healthcare Items)
(சி/12367)(3.6.4)
203, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம். தொ.பே: 222 0077

**KINGS ELECTRONICS**
11A, Stanley Road, Jaffna,
T.P:- 021 222 3857




3 W 180 /=
5 W 230 /=
7 W 280 /=
9 W 360 /=
(45329)(2.6.3)

## பதவி வெற்றிடம்

கட்டட நிர்மாணத்துறையிலும், பொறியியல் ஆலோசனைகளை வழங்குவதிலும் ஈடுபட்டிருக்கும் எமது குழுவோடு இணைந்து செயற்படுவதற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

**01.கணக்காளர்:** (B.com, HNDA, A AT)
**02.களஞ்சியப் பொறுப்பாளர்:** (A/L படித்தவர்கள், வாகனங்கள் - இயந்திரங்களைப் பற்றிய அறிவுள்ளவர்கள்)
**03. விற்பனைப்பிரதிநிதி:** (A/L படித்தவர்கள், கட்டடப் பொருள்களில் அனுபவமுள்ளவர்கள்)

உங்களது சுயவிவரக்கோவையையும், சான்றிதழையும் ஈமெயில், தபால் மூலமாக 7 நாள்களுக்குள் அனுப்பிவைக்கவும்.

**சாருகாயா நிர்மாணம்,** நந்தாவில் ஒழுங்கை, தாவடி.
Email: sarukaya10@gmail.com
(46328)(3.6.4)

## யா/யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை
## பழைய மாணவர்களுக்கான பொதுக்கூட்டம்

| | | |
|---|---|---|
| தலைமை | : | அதிபர் |
| விடயம் | : | 07/2013 சுற்றறிக்கைக்கு அமைவாகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்குப் பழைய மாணவர்களைத் தெரிவு செய்தல் |
| காலம் | : | 15.03.2014 சனிக்கிழமை முற்பகல் 10.00 |
| இடம் | : | பாடசாலை பிரார்த்தனை மண்டபம் |

பழைய மாணவர்கள் அனைவரையும் , சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

யா/யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.
05.03.2014 **அதிபர்.**
(C/12377)(2.6.3)

## French மொழி வகுப்புகள்

வெளிநாடு செல்வோருக்கான France, Canada, Swiss, 2,4,6 மாத கற்கைநெறிகள் தமிழ், ஆங்கில விளக்கத்துடன்

**ஆரம்பம்** **பிரிவு I 07.03.2014 மு.ப 10.00 மணி**
**பிரிவு II 08.03.2014 பி.ப.2.00 மணி**


★ நேர அட்டவணை பொருந்தாதவர்களுக்கு மாற்றியமைத்துத் தரப்படும். இவ்வாசிரியர் ஏற்கனவே எமது நிறுவனத்தில் கற்பித்தவரும் (2006) அரச உயர் தொழிநுட்ப கல்வியகத்தில் விரிவுரையாளராக (Colombo)இல் இருப்பவரும், பரீட்சை தயாரிப்பாளரும், 18 வருட கற்பித்தல் அனுபவம் கொண்டவரும் France City வளாகத்தில் படித்தவரும் France கல்வியகத்தில் (Colombo) நிரந்தர உறுப்பினருமாவார்.
இதுவரை 12000இற்கு மேற்பட்ட மாணவர்கள் கற்று வெளிநாடு சென்றுள்ளார்கள். 1995லிருந்து கற்பித்துக்கொண்டிருப்பவருமாவார்.
★ கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். O/L, A/L London Local பரீட்சை எடுப்பவர்களுக்கும் உகந்தது.

புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
இந்திரகுமார் - 077 429 1587
(45318)(12.3.6)


# கிளி.- பளை வரை நேற்று ஆரம்பித்த ரயில் சேவை




'இண்டைக்காவது வருமா' காத்திருந்த முதியவர்



'சத்தம் கேட்குது வருகுது போல...' ஆவலுடன் சிறுவர்கள்




காத்திருந்து ரயிலைப் பார்வையிட்டு திரும்பிச் செல்லும் மக்கள்



ரயில் நிலையத்துக்கான நினைவுக் கல்லை போக்கு வரத்து அமைச்சர் குமார வெல்கம திறந்து வைக்கிறார். அருகிலே இலங்கைக்கான இந்தியத் தூதுவர்



தனது குழந்தைக்கு ரயிலைச் சுற்றிக்காட்டும் தாய்



பல ஆண்டுகளாக எதிர்பார்த்திருந்த ரயிலைப் பார்க்கத் திரண்ட மக்கள்



ரயிலின் உட்புறத் தோற்றத்தை ஆர்வத்துடன் பார்வையிடும் பெண்கள்

## பாடசாலையைத் தரமுயர்த்தக் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 5

கிளிநொச்சி ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலையைத் தரம் உயர்த்துமாறு பெற்றோர் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சுமார் 200 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் இந்தப் பாடசாலையில் தரம் 9 வரையான வகுப்புகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் தரம் 11 வரையான வகுப்புகளை நடத்தக் கூடிய வகையில் பாடசாலையைத் தரம் உயர்த்துமாறு பெற்றோர் கோரிக்கை மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையில் பல்வேறு வளப்பற்றாக் குறைகள் காணப்படுவதுடன் போக்குவரத்துக் குறைபாடுகளும் நிலவுகின்றது.

எனவே மக்கள் சென்று வரக்கூடிய வகையில் அரச பஸ் சேவையை கிளிநொச்சி வரை நடத்துமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இங்கு தற்போது 423 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## மோட்டார் குண்டு மீட்பு

கொழும்பு,மார்ச் 5

ஹம்பாந்தோட்டை, புன்தல ஒக்கரவா காட்டுப் பகுதியிலிருந்து மோட்டார் குண்டொன்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த குண்டின் நீளம் ஒன்றரை அடி என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் குறித்த குண்டு மீட்கப்பட்டுள்ளது. (ச)


## மரண அறிவித்தல்



### திருமதி திருப்பதி ஜீவகாந்தி

கொழும்பை வதிவிடமாகக் கொண்ட திருமதி திருப்பதி ஜீவகாந்தி 03.03.2014 கொழும்பில் காலமானார்.

அன்னார் ஏழாலை தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ராசம்மா- கந்தையா தம்பதியரின் அன்பு மகளும், M.ஜீவகாந்தி அவர்களின் அன்பு மனைவியும், J.ஜீவநேசன், J.ஜீவபாலன், J.ஜீவ குமாரன் J.ஜீவரூபன், D.ஜீவலதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், அரிய றோகினி, பெசி அன்ரநிசா, சுகந்தினி, ஈவிலின், ஜெயநிதி, டெனிஸ் துரைசாமி ஆகியோரின் அன்பு மாமியாரும், யோசுவா மனோஜ், மைறா நியோமி, றிச்சேட் அன்ர நிசான், றொமிலா நிலக்சி, எனஸ்ரன் ஜீவனோஜ், எல்சிவா ஜீவிக்கா, றிச்சேட் ஜீவாஸ், யோவன்னா ஜீவினி, யெத்தோ டர்ஷீன், யூதா கிறிசின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற மகேஸ்வரி விநாயகமூர்த்தி மற்றும் K.சிறியானந்தம், K.விவேகானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 81/6, ஹம்டன் லேன், வெள்ளவத்தையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (05.03.2014) புதன்கிழமை பி.ப.3.00 மணிக்கு நடைபெறும் ஆராதனையின் பின் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச்செல்லப்படும். வியாழன் 06.03.2014 பி.ப. 4.00 மணிக்கு ஏழாலையில் நடைபெறும் இறுதி ஆராதனையின் பின் ஏழாலை தெற்கு C.A.C.M. சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொ.பே:077 700 8279/011 255 9569

(சி/12298)(3.6.4)



## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி இராமலிங்கம் மயில்வாகனம் (B.Sc.)

(ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி)



கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராமலிங்கம் மயில்வாகனம் நேற்று முன்தினம் (03.03.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், பரமானந்ததேவியின் அன்புக் கணவரும், சுஜித்திரா (மக்கள் வங்கி - வவுனியா), கவிதரன் (பெறியியலாளர்), சுரேசன் (ஆசிரியர் - வவுனியா), சுபாலினி (பிரான்ஸ்), தயாளினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரப்பிரமானந்தம், கலைச்செல்வி (ஆசிரியர் - வவுனியா), சுதர்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், லக்சனா, தாட்சாயினி, அஞ்சனன், சஞ்சை, அஸ்வின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2014) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கைதடி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"உதயதாரகை"
கைதடி மத்தி, கைதடி.
தொ.பே. 077 615 5950/ 021 492 2870/ 077 179 4084

தகவல்:
குடும்பத்தினர்.

(45334)(46.6.3)

# போரில் பாதிப்புற்ற அரச ஊழியர்கள் நிவாரணம் பெற சுற்றறிக்கை வெளியிடுக

### தமிழ்க் கல்வியியலாளர் ஒன்றியம் கோரிக்கை

அச்சுவேலி, மார்ச் 5

"வடக்கு கிழக்கு மாகாணங்களில் போர் நிலைமை மற்றும் இறுதிப் போரின் போது பாதிப்புகளுக்கு உள்ளாகித் தொழில் களை இழந்த அரச உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபனப் பணியாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு புதிய சுற்றறிக்கை ஒன்றை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வெளியிட வேண்டும்" இவ்வாறு கோரிக்கைவிடுத் துள்ளதுதமிழ்க்கல்வியியலாளர்ஒன்றியம்.

இது தொடர்பாக தமிழ்க் கல்வியியலாளர் ஒன்றியம் விரிவான மனு ஒன்றை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச் சருக்கு அனுப்பி வைத்துள்ளது அத்துடன் அமைச் சின் செயலாளரை நேரில் சந்தித்துத் தமது கோரிக்கையை வலி யுறுத்தியும் உள்ளது. 1983 ஆம் ஆண்டு இனக் கலவரத் தினால் தொழில்களை இழந்த அரச, உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபனப் பணி யாளர் களுக்கு நிவாரணம் அளித்தல் தொடர்பாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு. ஏற்கனவே சுற்ற றிக்கை ஒன்றை 2006 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி வெளியிட்டது.

அதன் பின்னர் கடந்த வருடம் மேற்படி சுற்ற றிக்கை புதிய இணைப்பு ஒன்றுடன் கூடியதாக நடைமுறைக்கு வந் துள்ளது. மேலும் 2009 ஆம்ஆண்டுமேமாதம் 30 வரை பாதிப்புக்கு உள்ளாகியவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் விண்ணப் பங்களை அனுப்பி வைக்கும் திகதி கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக் கும் நீடிக்கப்பட் டிருந்தது.

தற்போது தமிழ்க் கல் வியியலாளர்கள் விடுத் துள்ள கோரிக்கையில் புதிய சுற்றறிக்கை ஒன்றை 2009 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி வரை யான காலப் பகுதியில் ஏற்பட்ட இழப்புக் களைக் கருத்தில் கொண்டு நிவாரணம் வழங்கும் வகையில் வெளியிட வேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது. (க-11)

‘சுடர்ஒளி’ இந்த வார இதழில்



அஞ்சலிக்கலாமா இந்த வருடம்?

- நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
- சினிமாக்காரர்களே இனியாவது திருந்துங்கோ
- நெருப்பாற்றை நீந்திக் கடப்போம்
- பண்டாரவன்னியனுக்கு வந்த சோதனை
- பாகிஸ்தானின் தீராத தலையிடி



துடுப்பாட்டத்தை விட காதல் கடிதம் எழுதுவது கடினமானது



சீரடி சாயி பாபாவின் அற்புதங்கள் நிறைந்த தொடர்

‘சாயியே சரணம்’

## மருத்துவ முகாம்

தென்மராட்சி பிரதேச முதியோர் பேரவை யின் அனுசரணை யுடன் சாவகச்சேரியில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமில் பலர் பயன்பெற்றனர். இதில் உயர் இரத்த அமுக்கம் காணப் பட்ட ஆறு பேரும், நீரிழிவு நோயால் மூன்று பேரும் இனங்காணப் பட்டு மேலதிக சிகிச் சைக் காக சாவகச்சேரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். (வ-9)

## தவக்காலச் சிந்தனை

### திருநீற்று புதன்

#### சிலுவை- ஒப்புரவாகுதலின் அடையாளம்

திருச்சபை வரலாற்றின் அதன் வழிபாட்டியலில் லெந்து காலம் அல்லது நோன்பு காலம் அல்லது தபசுகாலம் என பலவாறு அழைக்கப்படும். இந்தக் காலம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தக் காலத்தில் கிறிஸ்தவ மக்கள் உபவாசத்தோடும், கடவுளின் கிருபையை நாடியும், தம் பாவத்தை உணர்ந்து அதனை அறிக்கையிட்டுப் பாவமன்னிப்பை பெற்றுக் கொண்டு கடவுளுடன் ஒப்புரவாகுவர்.

எப்போதுமே நோன்புக் காலத்தின் முதல்நாள் திருநீற்றுப் புதன் அல்லது சாம்பல் புதன் என்று அழைக்கப்படுகின்றது. ஈஸ்டர் அல்லது கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாள் பண்டிகைக்கு முன்வரும் நாற்பது நாள் களை இடையில் வரும் ஞாயிற்றுக் கிழமைகளை கழித்துப் பார்த்தால் நாற்பது நாளின் தொடக் கம் புதன் கிழமையாகவே வரும். ஞாயிற் றுக்கிழமைகளைக் கழிப்பது அல்லது ஒதுக்குவதற்குக் காரணம் அந்த நாள் நமது ஆண்டவர் உயிர்த்தெழுந்த நாள். அது மகிழ்ச்சியான, மகிமை யான, ஆசீர்வாதமான நாள். எனவே அந்த நாள்கள் உப வாச, தபசு அல்லது லெந்து நாள்களாக காட்டப்படவில்லை.

திருநீற்றுப் புதன் அல்லது சாம்பல் புதன் என்பது உள்ள சுத்திகரிப் பிற்கும், பாவ உணர்வுக்கும் ஒதுக்கப்பட்ட நாள். (This is a day for penetance and purification) எமது ஆரம்ப வழித்தோன்றல்கள் தங்கள் பாவத்துக்காக, தங்கள் நாட்டின் தீமைகளுக்கும், பாவத்துக்கும் வேதனைப்பட்டு மனம் கசந்து சாக்கு சட்டையைப் போட்டுக்கொண்டு, தங்கள் தலைகளில் சாம்பல் தூவிக்கொண்டு துக்கம் அனுசரித் தனர். சாம்பல் துக்கத்துக்கும், துயரத்துக்கும் மனவேதனை அடைவதற்கும் அடையாளம். (Through discomfort, they expressed the genumeness of their grief)

ஆனால் கிறிஸ்துவோ உள்ளான உள்ளத்தின் மாற்றமும் பாவ உணர்வும், பாவ அறிக்கையும் செய்து பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது அவரின் விருப்பமாகும். எனவே இன்று குருத்தோலைகளை எரித்து அந்த சாம்பலை நெற்றியில் சிலுவைக் குறியிட்டு துக்கம் அனுசரிப்பது வழிபாட்டியலில் முக்கியமானதாக இருக் கின்றது. லெந்து என்ற வார்த்தை (லென்ஸ்) Lenz என்ற வார்த்தை யிலிருந்து (Dutch) உருவெடுத்து வந்தது. இதற்கு வசந்த காலம் என்று பொருள். வசந்த காலத்தில் மரங்களும் செடிகளும் தங்களுக்கு வேண்டாத இலைகளை உதிர்த்து புதிய இலைகளை, துளிர்களை உதயமாக்கும்.

அவ்விதமே இந்த தபசு காலங்களில் நாம் நமது ஆன்மிக வாழ்வுக்கு வேண்டாத குணங்குறிகளையும், மானிட மாண்புப் பிறழ்வுச் செய் கைகளையும் களைந்தும் அல்லது உரித்தும் செய்த தவறுகளை உணர்ந்து அதற்கான மன்னிப்பைப் பெற்றுக் கொண்டு எம்மால் பாதிப்பில் இருப்பவர்களுக்கு அதற்குரிய மாற்றீட்டு பரிகாரங்களை செய்து நம்மை நாமே சுத்திகரித்துக் கொள்ள அழைக்கப்படுகின்றோம். இந்த லெந்து நாள்கள் மானிட வாழ்வில் எமக்குக் கிடைத்த ஒரு கிருபை யின் காலம். அதனை இவ்வருடம் மிகவும் ஆழமான பக்தி, தியான சிலுவைப் பாத நிகழ்ச்சி களுக்கு ஊடாக சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

*அருட்பணி இ. ராஜ்குமார்.*

சகல அங்கத்தவர்களுக்குமான
கலந்துரையாடல்

எமது சங்கத்தின் தொழிற்பாடுகள் சம்பந்தமான கலந்துரையாடல் நாளை (06.03.2014) வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
(C/12378)
(2.6.3)

தலைவர்,
யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்,
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.




புதுக்கடைத் திறப்புவிழா

இன்று (05.03.2014)
புதன்கிழமை
மாலை 4.56 மணி
தொடக்கம் 6.36 மணி
வரையுள்ள
சுபமுகூர்த்தத்தில்
இல.295, பலாலி வீதி,
யாழ்ப்பாணத்தில்
கோலாகலமாகத் திறந்து
வைக்கப்படுகின்றது
என்பதை
அன்பர்கள் நண்பர்கள்
வாடிக்கையாளர்களுக்கு
மகிழ்வுடன்
அறியத்தருகின்றோம்.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
உரிமையாளர்
077 164 2778

Jaffna Wedding Fair 2014

யாழ் மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரபல திருமண சேவைகள் வழங்குவோர் மற்றும் ஒழுங்கமைப்பாளர்களை ஓரே கூரையின் கீழ் பார்வையிட ஓர் அரிய வாய்ப்பு.



(மணவறை, Settibacks, Cakes, Bridal Makeup, Wedding Cards & Gift, Wedding Car மற்றும் அனைத்து சேவைகளும்)

2014/2015 க்கான
சகலவிதமான
wedding Bookings
20% Off

Little Asia வின் திருமண மற்றும் அனைத்துரக ஆடைகளும் மாபெரும் விலைத்தள்ளுபடி
மற்றும்
முதன்முறையாக யாழ் மண்ணில் Limousine அறிமுகம்

இடம் - இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி
யாழ்ப்பாணம்
காலம் - 09.03.2014
நேரம் - மு.ப08.00 –பி.ப08.00
Tel 0777726367



அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
செல்வம் சிவபாதசக்தி
(சக்தி சேர்)
(பிரபல கணித ஆசிரியர், இயக்குநர்,
கைதடி நியூட்டன் கல்வி நிலையம்)

தோற்றம் 22.01.1958 மறைவு 03.02.2014

எங்கள் குடும்பத்தின் வழிகாட்டியாயிருந்து
ஆதரித்த அன்புத் தெய்வமே
எங்கள் உள்ளங்களில் நீங்கள்
நினைவாய் நின்று வழிகாட்டுவீரே!

குடும்பத்தினர்.


கைதடி தெற்கு,
கைதடி.


# சந்திரிகா-சோபிததேரர் கடந்த வாரம் சந்திப்பு

## அடுத்த ஜனாதிபதித் தேர்தல் குறித்தும் ஆராய்வு

கொழும்பு,மார்ச் 5

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் மாதுலு வாவே சோபித தேரருக்கும் இடையிலான விசேட சந்திப்பு கடந்தவாரம் இடம்பெற்றுள்ளது.



சோபித தேரர்

இந்தச் சந்திப்பில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல், ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படவுள்ள பொது வேட்பாளர் என்பன குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் சில விடயங்கள் சம்பந்தமாக இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன என்று இரு தரப்புக்களுடன் சம்பந்தப்பட்ட தகவல் மார்க்கங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

இந்தச் சந்திப்பு இரு தரப்புகளினதும் ஆரம்பச் சந்திப்பாகும். மேலும் பல சந்திப்புக்கள் இடம் பெறவுள்ளன.



சந்திரிகா

இந்தச் சந்திப்பை விட கடந்த வாரம் அரசதரப்பு அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் , புத்திஜீவிகள் ஆகியோர் சோபிததேரரை சந்தித்துள்ளனர்.

எதிர்காலத்தில் சோபிததேரரின் தலைமையில் உருவாக்கப்படவுள்ள கூட்டணிக்குத் தமது ஒத்துழைப்பை வழங்குவதற்கும் இந்தத் தரப்பினர் தமது விருப்பைத் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பில் அரச தரப்பில் பிரபல அமைச்சர்களான திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர, ராஜித சேனாரத்ன மற்றும் ரெஜினோல்ட் குரே ஆகியோர் கலந்து கொண்டனர் என்று அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-22)


## Words of Peace

இவ் வாழ்க்கையில் ஆனந்தம் சாத்தியமே
தடைகள் ஏதும் கிடையாது.
அந்த எல்லையில்லா ஆனந்தத்தின் ஊற்றை
உங்கள் உள்ளே கண்டுகொள்ளுங்கள்

(45370) (10.14)

பிரேம் ராவத்

For more details and free dvd - 0117 250001
bet 3 pm - 10 pm


# பரப்புரையைப் புறக்கணிக்கும் 8 தொகுதி அமைப்பாளர்கள்

## அடுத்த வாரம் விளக்கம் கோருவார் ஜனாதிபதி

கொழும்பு,மார்ச் 5

மேல் மற்றும் தென்மாகாண சபைத் தேர்தல் பரப்புரைப் பணிகளைப் புறக்கணித்து வரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 8 தொகுதி அமைப்பாளர்கள் குறித்து, ஜனாதிபதிக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தொகுதி அமைப்பாளர்களில் பெரும்பாலானவர்கள், தென்மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி வருபவர்கள் என்று கூறப்படுகிறது.

தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்குமாறு தாம் பரிந்துரைத்தவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்காத காரணத்தால், அவர்கள் இவ்வாறு தேர்தல் பரப்புரையை புறக்கணித்து வருகின்றனர்.

இந்தத் தொகுதி அமைப்பாளர்களை அடுத்த வாரம் அழைத்து ஜனாதிபதி எச்சரிக்க உள்ளதுடன், விளக்கம் கோரவும் உள்ளார் என்று அரச தகவல்கள் தெரிவித்தன. (ச)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
புலவர் ம.பார்வதிநாதசிவம்



தோற்றம் 14.01.1931 மறைவு 05.03.2013

தந்தையாய்த் தாயவளாய் எங்களினைக் காத்திருந்தீர்
தக்கவகை நெறிப்படுத்திக் கலைத்துறையில் வளர்த்தெடுத்தீர்
விந்தைமிகு கவித்திறத்தால் விருதுகளும் பலபெற்றீர்
புலவரெனப் பிறர்போற்றத் தமிழ்க்கடலை நீர் கடைந்தீர்
நொந்தொருசொல் சொல்லாத நுண்மைமிகு குணம்படைத்தீர்
ஆண்டு நூறாகிடினும் உங்களினை நாம் மறவோம்.

நந்தாவில் வீதி, கொக்குவில். (45366)(12.6.3) குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை நாகமுத்து (PHFO)



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும், கைதடி மத்தி குமரநகரை வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை நாகமுத்து (02.03.2014) ஞாயிற்றுக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - பொன்னி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான தம்பியன் - கதிராசி தம்பதியரின் அன்புமருமகனும் தெய்வானை யின் அன்புக்கணவரும் கோகுல ரோகினி, பிரணவராஜன் (ஜேர்மனி), சசிகரன் (லண்டன்), துவாரகன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கோடீஸ்வரன் (அரச முதியோர் இல்லம்), லலிதா (ஜேர்மனி), ஜெயலலிதா (லண்டன்), தாட்சாயினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனும் கஜிதரன் ( சுகாதாரஅமைச்சு அலுவலகம் - வடமாகாணம்), வேணுகா (உள்ளகப்பயிற்சி ஆசிரியை யாழ். தேசிய கல்வியியற்கல்லூரி), தனுஜா (மாணவி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி), பிரசாந்தன், தனுசன், சிந்துஜா, அஜோச், அனுசியா, அபிசன், சியானா, லிர்சன், கரிஷ் ஆகியோரின் பேரனும்ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2014) புதன்கிழமை பி.ப.1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊத்தல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

குமரநகர்,
கைதடி மத்தி, கைதடி

தகவல் :
குடும்பத்தினர்



# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் அதிபர்
திரு.சி.பவளகுமாரன் அவர்களின்
அன்புத் தாயார்

திருமதி தங்கம்மா சின்னத்தம்பி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி, கைதடி.

(C/12603) (10.14)



# மரண அறிவித்தல்

## ஆபிரகாம்பிள்ளை ஜோர்ஜ்



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், ஒட்டகப் புலத்தை வாழ்விடமாகவும், இளவாலை யை வதிவிடமாகவும் கொண்ட ஆபிரகாம் பிள்ளை ஜோர்ஜ் கடந்த (02.03.2014) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப் பிள்ளை - ஞானம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற மரியம்மாவின் அன்புக் கணவரும் சுனித்தா (பிரான்ஸ்), நிக்சன் (பிரான்ஸ்), விஜி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிர்மலாதாஸ் (பிரான்ஸ்), தயாளினி (பிரான்ஸ்), மேரிடீன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமாமனும் ஆர்மல், எனில்டா, ஆர்வின், சமீக்கா, அயலின், அஞ்சோ ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (06.03.2014) வியாழக் கிழமை மு.ப. 10 மணிக்கு இளவாலை அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் அன்னாள் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதான வீதி, இளவாலை

தகவல்:
புகனேந்திரன் குடும்பம்
(மருமகன்)



உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



# மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 இல் பிறந்த டென்மார்க் பிரஜாவுரிமை உடையவரும், தற்போது அமெரிக்காவில் பொறியியலாளராக பணிபுரிகின்ற 5 அடி 10 அங்குலம் உயரமுடைய விவாகரத்துப் பெற்ற, மகம் நட்சத்திரம், 55 பாவமுடைய மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

தொடர்பு:
021 222 6845, 001 647 932 3871 (கனடா)
tmsk1979@hotmail.com

(45345) (10.14)



# 3 பரப்புக் காணியில் வீடு விற்பனைக்கு

கோயில் வீதியில், கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அருகில் 3 பரப்புக் காணியில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 077 371 5844

(45345) (10.14)



penta

கிறீஸ்
டிஸ்பென்சர்ஸ்



Rs. 12,000/= upwards

SamS

GENERAL EQUIPMENTS (PVT) LTD.
316 & 400, Sri Sangaraja Mw, Colombo - 12.
Tel: 2327264, 2343822, 2343823, 2430799. Fax: 2434637, 2345046.



# கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியர்
இ. இராசலிங்கம் அவர்களின்
அன்புமாமனார்.

பொன்னையா
கணபதிப்பிள்ளை

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்

ஆசிரியர் கழகம்
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி



# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் அதிபர்
திரு. சி. பவளகுமாரன் அவர்களின்
அன்புத்தாயார்.

திருமதி தங்கம்மா சின்னத்தம்பி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திகுழு,
பாடசாலை அபிவிருத்திசங்கம்,
பாடசாலை பழையமாணவர்சங்கம்,
யாழ்.கைதடி முத்துகுமாரசுவாமி மகாவித்தியாலயம் கைதடி.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழர்கள்

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளினால் சமர்ப்பிக்கப்பட உள்ள உத்தேச தீர்மானம் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. அதில் சர்வதேச விசாரணை தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ள அமெரிக்காவின் தீர்மானம் தொடர்பில் திருப்தி கொள்ள முடியாது என வடக்கு- கிழக்கில் உள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். இது இலங்கை அரசுக்கு மேலும் அவகாசத்தை வழங்கியுள்ளதுடன் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை ஏமாற்றும் செயல் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு நிகரான வகையிலேயே தற்போதைய தீர்மானமும் அமைந்துள்ளதாகப் பிரிட்டன் தமிழர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

### விடுதியில்

ளப்பட்டது. சமூக விரோதச் செயல்களுடன் தொடர்பு பட்டிருந்த குற்றச் சாட்டில் கடந்த ஞாயிற்றுக் கிழமை 7 பேரும் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர் களில் அரியாலைப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்ட 3 பெண்களும் அதன் நடத்து நருமாக 4 பேரை பொலிஸார் நீதிமன்றில் நேற்று முன் தினம் முற்படுத்தினர்.

அவர்கள் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டு நேற்று வழக்கு மீள எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே அவர்களுக்கு எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறி யல் நீடிக்கப்பட்டது. இவர்க ளைப் பிணையில் விடுவிக்கு மாறு கோரி நேற்றைய தின மும் சட்டத்தரணிகளான மு.றெமீடியஸ், சர்மினி ஆகியோர் மன்றில் கோரியிருந்தனர். எனினும் அவர்க ளுக்கு விளக்கமறியல் உறுதிப்படுத் தப்பட்டது.

இது தவிர யாழ். நல்லூர் கந்த சுவாமி கோயிலுக்குப் பின்புறமாகவுள்ள அம்மன் வீதியில் உள்ள விடுதி ஒன்றில் அனுமதிப்பத்திரமின்றி மசாஜ் நிலையத்தை இயக்கி வந்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட தென்பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்களும் வைத்தியர் ஒருவருமாக மூன்று பேரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று நேற்று முன்தினம் உத்தர விட் டமை குறிப்பிடத்தக்கது. (த-4)

### 3 சிறுவர்

மறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டது. ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ். லெனின் குமார் முன்னிலையில் 32 பேரும் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

நெடுந்தீவுக் கடற்பரப்பை அண்மித்து 32 பேரும் 8 படகுகளுடனும் தடைசெய்யப்பட்ட இழுவை வலைகளுடனும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டுப் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்தி விட்டு கரைக்குக் கொண்டு வரப்பட்டு யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரிடம் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களில் 14, 16 ,17 வயதுகளையுடைய மூன்று சிறார்களும் உள்ளடங்குவர். அவர்களை யாழ்ப்பாணத்திலுள்ள சான்று பெற்ற பாடசாலையில் தங்க வைக்க உத்தரவிட்ட நீதிமன்று, அனைவரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. (த-4-17)

### மோ. சைக்கிள்

தையான பூசகர் காசிநாதர் விக்னேஸ்வரன் (வயது -45) என்பவரே உயிரிழந்த வராவார். கருக்கட்டை முறிப்பு சித்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற சதுர்த்தி பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்காக இவர் மோட்டார் சைக்களில் பயணம் செய்து கொண்டிருந்த போது வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் பேராற்றுப் பாலத்துக்கு அருகில் உள்ள சுமார் 15 அடி ஆழமான பள்ளத்துக் குள் பாய்ந்தது. இதனால் பூசகர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக மாங்குளம் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த-400-422)

### தீவிரவாதம்

நுட்பப் பொருளாதார பல்துறை ஒத்துழைப்பு அமைப்பின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் தீவிரவாதம் தோற்கடிக்கப்பட்டு விட்டாலும், தீவிரவாத அமைப்புகளின் சர்வதேச வலையமைப்புகள் தொடர்ந்து செயற்படுவதால் தொடர்ச்சியான கண்காணிப்பு முக்கியமானதாக உள்ளது. தீவிரவாதம் உலகில் எங்கெல்லாம் உருவெடுக்கிறதோ அது ஒட்டுமொத்த நாடுகளினதும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும்.

மூன்று தசாப்தகாலமாகத் தீவிரவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்தது எமது நாடு. அதன் உண்மையான மனித மற்றும் பொருளாதாரச் செலவு என்னவென்று நாம் அறிவோம். துரதிர்ஷ்டவசமாக அந்தக் காலங்களில் பொருளாதார ரீதியாக இயங்கஎம்மால் முடியவில்லை.

தீவிரவாதம் தோற்கடிக்கப்பட்ட பின்னர், நாட்டின் பொருளாதாரம் கணிசமாக அதிகரித்து 7 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளது என்று ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டார். (த-5)

### மஹிந்த

இந்த அமைப்பில் இலங்கை, இந்திய உட்பட 7 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இதில் பங்கெடுப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் மியான்மார் தலைநகர் நேபிடோ சென்றுள்ளனர்.

மாநாட்டின் பக்க நிகழ்வாக மன்மோகன் - ராஜபக்ஷ சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கை நேரப்படி நேற்று மதியம் 12 மணிக்கு அவர்கள் சந்தித்துப் பேசினர்.

ஜெனிவாவில் இலங்கை தொடர்பில் கொண்டு வரப்படும் பிரேரணையின் நகல் குறித்து இந்தச் சந்திப்பில் இருவரும் விரிவான பேச்சுக்களில் ஈடுபடவில்லை என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களாக ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டை இந்தியா எடுத்த நிலையில் இந்த முறை அது எப்படிச் செயற்படும் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்வதும், இந்தியா இலங்கையின் பக்கம் நிற்க வேண்டும் என்று வலியுறுத்துவதும் இந்தச் சந்திப்பில் மஹிந்த ராஜபக்ஷவின் நோக்கங்களாக இருந்தன என்று கொழும்பு ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் மன்மோகனின் வாயில் இருந்து நம்பிக்கையான வார்த்தைகயை இலங்கை ஜனாதிபதியால் பெறமுடியாமல் போய்விட்டது என்றும் கூறப்படுகிறது.

ஐ.நா. தீர்மான வரைவு குறித்து விரிவான பேச்சு எதுவும் நடக்கவில்லை. இந்த விடயம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் முக்கியமானது என்பதால் இது சம்பந்தமாக இரு தரப்புக்களும் தொடர்ந்தும் தொடர்புகளைப் பேணுவது அவசியம் என உணர்ந்துள்ளோம்" என்று, இரு தலைவர்களினதும் சந்திப்புக்குப் பின்னர் கருத்து வெளியிட்ட இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு மாகாண சபையுடனான ஒத்துழைப்பை இலங்கை அரசு விரிவாக்கும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் மஹிந்த ராஜபக்ஷ இந்தச் சந்திப்பின் போது உறுதியளித்தார் என்று கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. இரு தரப்பு மீனவர்கள் கடல் எல்லையைத் தாண்டும் பிரச்சினை தொடர்பிலும் மேற்படி கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது. (உ-5)

### சர்வதேச

நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. அமெரிக்க அரசின் பிரதிநிதியான அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகளுக்கான கீழ் நிலைச் செய லர் சாரா சியோல் உரையாற்றினார்.

2012, 2013 ஆம் ஆண்டுகளில் இந்தச் சபை இலங்கை அரசிடம், போரில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டமை தொடர்பான சுயாதீனமான விசாரணை நடத்தும்படி கேட்டிருந்தது. ஆனால் இன்று வரையில் இலங்கை அரசு அதனை நிராகரித்து விட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

"இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற முறைகேடுகள் - மீறல்கள் தொடர்பிலும், பத்திரிகை யாளர்கள், மனித உரிமைகளின் பாதுகாவலர்கள், மதச் சிறுபான்மையினர் மீதான மிக அண்மைய தாக்குதல்கள் குறித்தும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் விசாரணை ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்று கூறுகின்ற தீர்மானத்தை அமெரிக்க அரசு அறிமுகப்படுத்தியுள்ளது" என்றார் சாரா சியோல்.

சர்வதேச விசாரணை ஒன்றை இலங்கை மீது வலியுறுத்தும் தீர்மானம் ஒன்றை சர்வதேச நாடுகள் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன் வைக்கும் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அமெரிக்கா முன்வைக்கவுள்ள தீர்மானத்தின் முதற்கட்ட வரைவில் சர்வதேச விசாரணை பற்றி எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இது தமிழர் தரப்புக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்திருந்த நேரத்தில் சர்வதேச விசாரணை ஒன்றுக்கான அழைப்பை அமெரிக்கா விடுத்திருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக உள்ளது என்று அவதா னிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (உ-த)

### வடக்குக்கான

நொச்சி ரயில் நிலையத்திலிருந்து விருந்தினர்களை ஏற்றிக் கொண்டு முதலாவது ரயில் முற்பகல் 11 மணிக்குப் பளையை வந்தடைந்தது.

#### திரண்டனர் மக்கள்

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா, வடக்கு ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் பளைக்கு வந்த முதலாவது ரயிலில் வந்திறங்கினர்.

நீண்ட காலத்தின் பின்னர் பளைக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டதால், ரயிலைப் பார்ப்பதற்காக அங்கு மக்கள் முண்டியடித்தனர். சிறுவர்கள், இளைஞர்கள் என்று ஆயிரக்கணக்கானோர் பளை ரயில் நிலையத்தில் திரண்டனர். இவர்கள் ரயில் நிலைய மேடையிலிருந்து கீழே தவறிவிழாமல் ரயில்வே ஊழியர்களும், பொலிஸாரும் பாதுகாத்து நின்றனர்.

#### நிகழ்வுகள் ஆரம்பம்

பளை ரயில் நிலையத்தில் வந்திறங்கிய விருந்தினர்கள் முதலில் தேசியக் கொடியை ஏற்றினர். சிங்கள தேசிய கீதத்துடன் இலங்கைக்கொடியை போக்குவரத்து அமைச்சரும், இந்தியத் தேசிய கீதத்துடன் இந்திய தேசியக் கொடியை இந்தியத் தூதுவரும் ஏற்றி வைத்தனர். இதனைத் தொடர்ந்து நிலையக் கட்டுப்பாட்டு அறையைத் திறந்து வைத்ததைத் தொடர்ந்து ரயில் நிலையப் பெயர்ப் பலகை திரை நீக்கம் செய்யப்பட்டது.

இதன் பின்னர், விசேடமாக அமைக்கப்பட்ட அரங்கில் நிகழ்வுகள் இடம்பெற்றன. வரவேற்பு உரையை ரயில்வே திணைக்கள் முகாமையாளர் ஆரியரத்னவும், அதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரும், தொடர்ந்து இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹாவும் இறுதியில் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவும் உரையாற்றினர்.

#### வேலை வாய்ப்புக்கள்

அவர் தனது உரையில், இந்திய அரசு மிகமிகக் குறைந்த வட்டிக்குப் பணத்தை வழங்கி இந்தப் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்துள்ளது. அதற்காக இந்திய அரசுக்கு நன்றி சொல்கின்றோம். தென் பகுதியில் ரயில் பாதைகள் மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கத் தக்கதாகவே அமைக்கப் பட்டுள்ளன. ஆனால் வடபகுதிக்கான ரயில் பாதை 120 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கத்தக்கதாக அமைக்கப்பட்டுள்ளது.

ரயில் சேவைகள் இந்தப் பகுதிக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளதால் இங்கு புதிய வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப் பட்டுள்ளன. இவற்றுக்கு உங்கள் பகுதிகளிலிருந்தே நியமிக்கவுள்ளோம். அத்துடன் நீண்ட கா்லமாக ரயில் போக்குவரத்துக்கள் இங்கு இடம்பெறாததால், ரயில் பாதைகளை ஊட றுத்து மக்கள் தமது போக்குவரத்துப் பாதை அமைத்துள்ளனர்.

எனவே அவர்களால் அவற்றை உடனடியாக நிறுத்தமுடியாது. எனவே அவற்றுக்குப் பாதுகாப்புக் கடவை, அல்லது ஊழியரை நியமித்து அவரூடாக பாதையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

இதேவேளை,

இன்று முதல் கொழும்பு கோட்டைக்கும், பளைக்கும் இடையிலான ரயில் சேவை தினமும் இடம்பெறும் என்றும் இதேவேளை பளைக்கும் கொழும்புக்கும் இடையிலான கடுகதி ரயில் சேவையும் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் ரயில்வே பொது முகாமையாளர் பீ.ஏ.பி ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

அதன்படி தினமும் காலை 5.45 மணிக்குக் கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து புறப்படும் யாழ். தேவி ரயில் பிற்பகல் 1.21 மணிக்கு பளையை வந்தடையும். பளையில் இருந்து கொழும்புவரை பயணிக்கும் யாழ் தேவி காலை 10.40 மணிக்குப் புறப்பட்டு மாலை 6.25 மணிக்குக் கொழும்பைச் சென்றடையும். காலை 06.50 மணிக்குக் கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து புறப்படும் கடுகதி ரயில் நண்பகல் 12.27 மணிக்குப் பளையை வந்தடையும். பிற்பகல் 02.15 மணிக்குப் பளையிலிருந்து புறப்படும் கடுகதி இரவு 08.05 மணிக்குக் கொழும்பை வந்தடையும் என வும் ரயில்வே பொது முகாமை யாளர் அறிவித்துள்ளார். (த-5)

### இலங்கையின்

யின் பதில் அறிக்கையை உரையாக நிகழ்த்துவார்.

மியன்மாரில் நடைபெறும் வங்காள விரிகுடா நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில்

பங்குபற்றுவதற்காகச் சென்றிருக்கும் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நேற்றிரவே ஜெனிவா பறக்க இருந்தார்.

இன்றைய உரையைத்தொடர்ந்து நாளை வியாழக்கிழமை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவிபிள்ளையைச் அவர் சந்தித்துப் பேசுவார்.

மாநாட்டில் பங்குபற்றும் ஒவ்வொரு நாடுகளினதும் தலைமைப் பிரதிநிதிகளை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தனித்தனியாகச் சந்தித்துப் பேசுவது சம்பிரதாயபூர்வ நடவடிக்கையாகும்.

எதிர்வரும் 26ஆம் திகதி சபையில் ஆணையாளர் நவிப்பிள்ளை சமர்ப்பிக்க உள்ள அறிக்கை ஏற்கனவே கசிந்துள்ள நிலையில் அதற்கான பதிலை அமைச்சர் பீரிஸ் இன்றைய உரையில் குறிப்பிடுவார். (உ)

### மஹிந்தவின்

துக்கு யாழ். தேவி வராது. இன்னும் சில மாதங்கள் புனர மைப்புக்குத் தேவை என்பதால் ஜூன் மாதமே அது சாத் தியப்படும்' என்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல் கம பளையில் வைத்துத் தெரிவித்தார்.

கடந்த வருடம் வடக்கு மாகாண சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு அன்று யாழ். தேவி ரயிலில் தான் யாழ்ப்பாணம் வந்து இறங்குவேன் என்று தெரிவித் திருந்தார். இந்த நிலையில் கிளிநொச்சியிலிருந்து பளை வரையிலான ரயில் சேவையை ஆரம்பித்து வைத்த பின்னர், பளை ரயில் நிலையத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம, முன்னர் தெரிவித்ததைப் போன்று எதிர்வரும் ஏப்ரல் மாதம் யாழ். தேவி யாழ்ப்பாணத்துக்கு வரமாட்டாது. இன்னும் சில மாதங்கள் தேவை என்று ரயில் பாதை புனர மைப்பு வேலை களைச் செய்யும் இக்ரோன் நிறுவனம் தெரிவித்திருக்கின்றது. இதனால் ஜூன் மாதமே யாழ். தேவி யாழ்ப்பாணத்தை வந்தடையும் - என்றார். (த-5)

### தலைமன்னா

#### வடக்கு மாகாணசபைத் தீர்மானம்

வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வில், தலைமன்னார் - இராமேஸ்வரம் இடையிலான கடற்போக்குவரத்துச் சேவையை மீள ஆரம்பிக்க வேண்டும் என்று இலங்கை, இந்திய அரசுகளைக் கோருவது எனப் பிரேரணை நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்தப் பிரேரணையைச் செயற்படுத்த முடியாதெனவும், இது தொடர்பில் வடக்கு மாகாண சபைக்கு எதுவித அதிகாரங்களும் இல்லை என்றும் மத்திய அரசு தெரிவித்திருந்தது.

#### இந்தியாவுக்குச் செல்லலாம்

இவ்வாறானதொரு நிலையில் நேற்றைய நிகழ்வில் பேசிய மத்திய அரசின் போக்குவரத்து அமைச்சர், தலைமன்னார் வரையிலான ரயில் சேவைகளை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தலைமன்னார் வரை ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டால், வடக்கு மக்கள் கொழும்பு வந்து இந்தியா செல்ல வேண்டிய தேவையில்லை. நேரடியாகத் தலைமன்னார் சென்று அங்கிருந்து இராமேஸ்வரத்துக்குச் செல்லமுடியும். விரைவில் இதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நான் 16 வயதுச் சிறுவனாக இருந்தபொழுது வீட்டுக்குத் தெரியாமல் வெள்ளவத்தைக்குச் சென்று ரயில் ஏறித் தலைமன்னார் வந்து, அங்கிருந்து இராமேஸ்வரம் சென்றடைந்தேன். அங்கிருந்து எக்மோர் ரயில்வே நிலையத்துக்குச் சென்று திரும்பி வந்தேன் - என்றார். (த-5)

### நம்பகமான

தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்தின் முதற்கட்ட வரைவு நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. இதன்படி பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான தேசிய முன்னெடுப்பு செயற்பாடுகளை கண்காணிப்புச் செய்யுமாறும், இலங்கையில் போரின் போது இரு தரப்பினராலும் நிகழ்த்தப்பட்டுள்ள சட்ட மீறல்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட விடயங் கள் குறித்து விசாரணை நடத்துமாறும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தை இந்தத் தீர்மானம் கேட்டுக் கொண்டுள்ளது. இவை தொடர்பில் வாய் மூல அறிக்கையொன்றை சபை யின் 27 ஆவது மாநாட்டில் சமர்ப்பிக்குமாறும் இதன் போது இடம் பெறும் விவாதங்களின் பின்னர் விரிவான அறிக்கையொன்றை 28 ஆவது மாநாட்டில் சமர்ப்பிக்கும் படியும் ஆணையாளரை இந்தத் தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

இந்தச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசுக்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளையின் சபையின் சிறப்பு ஆணை பெற்ற அதிகாரிகள் வழங்க வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயங்களில் இலங்கை அரசு மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தனிப்பட்ட நபர்களால், குழுக்களினால் கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள் மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதல் கள் பற்றி அரசு விசாரணை நடத்தவேண்டும் என்று வலியுறுத்துகின்ற இந்தத் தீர்மானம், அவைகள் எதிர்காலத்தில் நடைபெறாதிருக்க நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தியுள்ளது. அதுபோலவே வணக்கத்துக்குரிய இடங் கள், பத்திரிகையாளர்கள், மனித உரிமை செயற்பாட்டா ளர்கள், சமயம் சார்ந்த சிறு பான்மையின் ஏனைய சிவில் சமூகத்தினர் மீது தாக்குதல் நடத்தியவர்கள் குறித்து விசாரணை நடத்தி அவற் றுக்குக் காரணமானவர்களை பொறுப்பாளர்களாக்க வேண்டும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. (ப)

# தென்மராட்சி வலயக் கிரிக்கெட்; சாவகச்சேரி டிறிபேர்க் சம்பியன்

தென்மராட்சி, மார்ச் 5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் கிரிக்கெட் அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட வலயமட்டக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அணி இந்த வருட சம்பியனாகியது.

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அணியும் வரணி மத்திய கல்லூரி அணியும் களமிறங்கின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டிறிபேர்க் கல்லூரி அணித் தலைவர் முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

எட்டு பந்து பரிமாற்றங்களைக் கொண்ட இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய டிறிபேர்க் கல்லூரி அணி நான்கு இலக்குகளை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றது.

86 ஓட்டங்கள் வெற்றி இலக்குடன் களமிறங்கிய வரணி மத்திய கல்லூரி அணி டிறிபேர்க் கல்லூரி அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் தடுமாறி 7.3 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்று 27 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

கடந்த பத்து வருடங்களின் பின்னர் டிறிபேர்க் கல்லூரி அணி வலயமட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-9)



கிண்ணம் வென்ற டிறிபேர்க் அணியினர்.



வெற்றி பெற்ற அணியினர்

## அராலி சரஸ்வதி வித்தியாலயம் 17 வயதுப் பிரிவிலும் சம்பியன்

வலி.வடக்கு மார்ச் 05

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடை பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் அராலி சரஸ்வதி வித்தியாலயம் மூன்றாவது ஆண்டாகவும் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அராலி சரஸ்வதி வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும், அராலி சரஸ்வதி வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய நேரம் முதல் மைதானத்தில் இரு அணிகளும் தமது பலப் பரீட்சையை ஆரம்பித்தன. முதல் பாதி ஆட்டத்தில் சரஸ்வதி வித்தியாலயம் 10:07 புள்ளிகள் என முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் எதிர்பார்த்ததை விட மிகவும் விறுவிறுப்பாகக் காணப்பட்ட நிலையில் மீண்டும் சரஸ்வதி வித்தியாலயம் 07:05 புள்ளிகள் என முன்னிலை வகித்தது.

ஆட்ட நிறைவில் சரஸ்வதி வித்தியாலயம் 17:12 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றுச் சங்கானை கல்விக் கோட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (த-86)

## அணி ஒழுங்கு தயாரிப்பு இன்று

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளுக்கான அணி ஒழுங்கு ஏற்பாடுகள் இன்று புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் மு. நந்தகோபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அனைத்து விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளையும் உரிய நேரத்துக்கு சமுகம் அளிக்கும்படி விளையாட்டு அலுவலர் அறிவித்துள்ளார். (த-86)



யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கத்தின் ஆதரவுடன் மணிவதனன் ஜெய்சித்திரா சகோதரர்களின் 19 ஆவது ஆண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி சம்பியனானது. வெற்றிபெற்ற அணியினர் விருந்தினர்களுடன்...... (த-23)

## டிறிபேர்க் தாரகை கபடியில் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 5

சாவகச்சேரி பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கபடி போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த வாரம் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது. இதில் டிறிபேர்க் தாரகை இளைஞர் கழக அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் டிறிபேர்க் தாரகை இளைஞர் கழக அணி 46:20 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (த-23)

## வென்றது வளர்மதி

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களின் ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரின், இறுதியாட்டத்தில் மட்டுவில் வளர்மதி இளைஞர் கழக அணி முதலாமிடத்தையும், சாவகச்சேரி சிவன் இளைஞர் கழக அணி இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளன. (த-23)

## தாச்சிப் போட்டி இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் விசேட அனுமதியுடன் அளவெட்டி கிழக்கு கும்பலை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் மட்டுப்படுத்தப்பட்ட கழகங்களுக்கு இடையே மின்னொளியில் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (த-288)

## அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் 3 ஆம் இடம்

வலி வடக்கு பெப் 5

யாழ் மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய மூன்றாம் இடத்துக்கான போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான போட்டியில் அராலி சரஸ்வதி விளையாட்டுக் கழகமும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 14:13 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் 20:11 புள்ளிகள் பெற்றது.

ஆட்ட நிறைவில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 34:24 புள்ளிகள் என்ற அடிப்படையில் அராலி சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்டது. (த-86)

## நண்பர்களின் போர் துடுப்பாட்டத்தில் ஸ்கந்தா பழைய மாணவர் வெற்றி

வலி வடக்கு, மார்ச் 5

நண்பர்களின் போர் 14ஆவது துடுப்பாட்டப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர்கள் அணி 04 இலக்குகளினால் வெற்றி பெற்றுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற 40 பந்துப்பரிமாற்றங்களுக்கு மட்டுப்படுத்திய நண்பர்களின் போர் துடுப்பாட்டப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் அணியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் அணியும் மோதிக்கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கியவர்கள் துடுப்பாட்டத்தில் பிரகாசித்த போதிலும் ஏனையவர்கள் பிரகாசிக்காத நிலையில் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் அணி 36 பந்துபரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றது.

பி.துஸ்யந்தன் 29 பந்துகளில் அதிரடியாக 54 ஓட்டங்களையும், எம்.கஜதீபன் 34 ஓட்டங்களையும், என். காந்தசீலன் 32 ஓட்டங்களையும், ஆர். இராஜகாந்தன் 19 ஓட்டங்களையும், எம். கோகிலதாஸ் 12 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 19 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர்கள் அணி சார்பாகப் பந்து வீசிய எஸ்.விஜிதரன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 3இலக்குகளையும்,எஸ்.விஷ்ணு பிரகாஸ் 8 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 29 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், எஸ்.பென்ஜோய் 7 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும், கே.நிரோஜன் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

200 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழைய மாணவர் அணியின் ஆரம்பத் துடுப் பாட்ட வீரர்களாகக் களமிறங்கியவர்கள் இணை ஆட்டமாக 92 ஓட்டங்களைப் பெற்று நல்லதொரு தொடக்கத்தை அளித்தனர்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர்கள் அணி 36 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கான 200 ஓட்டங்களைப் பெற்றது.

கே. நிஷாகரன் 72 பந்துகளில் 56 ஓட்டங்களையும், எஸ். ஜசிதரன் 44 ஓட்டங்களையும், கே. கோகிலதாஸ் 25 ஓட்டங்களையும், ஏஸ். பென்ஜோய் 15 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 30 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்கள் அணி சார்பில் பந்து வீசிய பி.ரவிசங்கர் 07 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றத்துடன் 40 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், எஸ். செந்தூரன், எம. கோகுலதாஸ், ஆர். இராஜகாந்தன் ஆகியோர் முறையே 19, 20, 31 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரனாக மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் அணியைச் சேர்ந்த பி. துஸ்யந்தனும், சிறந்த களத்தடுப்பாளராக எம். கஜதீபனும், ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் அணியைச் சேர்ந்த எஸ். விஜிதரன் சிறந்த பந்து வீச்சாளராகவும், ஆட்ட நாயகனாக கே. நிஷாகரனும், சகலதுறை ஆட்டக்காரராக எஸ். பென்ஜோயும் தெரிவு செய்யப்பட்டார்கள். (த-86)



# விடைபெறும் கிரேம் சிமித்

தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கிரேம் சிமித் சர்வதேசக் கிரிக்கெட் வாழ்விலிருந்து விலகவுள்ளதாக அறிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா உடனான டெஸ்ட் தொடருக்குப் பின்னர் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

தனது வாழ்க்கையில் மேற்கொண்ட முடிவுகளில், இது மிகவும் கடினமான ஒன்றெனக் கிரேம் சிமித் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் கணுக்காலில் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை காரணமாகவே, அவர் இந்த முடிவை எடுத்திருக்கலாம் எனச் சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்தச் சத்திர சிகிச்சைக்குப் பிறகு கடந்த ஒக்ரோபர் மாதம் பாகிஸ்தான் அணிக்கெதிரான போட்டியில் 234 பெறுக்கொண்டதன் பின் சிமித் இதுவரை எந்தவொரு சதத்தையோ, அரைச் சதத்தையோ பெற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

33 வயதான கிரேம் சிமித் 117 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறார். அவர் இதுவரை 109 போட்டிகளில் அணித் தலைவராக செயற்பட்டுள்ளார். இதுவொரு உலக சாதனையாகக் கருதப்படுகின்றது.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இதுவரை 9,257 ஓட்டங்களைப் பெற்றுள்ள சிமித், ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் 6,987 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

கிரேம் சிமித் தனது 22 வயதில் தென்னாபிரிக்க அணியின் அணித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

தென்னாபிரிக்க அணியின் அணித் தலைவர் பொறுப்பை மிகக் குறைந்த வயதில் வகித்தவர் என்ற பெருமைக்கு கிரேம் சிமித் சொந்தக்காரர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# அதிர்ச்சியில்லை

ஆசியக் கிண்ணத் தொடரின் அடுத்தடுத்த தோல்விகள் அதிர்ச்சி ஏற்படுத்தவில்லை என இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் 12ஆவது ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதில் தனது முதல் லீக் போட்டியில் பங்களாதேஷ் அணியை வீழ்த்திய இந்திய அணி, இலங்கை, பாகிஸ்தான் என இரண்டு அணிகளுக்கு எதிராகத் தாக்குப்பிடிக்கமுடியாமல் தோல்வியைத் தழுவியது. தவிர, இந்தத் தொடரின் இறுதிக்கான வாய்ப்பையும் கோட்டைவிட்டு வெளியேறியது.

இந்நிலையில் இந்தியாவின் இரட்டைத் தோல்வி அதிர்ச்சி அளிக்கவில்லை என இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

இது குறித்து விராட் கோஹ்லி கூறியதாவது:-

பாகிஸ்தான் அணிக்கு எதிரான தோல்வி அதிர்ச்சியை ஏற்படுத்தவில்லை. இந்திய வீரர்கள் போராடிய விதத்தைப் பார்த்து பெருமைப்படுகிறேன். போட்டியின் போது அதிக பனிப்பொழிவு இருந்தது. இது இந்திய வீரர்களின் வேலையை அதிகப்படுத்தியது. இதில் வெற்றி பெறுவது சாதாரண விடயம் அல்ல. ஆனால் இந்திய வீரர்கள் வெற்றிக்குக் கொடுத்த போராட்டத்தை யாரும் மறக்கமுடியாது.

வலிமையான அணிக்கு எதிராக அனுபவம் இல்லாத வீரர்கள் சிறப்பாகப் பந்துவீசினர். குறிப்பாக அமித் மிஸ்ரா செயல்பாடு திருப்தி அளிக்கும் விதத்தில் இருந்தது. 20/20 போட்டிகளைப் போல எளிய முயற்சியில் 50 பந்துப்பரிமாற்றப் போட்டிகளில் வெற்றிபெற முடியாது.

குறைந்த ஓட்டங்கள் இலக்காக இருந்தால் அப்ரிடி, குல் விரைவாக ஓட்டங்கள் சேர்க்க முயற்சிப்பார்கள். அப்போது இலக்கைக் கைப்பற்ற அதிக வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்த்தோம். அது சிறந்த முறையில் கைகொடுத்தது. ஆனால் அஷ்வின் பந்தில் இரண்டு ஆறுகள் அடித்த அப்ரிடி அணியை வெற்றி பெறச் செய்தார். பொதுவாகப் பனிப்பொழிவு இருக்கும் போது பந்துவீச்சாளர்களை எந்தக் குறையும் சொல்ல முடியாது. ஆனால் களத்தடுப்பில் கிடைத்த சில அரிய வாய்ப்புகளைப் பயன்படுத்தியிருந்தால், இந்திய அணி வெற்றி பெற்றிருக்கலாம். போட்டியில் வெற்றி, தோல்வி என்பதை நாம் நிர்ணயிக்கமுடியாது. அதனால் இந்த தோல்விகள் அதிர்ச்சி எதுவும் ஏற்படுத்தவில்லை. வெற்றிபெற இந்திய வீரர்கள் கடினமாகக் கடைசிவரை போராடிய விதம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது-இவ்வாறு விராட் கோஹ்லி கூறினார். (த)



# தோல்விக்கு காரணம் என்ன?

எவ்வித இலக்கும் இல்லாமல் செயல்படுவதால் தான் இந்திய அணி வீரர்கள் மிக மோசமாகச் செயல்படுகின்றனர் என முன்னாள் அணித் தலைவர் கவாஸ்கர் குற்றம் சாட்டியுள்ளார். பங்களாதேஷில் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடைபெறுகிறது. இதன் லீக் போட்டி யில் இந்திய அணி பாகிஸ்தானிடம் தோல்வி அடைந்ததால் இறுதிச் சுற்றுக்கான வாய்ப்பு ஏறக்குறைய முடிவுக்கு வந்தது.

இது குறித்து இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் கவாஸ்கர் கூறுகையில், இந்திய வீரர்களின் செயல்பாடு எவ்வித இலக்கும் இல்லாமல் உள்ளது. இதனால் அடுத்தடுத்து படுமோசமான தோல்விகள் கிடைக்கின்றன. இவர்களின் பயிற்சிப் முறைகள் ஒன்றும் சரியில்லை. விருப்பம் போல பயிற்சி செய்கின்றனர், விராட் கோஹ்லி, ஷிகர் தவான் தவிர மற்றவர்கள் பயிற்சியைப் புறக்கணித்ததை மன்னிக்கவே முடியாது.

சமீபகாலமாகப் பாகிஸ்தான் அணி 250 ஓட்டங்களுக்கும் மேலான இலக்கை அடைய முடியாமல் தோற்கிறது. இதற்கு ஏற்றால் போல இந்திய வீரர்கள் ஓட்டங்கள் எடுப்பதை வெளிப்படுத்தி இருக்கவேண்டும்.

ஆனால், மிதமிஞ்சிய நம்பிக்கையில் தேவையில்லாத பந்துகளை அடித்து இலக்குகளைப் பறிகொடுத்து திரும்பினர். ஷேர் இ பங்களா மைதானத்தின் அளவு குறைவாக இருந்ததால் ஆறுகள் மிக எளிதாக அடிக்கப்பட்டன என்று தெரிவித்துள்ளார். (த)

# சிறந்த வீரர் லாரா தான்



உலகின் சிறந்த வீரர் லாரா தான் என்றும், சச்சின் டெண்டுல் கரின் சாதனைகள் வியக்கத்தக்கது எனவும் தென்னாபிரிக்காவின் ஜக் கலிஸ் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த சகலதுறை வீரர் ஜக் கலிஸ், உலகின் தலைசிறந்த வீரர்களில் ஒருவர் ஆவார். சமீபத்தில் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றவர், கேப்டவுனில் நடந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறுகையில், சர்வதேசக் கிரிக்கெட்டுக்கு அந்த விளையாட்டின் முன்னேற்றத்துக்காக டெண்டுல்கர் அதிகமான பங்களிப்பைச் செய்துள்ளார்.

அவர் உள்ளுணர்வுடன் சரியான வழியில் கிரிக்கெட் ஆடினார். அவரது சாதனைகள் வியக்கத்தக்கது நம்ப முடியாதது, அவரது சாதனைகளை எட்டுவது மிகவும் கடினம். உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர் லாரா ஆவார், வேகப்பந்து வீரர்களில் வசிம் அக்ரம் தான் சிறந்தவர், பந்தை சுவிங் செய்வதில் அவர் வல்லவர். சுழற்பந்து வீரர்களில் ஷேன் வோர்ன் சிறந்தவர் ஆவார். ஆட்டத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில் கெட் டிக்காரர்.

உலகக் கிண்ணத்தை வென்ற தென்னாபிரிக்க அணியில் இடம் பிடிக்க வேண்டும் என்பதே என் கிரிக்கெட் வாழ்க்கையில் இன்னும் நிறைவேறாமல் இருக்கும் ஆசையாகும். உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு முன்பு 20 இக்கும் மேற்பட்ட ஒருநாள் போட்டியில் பங்கேற்போம். அந்த ஆட்டங்களில் நான் சிறப்பாக ஆடவில்லை என்றால் உலக கிண்ணப் போட்டியில் பயிற்சியாளர் கேரி கிரிஸ்டனுடன் இணைந்து அறிவுரை வழங்குவேன். டெஸ்ட் போட்டியில் மாற்றம் என்ற பெயரில் பகல் இரவாக நடத்துவதில் எனக்கு உடன்பாடு இல்லை என்று தெரிவித்துள்ளார். (த)

# என் தோல் வெள்ளையாக இருந்திருந்தால் இங்கிலாந்து அணியின் தலைவராகியிருப்பேன்

என் தோல் வெள்ளையாக இருந்திருந்தால் 10 ஆண்டுகளுக்கும் மேலாக இங்கிலாந்து உதைபந்து அணியின் தலைவராக இருந்திருப்பேன் என அந்நாட்டின் முன்னாள் உதைபந்தாட்ட வீரர் சோல் கேம்ப்பெல் தெரிவித்தார்.

கேம்ப்பெல், 2012ஆம் ஆண்டு சர்வதேச உதைபந்தாட்டத்தில் இருந்து ஓய்வு பெற்றார். இவர் இங்கிலாந்து அணி வெற்றி பெற்ற 73 ஆட்டங்களில் அணியில் இடம்பிடித்திருந்தார்.

1998 இல் பெல்ஜியம் மற்றும் செக் குடியரசுக்கு எதிரான ஆட்டத்திலும் 2005 இல் அமெரிக்காவுக்கு எதிரான ஆட்டத்திலும் இங்கிலாந்து அணியின் தலைவராக இருந்தார். இவை மூன்றும் நட்பு ரீதியிலான ஆட்டங்கள். தேசிய அணியின் தலைவராகச் செயல்பட நினைத்த தன் கனவு நிறைவேறாதது குறித்து தன் வாழ்க்கை வரலாறுப் புத்தகத்தில் கேம்ப்பெல் தற்போது குறிப்பிட்டுள்ளார்.

அதன் விவரம்:

கழக அணிகளில் தலைவராக இருந்ததால் தேசிய அணிக்கு தலைவராக நியமிக்கப்படுவேன் என நினைத்தேன். ஆனால் கடைசி வரை நியமிக்கப்படவில்லை. இதற்கான காரணம் என்னவென எனக்கு நானே பலமுறை கேள்வி எழுப்பிக் கொண்டேன். தோல் நிறம்தான் பிரச்சினை என்று பின்னர் தெரிந்து கொண்டேன். என் தோல் மட்டும் வெள்ளையாக இருந்திருந்தால் 10 ஆண்டுகளுக்கும் மேலாக இங்கிலாந்து அணிக்கு தலைவராக இருந்திருப்பேன். பெரும்பாலான இங்கிலாந்து ரசிகர்கள் கறுப்பினத்தைச் சேர்ந்தவர் தலைவராகச் செயல்படுவதை விரும்பமாட்டார்கள் என உதைபந்தாட்டச் சங்கம் நினைத்து விட்டது.



லிவர்பூல் அணியின் முன்னாள் வீரர் மைக்கல் ஓவன் சிறந்த முன்கள ஆட்டக்காரர். ஆனால், அவர் தலைவராகச் செயல்படத் தகுதியற்றவர். அவருக்குத் தலைவர் பதவி வழங்கியதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை' என கேம்ப்பெல் குறிப்பிட்டுள்ளார். கேம்ப்பெல் குறிப்பிட்டுள்ள காலத்தில் உதைபந்தாட்டச் சங்கத்தின் இயக்குநராக இருந்த டேவிட் டேவிஸ் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

தலைவர் யார் என்பதை மேலாளர்கள் தான் தேர்வு செய்வர். இதில் உதைபந்தாட்டச் சங்கம் தலையிட்டதாக நினைவில் இல்லை. இந்த குற்றச்சாட்டு தவறானது. என் காலத்தில் உதைபந்தில் இருந்து இன வேறுபாட்டை வேரறுக்கவேண்டும் என்பதில் சிலர் உறுதியாக இருந்தனர். இது பெருமை அளிக்கும் விடயம். வாய்ப்பு கிடைத்தால் கேம்ப்பெல்லுடன் அவரை தலைவராக நியமிக்காதது குறித்து பேசுவேன்' என டேவிட் டேவிஸ் தெரிவித்தார். (த)

முதன்முறையாக
**ஆபரண மலிவு விற்பனைச் சந்தை**
# வவுனியாவில்

தங்க முலாம் பூசப்பட்ட நகைகள், கிளசிக் பேள்ஸ், ரேடியம் முலாம் பூசப்பட்ட பெரியன் கல் பதித்த ஆபரணங்கள் முதலியவற்றை கொள்வனவு செய்வதற்கு இலங்கை மகளிருக்கு ஓர் பொன்னான சந்தர்ப்பம்.

**ரூ.50/- ரூ.150/- மற்றும் ரூ. 400/- மட்டுமே.**

இடம்: நெல்லி ஸ்டார் ஹொட்டல் கிளை - பாக்கியம் ரெஸ்ட்
முதலாம் குறுக்கு வீதி, வவுனியா.
தொ.இல.024 222 0216, 024 222 4477

**மார்ச் 2014 5 ஆம், 6 ஆம், 7 ஆம் திகதிகளில்**
**(புதன், வியாழன், வெள்ளி ஆகிய 3 நாள்கள் மட்டுமே)**
(நேரம்:காலை-10மணிமுதல்-மாலை-8மணி-வரை.


ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட டிசைன்களிலிருந்து தெரிவு செய்து வாங்குவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

| Rs.50/- மட்டும் | Rs.150/- மட்டும் |
|---|---|
| • தங்கமுலாம் பூசப்பட்ட மோதிரம்... | • கொரியன் ஸ்டோன் ஸ்ரடஸ்... |
| • புதிய வித முத்து மாலை... | • அவுஸ்திரேலியன் மோதிரம்... |
| • புத்த சிலை பதித்த கீரெக்... | • வெஸ்ரன் ஸ்ரைல் தோடு... |
| • கிறிஸ்தவ சிலை பதித்த கீரெக்... | • தங்கமுலாம் பூசப்பட்ட ஆண்களுக்கான மோதிரம் |
| • டொல்பின் வடிவம் பதித்த கீரெக்... | • கொரியன் ஸ்ரோன் தோடு... |
| • என்டிக்ஸ் கிடைக்கும் ... | • வெள்ளி முலாம் பூசப்பட்ட கால் கொலுசு... |

| Rs.400/- மட்டும் | |
|---|---|
| • அவுஸ்திரேலியன் டயமண்ட் நெக்லஸ் செற். | • கிளாசிக் பேள்ஸ் நெக்லஸ் செட்... |
| • தங்கமுலாம் பூசப்பட்ட வளையல் செற். | • சுஹாகன் மங்கல் சூத்ரர்... |
| • தங்க முலாம் பூசப்பட்ட சங்கிலி. | • பென்சி வளையல்... |
| • அவுஸ்திரேலியன் டயமண்ட் சேலை பின். | • முத்து தோடு... |
| • தங்க முலாம் பூசப்பட்ட ஜிமிக்கி. | • ஆண்களுக்கான கைமாலை... |

(C/12295)(2.6.3)

விசேட சலுகை:திருமண மற்றும் விசேட வைபவங்களுக்கான ஆபரணங்கள் ரூபாய் 500/- முதல் 3000/- வரையான விலைகளில் விற்கப்படும்.
Entry - Free | Contact :0755 075675 | Sunday Open
வழங்குவோர் : Beauty Tex, Colombo



# அவ்ரிடி சிக்சர் மழை; வென்றது பாகிஸ்தான்

அவ்ரிடியின் சிக்சர் மழை கைகொடுக்க பங்களாதேஷை மூன்று இலக்குகளால் தோற்கடித்தது பாகிஸ்தான். இவ்விரு அணிகளுக்கும் இடையிலான ஆட்டம் மிர்பூரில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. துடுப்பாட்ட வீரர்களின் அதிரடியான ஆட்டம் காரணமாக 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் மூன்று இலக்குகளை மட்டும் இழந்து 326 ஓட்டங்களைப் பெற்றது. அவ் அணி சார்பாக அனாமுல்ஹக் 100 ஓட்டங்களையும், இம்ருல ஹெய்ஸ் 59 ஓட்டங்களையும், மொமினுள் ஹக் 51 ஓட்டங்களையும், முஷிபிதர் ரகீம், சஹீப் அல்ஹசன் ஆகியோர் முறையே ஆட்டமிழக்காமல் 51, 44 ஓட்டங்களைப் பெற்றனர்
பந்துவீச்சில் சயிட் அஜ்மல் 2 இலக்குகளையும், முகமட் தல்ஹா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். 327 ஓட்டங்களை இமாலய வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பாகிஸ்தான் அவ்ரிடியின் சிக்சர் மழை, அஹமட், ஷாஹித் ஆகியோரின் துடுப்பாட்டத்தின் துணையுடன் 49.5 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 329 ஓட்டங்களைப் பெற்று இலக்கை தகர்த்தது பாகிஸ்தான். (த-400)

**Dip in AutoCAD**
2D & 3D Modeling
Duration - 3months
SofTTech
புதிய பிரிவுகள் 08.03.2014 சனிக்கிழமை மாலை 4.00 முதல் ஆரம்பமாகின்றன.
பயிற்சிநெறியின் முடிவில் சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்
அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
மேலதிக விபரங்களுக்கு:
SofTTech Computer Education
306, Kandy Road, Pungankulam Junction, Ariyalai Jaffna.
T.P : 021-221-1220, 077-9122997

**மணல் விற்பனைக்கு**
கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் விற்பனைக்குண்டு.
$4^{1/2}$ டிரக்டர் 19 000/=
தொடர்பு : கண்ணா, 077 7590792

**Jaffna College Institute of Technology** JCIT
Established in 1974 under the Management Council of the Board of Directors of Jaffna College.

Courses Commence in 2nd week of March 2014

**Foundation in Information Technology**
Certification offered by University of Colombo School of Computing (UCSC), Sri Lanka
Introduction,Maths for ICT,English for ICT Information and CommunicationTechnology (ICT) Application
**FIT is a pre-degree programme** 6 months FIT

**Diploma in Civil Draughtsmanship** 1 Year Full time
Building Construction, Construction Materials,Sanitary Engineering, Engineering Science Engineering Drawing , Draughtsmanship Quantity Surveying, AutoCAD, English, Maths

**Technician Certificate in Telecommunication & Electronics**
Covers City & Guilds Syllabus , One Year Full time (two semesters)

**Craft Certificate Courses**
தேசிய தொழில்சார் தகைமையுடன் கூடிய பயிற்சிநெறி
சுய தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெறுவதற்குமான பாடநெறிகள்.
(தமிழ்மொழி மூலம்- 6மாதம்-முழுநேரம்) கல்வித்தகைமை : க.பொ.த.(சா) வரை படித்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்
01.Motor Cycle and light Engine Mechanism--(மோட்டார் வாகனம் திருத்துதல்)
02.Refrigeration & Air Conditioning Mechanic (குளிரூட்டுதல் பயிற்சி நெறி)
03.Machineshop Practice(லேத் ,வெல்டிங் பிற்றிங் பயிற்சி)
04.Radio ,TV & Electronic Servicing Technology-(இலத்திரனியல் சாதனங்கள் திருத்துதல்)
05.Aluminum Fitting & Fabrication-(அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்)
06.Domestic Wiring (மின் இணைப்பும் நிர்மாணமும்)
07.Wood Craftsman (Carpentry-மரவேலைப்பயிற்சி நெறி)

More Information
Director,
Jaffna College Institute of Technology
Vaddukoddai, Sri Lanka.
T.P No.021 321 3139 021 225 0975
E-Mail ejcit@sltnet.lk Web: www.jcit.lk

Why we are Special
Unlimited computer practical hours are offered.
Payments could be made in 2 installments.
Individual attention by qualified Lecturers .
The computer laboratory is opened for flexible practical hours.
Facilities: Hostel , library & Sports etc.

A training Institute registered with the Tertiary and Vocational Educational Commission(TVEC) Under P25/0014

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

FRENCH LANGUAGE CENTRE
FLC யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு மையம்.
**FRENCH CLASSES**
French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Belgium செல்வோர் இலகுவாக பெற்றுக் கொள்ளலாம்... 774 க்கும் மேற்பட்டோர் கற்றுள்ளனர்...
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி...
Note: எமது ஆசிரியரின் வகுப்புக்கள் யாழ் ஆரியகுளத்தடி, நெல்லியடியில் மட்டுமே..
எம்மிடம் கற்ற பல மாணவர்கள் France இல் வேலை செய்கிறரர்கள்.......
ஆரம்பம்: 08.03.14 8.30am No. 40, Palaly Road, Jaffna. (ஆரியகுளத்தடி
ஆரம்பம்: 11.03.14 at 11am No.181, 1st Floor, Main Street, Nelliady.
Deutsch & Sinhala வகுப்புகளும் 021 320 2973 0779 789 456




NALIN Information Technologies(Pvt)Ltd.
**NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.**
No. 195/4, Parameswara Junction, Palaly Road.
021 222 1121 077 766 7975 021 222 4994 facebook/nalin it www.nit.lk
Branch: No. 116 G, K.K.S. Road, Chunnakam. 021 224 2222 077 714 0431
இடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

முன்னேற வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் யாருடனும் சண்டை போடாதீர்கள். அதில் நேரம் வீணாகிறது. நாயிடம் கடிபடுவதைக் காட்டிலும் நாய்க்கு வழிவிடுவதே மேல்
-ஆபிரகாம் லிங்கன்

புதன் பொய்கை A

உதயன் மார்ச் 05 2014 புதன்கிழமை பக்கங்கள்: எட்டு

# நேர முகாமைத்துவம் வாழ்வில் உயர்வைத் தரும்

ராஜராஜன்

நாள்கள் வேகமாகக் கரைந்து செல்வதைப் போன்றதொரு உணர்வு இன்று பலரிடமும் காணப்படுகின்றது. ஓர் ஆண்டு என்பது 365 நாள்களைக் கொண்டதாக இருந்த போதிலும், இன்று அது போதாதெனக் கருதுவோரும் உள்ளனர். சிலர் இதற்கு எதிர்மாறான கருத்துக்களையும் கொண்டுள்ளனர். எது எப்படி இருந்த போதிலும், நாள்கள் வேகமாக மறைந்து விடுகின்றன என்ற கருத்து பலமாகவே ஒலித்து வருகின்றது.

ஒரு சிலர் தமது காரியங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு நேரம் போதவில்லை என்று அங்கலாய்த்துக் கொள்கின்றனர். இவர்கள் எந்த நேரமும் அங்குமிங்கும் அலைந்து திரிவார்கள். எந்த வேலையையும் தமது தலைமீது தூக்கிப் போட்டுக்கொண்டு அவற்றை நிறைவேற்றுவதில் குறியாக இருப்பார்கள். இத்தகையவர்கள் தேவை இருகின்றதோ அல்லது இல்லையோ அலைந்து திரிவதில் இருந்து ஓயவே மாட்டார்கள்.

வேறு சிலர் ஓர் இடத்தில் அமர்ந்து கொண்டு, பொழுது போகவில்லையே என அங்கலாய்த்துக் கொண்டிருப்பார்கள். இவர்கள் நோக்கம் எதுவும் அற்றவர்களாகக் காணப்படுவார்கள். இவர்களுக்குப் பொழுதைப் போக்குவதே பெரும் வேலையாக இருக்கும்.

எம்மவரை பொறுத்தவரை நேர தாமதம் என்பது அவர்களின் குருதியில் கலந்த ஒன்றாகவே காணப் படுகின்றது.

நாம் இழந்த பலவற்றைத் திரும்பவும் பெற முடியாது. இதில் மானம், கௌரவம், வாயிலிருந்து வெளிவரும் இழிசொற்கள், நல்ல நண்பர்களின் நட்பு ஆகிய சிலவற்றை உதாரணமாகக் கூற முடியும். இந்த வரிசையில் நேரமும் உள்ளடங்குகின்றது. நேரத்தின் ஒவ்வொரு விநாடியும் பெறுமதி வாய்ந்தது. இதனை இழந்தால் இழந்ததுதான். மீளவும் அது கிடைக்கவே கிடைக்காது. அதனால் தான் நேரத்தைப் பொன்னை விட பெரிதாக மதிக்கிறார்கள் பெரியோர்.

மேல் நாட்டவர்கள் எந்தவொரு நிகழ்ச்சியாக இருந்தாலும் அங்கு நேரம் தவறாமையைக் கடைப்பிடிக்கின்றனர். சிலவேளைகளில் அவர்கள் பங்கேற்கவிருக்கும் நிகழ்வுகள் தாமதமாகும் போது அவற்றைப் புறக்கணிப்பதற்கும் அவர்கள் தயங்குவதில்லை. போக்குவரத்துச் சேவைகள் அங்கு உரிய நேரத்தில் இம்மியும் பிசகாது இடம் பெறுவதைக் காண முடிகின்றது. நேர ஒழுங்கை அவர்கள் ஒழுங்காகக் கடைப்பிடிப்பதால் பிரச்சி னைகளும் குறைவாகவே காணப்படுகின்றன.

“நேரம் பொன்னுக்கு ஒப்பானது. இழந்த நேரத்தை எப்போதுமே திரும்பப் பெறமுடியாது” என்ற வாக்கியங்கள் எப்போதுமே எமது மனதில் பதிந்திருக்குமானால் வாழ்விலும் சிறப்புக்கள் தோன்றவே செய்யும்.




ஆனால் எம்மவர்களைப் பொறுத்தவரை நேர தாமதம் என்பது அவர்களின் குருதியில் கலந்த ஒன்றாகவே காணப்படுகின்றது. குறிப்பிட்டதொரு நிகழ்வு, அது ஆரம்பிக்கப்படும் நேரம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டாலும் நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்கள் அதனைச் சரிவரக் கடைப்பிடிப்பதில்லை. இதனால் அதில் கலந்து கொள்பவர்களும் தாமதமாகவே அங்கு செல்கின்றனர்.

இதுவொரு வழக்கமாகவே இங்கு மாறியுள்ளது. மேலும் முற் கூட்டியே தம்மைத் தயார் செய்யாது கடைசி நிமிடத்தில் அரக்கப் பரக்க செயற்படுபவர்கள்தான் இங்கு அதிகளவில் காணப்படுகின்றனர்.


இங்கு நடைபெறும் திருமண நிகழ்வுகளின்போதுகூட இந்த அலங்கோலம் காணப்படுகின்றது. போதிய அவகாசம் இருந்தும் நேரத்தை வீணாக்கிவிட்டு தாலி கட்டும் வேளையில் சுப முகூர்த்த வேளை கடந்து விடுமோ என்ற அச்சத்தில் வியர்த்து விறுவிறுத்து அவசர அவசரமாக ஒரு சடங்குக்காகத் தாலியைக் கட்டும் நிகழ்வுகளும் நடைபெறத்தான் செய்கின்றன. சில திருமண மேடைகளில் கூறைச் சேலையை மணப் பெண் உடுத்தாமல் போர்வையாகப் போர்த்திக் கொண்டு நிற்க மணமகன் அவளது கழுத்தில் தாலியைக் கட்டுவதையும் காண முடிகின்றது. கூறைச் சேலை உடுப்பதற்கே அன்றிப் போர்த்துவதற்கு அல்ல என்பதை எம்மவர்கள் புரிந்து கொள்வது எப்போது?

ஒரு சிலர் குறிப்பிட்டதொரு நேரத்தைக் கூறி சந்திக்க வருவதாகத் தெரிவிப்பார்கள். ஆனால் அவ்வாறு நடந்து கொள்வதில்லை. நிமிடக் கணக்கில் மட்டுமல்ல, மணிக்கணக்கிலும் கூட இவர்கள் தாமதமாக வருவார்கள். இதனால் அவர்களுக்காகக் காத்திருப்பவர் தமது வேலைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டுக் காத்திருப்பதால் வேறு சிலரிடம் குறை கேட்க நேரிடும். ஆனால் தவிர்க்க முடியாத சில சந்தர்ப்பங்களில் இவ் வாறு நடந்து கொள்ளலாமே தவிர அதையே ஒரு வழக்கமாகக் கொள்வதை ஏற்றுக் கொள்ளவே முடியாது.

இன்று எமது நாட்டிலுள்ள அரச அலுவலகங் களை நாம் எடுத்துக்கொண்டால், நேரத்தை ஒழுங்காக முகாமைத்துவம் செய்யும் நிலை அங்கு இல்லையென்றுதான் கூற வேண்டும். அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்களில் சிலர் அலுவலகத்துக்குத் தாமதமாக வருவதையும், அலுவலக நேரத்துக்கு முன்பதாகவே கடமையை முடித்துச் செல்வதையும் காண முடிகின்றது. என்னதான் நவீன இயந்திரங்கள் மூலமாக இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் அவை முழுமையான பயனைக்கொடுக்கவில்லை. மேலும் அலுவலக நேரத்தில் பத்திரிகை படித்தல், அரட்டை அடித்தல், தேநீர் அருந்துவதற்கு, உணவுகளை எடுப்பதற்கும் அதிக நேரத்தைச் செலவழித்தல், தமது சொந்த வேலைகளைக் கவனிப்பதற்கு வெளியே செல்லல் எனப் பல வழிகளிலும் உத்தியோகத்தர்கள் அலுவலக நேரத்தை வீணாக்குவதையும் காண முடிகின்றது. இதனால் பாதிக்கப்படுபவர்கள் அங்கு வரும் பொது மக்கள்தான் என்பதை இவர்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். இந்த நிலை தனியார் துறைகளில் மிகக் குறைவு என்றே கூற வேண்டும்.

போக்குவரத்துச் சேவைகளை எடுத்துக்கொண்டால் கூட எம்மவர் நேரத்தை முகாமைத்துவம் செய்வதில் தவறு விடுவதைக் காண முடிகின்றது. நேரக்கணிப்பு இடத்துக்கு உரிய நேரத்தில் சென்றாலே போதும் என்ற எண்ணம் வாகனச் சாரதிகளிடம் காணப்படுகின்றது. குறிப்பிட்ட தூரத்துக்கு வாகனங்களை மெதுவாகச் செலுத்திச் செல்லல் அல்லது ஒரேயிடத்தில் தரித்து நிற்றல் என்பன இன்று வாடிக்கையாகவே மாறிவிட்டது. பின்னர் தாமதமாகும் நேரத்தை இட்டுக் கட்ட வேண்டும் என்பதற்காக வாகனங்களைப் படுவேகமாகச் செலுத்துவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. சிலவேளைகளில் பயணிகளின் உயிருக்கும் உலை வைக்கப்படுகின்றது. இவற்றைக் கவனிப்பதற்கு எவரும் இல்லை என்பதுதான் வருத்தத்தை அளிக்கின்றது.

ஆகவே நேரத்தின் அருமையை உணர்ந்து நாம்செயற்பட வேண்டும். நேரம் வகுக்கப்பட்டது என்பதே மனிதர்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்குத்தான் என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது. மனிதர்கள் ஒழுங்கானதொரு வாழ்க்கையை அமைக்க விரும்பினால், முதலில் நேரத்தை முகாமைத்துவம் செய்வது எப்படி என்பதைப் புரிந்து செயற்பட வேண்டும். “நேரம் பொன்னுக்கு ஒப்பானது. இழந்த நேரத்தை எப்போதுமே திரும்பப் பெறமுடியாது” என்ற வாக்கியங்கள் எப்போதுமே எமது மனதில் பதிந்திருக்குமானால் வாழ்விலும் சிறப்புக்கள் தோன்றவே செய்யும்.



# நோயிலிருந்து சிறுவனை மீட்ட நாய்




நோய்வாய்ப்பட்ட 8 வயதான சிறுவனொருவனுக்கு உதவிய நாயொன்று வருடத்தின் சிறந்த நாயாகத் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது. ஜோர்ஜியா மாநிலத்தைச் சேர்ந்த இந்தச் சிறுவன் இந்த நாய்க் குட்டியைச் செல்லப்பிராணியாக வளர்த்து வந்தான். நோயொன்றினால் பாதிக்கப்பட்டு தனது அறைக்குள்ளேயே முடங்கிக்கிடந்த சிறுவனுடன் அன்பாகப் பழகிய இந்த நாய், அந்தச் சிறுவனை அறையிலிருந்து வெளியே வரத் தூண்டியுள்ளது. தற்போது உலகிலேயே மகிழ்ச்சியான சிறுவன் எனக் கூறும் அளவுக்கு சிறுவனின் நடத்தையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால், நாய்களுக்கான விழாவொன்றில் வருடத்தின் சிறந்த நாயாக அந்தச் சிறுவனின் நாய் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

**"நாய்களுக்கான விழா நிகழ்வு ஒன்றில் வருடத்தின் சிறந்த நாயாக இந்தச் சிறுவனின் நாய் தெரிவு செய்யப்பட்டுள்ளது."**

# வாத்து போன்ற அமைப்பில் தென்னங்கன்று



வாத்துப்போன்ற அமைப்பில் தென்னங்கன்று ஒன்று முளைத்துள்ளது. மன்னார், எழுத்தூர் பகுதியில் உள்ள விடுதி ஒன்றிலேயே இவ்வாறு தென்னங்கன்று வாத்துப் போன்ற அமைப் பில் முளைத்துள்ளது. இதனை பெருந்திரளானோர் பார்வையிட்டு வருகின்றனர்.

# ஞாபகசக்தியை அதிகரிக்கும் இஞ்சி



**மலச்சிக்கல், வயிற்றுவலி ஏற்பட்டால் இஞ்சிச் சாற்றில் சிறிது உப்புக் கலந்து பருக வேண்டும்.**

இஞ்சிக்கு ஏராளமான மருத்துவ குணாங்கள் உள்ளன. நாம் உண்ணும் உணவில் இஞ்சி கலந்து சாப்பிடுவதால் உணவு எளிதில் ஜீரணமாகும். இஞ்சிக்கு ஞாபகசக்தியை அதிகரிக்கும் குணம் உண்டு.

குடலில் சேரும் கிருமிகளை அழித்து கல் லீரலைச் சுத்தப்படுத்துகிறது. மலச்சிக்கல், வயிற்றுவலி ஏற்பட்டால் இஞ்சிச் சாறில் சிறிது உப்புக் கலந்து பருக வேண்டும்.

பசி இல்லை என்றால் இஞ்சியுடன், கொத்தமல்லியைத் துவையல் செய்து சாப்பிட்டால் நன்கு பசி எடுக்கும்.

சளி பிடித்தால் இஞ்சி கஷாயம் போட்டு குடித்தால் குணமாகும். இஞ்சி தொண்டைவலி, ஆஸ்துமா போன்ற நோய்களுக்கு அரு மருந்தாகும். மருத்துவகுணம் கொண்ட இஞ்சியை தினமும் உணவில் சட்னி, பொங்கல் போன்றவைகளில் சேர்த்துச் சாப்பிட்டால் பல்வேறு நோய்கள் குணமாகிவிடும்.

# ஆரோக்கியமாக வாழ உதவும் சோளம்



**நீரிழிவு நோயை குறைக்கும் தன்மை கொண்டதால் இன்சுலின் சாரா நீரிழிவு நோயாளிகளுக்கு இது சிறந்த உணவாகும். எனவே சோளத்தை தினமும் சாப்பிட்டு வந்தால் ஆரோக்கியமாக வாழலாம்.**

நகரமயமாக்கல் சூழலில் மேற்கத்திய கலாசார தாக்குதலால் சத்து மிகுந்த உணவுப் பொருள்கள் பயன்பாடு குறைந்தது.

ஆனால் இப்போது உணவுப் பொருள்கள் மூலம் பெருகி வரும் நோய்களால் பண்டைய உணவுப் பொருள்களுக்கு ஏங்கித் தவிக்கும் நிலை உருவாகியுள்ளது.

சிறுதானியங்களில் பல வகைகள் இருந்தாலும் சோளம் முதன்மையான உணவுப் பொருளாகக் கருதப்படுகிறது. சோள உற்பத்தியில் இந்தியா 3 ஆவது இடத்தில் உள்ளது.

இந்தியாவில் மகாராஷ்டிரா, கர்நாடகா, மத்திய பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் சோளம் பயிரிடப்படுகிறது.

சோளத்தில் ரொட்டி, கஞ்சி, கூழ் போன்றவை மட்டும் தயாரிக்கப்பட்டு வந்த நிலை மாறி தற்போது, இட்லி, தோசை, அப்பம், உப்புமா, கேசரி, வடகம், முறுக்கு, பிஸ்கட், சோளப் பொரி லட்டு, சேமியா, கொழுக்கட்டை, சமோசா உள்ளிட்ட பல உணவு வகைகள் சோளத்தில் தயாரித்துப் பயன்படுத்தலாம்.

தற்போது சோளத் தானியங்களுக்கு நகர்ப்புறங்களில் அதிக கிராக்கி ஏற்பட்டு வருகிறது.

மழை வளம் குறைந்து வரும் சூழலில், குறைந்த நீர்த் தேவையுள்ள சோளப்பயிர்களை விவசாயிகள் உற்பத்தி செய்வதன் மூலம் நல்ல லாபத்தையும் ஈட்ட முடியும்.

சோளத்தில் அதிகளவு மாச் சத்தும், நார்ச்சத்தும் அடங்கியுள்ளதால் இது ஒரு சக்தி தரும் உணவாகத் திகழ்கிறது.

கோதுமையில் உள்ள புரதத்தைவிட சோளத்தில் உள்ள புரதம் சிறப்பு வாய்ந்தது. பட்டை தீட்டப்படாத சோளத்தில் நார்ச்சத்து அதிகளவில் உள்ளதால் இது மலச்சிக்கலுக்கு ஏற்ற உணவாகவும் உள்ளது.

நீரிழிவு நோயைக் குறைக்கும் தன்மை கொண்டதால் இன்சுலின் சாரா நீரிழிவு நோயாளிகளுக்கு இது சிறந்த உணவாகும். எனவே சோளத்தை தினமும் சாப்பிட்டு வந்தால் ஆரோக்கியமாக வாழலாம்.

# எதையும் மறுத்துப் பேசுபவன் புத்திசாலியா?



மது

பலர் நாட்டியம் ஆடுகிறார்கள் என்றாலும் அவர்கள் எல்லோருமே ஞானம் பெறுவதில்லை. நடனத்துக்காகவே நடனம் ஆடினால் ஞானம் பெற முடியாது.

எல்லாமே எல்லையில்லா உருவிலாப் பொருளின் பொருட்டே அமைந்திருக்க வேண்டும் என்றாலும், விக்கிரகத்தின் முன்னால்தான் அது செய்யப்பட வேண்டும். அப்போதுதான், உங்கள் பக்தியால் அது உயிர்பெறும். அப்போதுதான் அந்த விக்கிரகம், நீங்கள் ஆடுவதெல்லாம் வெறும் ஆட்டத்துக்காக அல்ல என்பதை உங்களுக்கே நினைவுபடுத்திக் கொண்டிருக்கும். நடனம் வெளிவட்டக்கோடு என்றால், விக்கிரகம் மையப்புள்ளி. மையமே பரம்பொருள்.

மற்றவையெல்லாம், அதற்குள் குதிக்க உதவும் ஏற்பாடுகள். நாட்டிய மணிகள், இசை மேதைகள்,பாடல் கலைஞர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள், இவர்களெல்லாம் கலையில் வல்லவர்கள் - எந்த பக்தரை விடவும்! ஆனால், விவகாரம் அதுவல்ல. பக்தருக்குக் குறி, இசை, அல்லது பாடல் அல்ல.

அவரது நோக்கமே வேறு. அவரது முயற்சியெல்லாம் தானின்றிக் கலந்து கரைந்து போவதுதான். அதற்காக, பரம்பொருளின் மையத்துக்கு வெளியே அவர் வெளிவட்டக்கோடு ஆகிவிடுகிறார்.

பரம்பொருளின் பிரவாகத்தில் கலந்து தானும் மிதப்பதற்காகவே அவர் நெகிழ்வுத்தன்மை பெற்று விடுகிறார்.

பக்தர் தனது கன்னங்களில் கண்ணீர் வழிய நிற்பதை நாம் அடிக்கடி பார்க்கிறோம். அவர் வடிப்பது ஆனந்தக் கண்ணீர். ஒருவருக்குள் துக்கம் அல்லது பேரின்பம் காரணமாக ஏதோ ஒன்று உருகி, இளகி,நீராகும் போது கண்ணீர் பெருகுகின்றது. இந்தக் கண்ணீரின் நோக்கத்தை, இதுவரை விஞ்ஞானிகளால் விளக்க முடியவில்லை. கண்ணின் தூசு தும்புகளைக் கழுவித் தூய்மைப்படுத்தவே கண்ணீர் சுரப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். கண்ணீர்ச் சுரப்பிகள் கண்களைச் சுத்தம் செய்யவேஅமைந்திருக்கின்றன. ஆனால், வேதனையால், துக்கத்தால், மிகுந்த மகிழ்ச்சியால், ஏன் கண்ணீர் பெருகுகின்றது?

அந்த வேளைகளில் எல்லாம் கண்களில் தூசி விழுந்து விடுகிறதா என்ன? உணர்வுகள் எல்லைமீறும்போது கண்ணீர் பிறக்கின்றது. அப்போது கண்ணீர்ச் சுரப்பிகள் திறந்து கொள்கின்றன. பக்தர் அழுதாலும், அதன் தன்மை வேறுதான். பக்தர் அல்லாதவருக்கு அது விளங்காது. பக்தர்அழுவதற்குக் காரணம் என்ன? அவருக்கும் வேதனைகள் இருக்கலாம். அதனால்தான் அவர் கைகூப்பியபடி அழுகிறார் என்று நினைக்கலாம். ஒருவர் மையத்தில் இருக்கும்போதுகூட, தனது கவலைகளால் அழுகிறார் என்றால், அவர் பக்தரே அல்ல. அவருக்கு வழிபாடு குறித்து ஒன்றுமேதெரியாது என்றுதான் சொல்லவேண்டும். எமக்குள் ஏற்பட்டுள்ள உறைநிலை, இறுக்கம், கெட்டியாகி விடும் போது, அது இளகி உருகிக்கரையும் காலகட்டம் ஒன்று வரும். அந்த விழிப்புணர்வே கண்ணீரைக் கொண்டு வந்துவிடும். பிரபஞ்ச இருப்பின் மீது ஏற்படும் நன்றியுணர்வாலும் கண்ணீர் பெருகும். எம்மை நோக்கி பாயும்பெருங் கருணைக்கு நன்றிக் காணிக்கை செலுத்த எம்மிடம் கண்ணீரைத் தவிர வேறு என்னஇருக்கிறது? அதைப்பெற நமக்கு என்ன தகுதி இருக்கிறது? அந்தப் பேரானந்தத்தைப் பெற எமக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? அப்படிப் பட்ட பேரருள் எமக்குக் கிடைப்பது பற்றி நாம் கனவிலும் எண்ணிப் பார்த்ததில்லை.

அப்படியிருக்க, நாம் பெற்ற பெரும் பேறுக்காக நன்றி செலுத்த நமக்கு ஒரு வழியும் இல்லை.அதை வெளிப்படுத்த சொற்களாலோ, மற்றவற்றாலோ முடியாது. அப்படிப்பட்ட தருணங்களில், கண்கள், வித்தியாசமான முறையில் அழுகின்றன. காதலரின்அழுகையைவிட வேறுபட்டது பக்தரின் அழுகை. காதலரின் அழுகை, சின்னச் சின்ன ஆசைகளால்,தேவைகளால் உண்டாவது. பக்தருக்குத் தேவை எதுவுமே இல்லை. காரணமில்லாமல் அவர் அழுகிறார். திக்கற்றவர்போல் ஆகிவிடுகிறார் அவர். நன்றி தெரிவிக்க விரும்பினாலும், வார்த்தைகள் வாயிலிருந்து வருவதில்லை.

அவரால் பேசவே முடிவதில்லை. அப்போதுதான் கண்கள் தம் வழியில் பேசுகின்றன! வழிபாட்டின்பூரணத்துவம் கண்ணீரில் தான் இருக்கின்றது. அதன் உருகிய தன்மையில். அதன் பெருக்கத்தில். பரவசநிலை உணர, சமய விக்கிரகங்கள் பல்வேறு விதங்களில் பயன்படுத்தப்பட்டன. அதற்கு எதிராகப் பேசுகிறவர்களுக்கு வழிபாடு பற்றி எதுவுமே தெரியாது. தெரியாதவர்கள் எதையும்சொல்லலாம். அறியாதவர் பேச்சுக்கு ஏது மதிப்பு? இந்த நூற்றாண்டில் மற்றவர்களுக்கும் உண்மை தெரியாமற் போனதால், அந்த மாதிரிப் போதனைகள் வேர் பதித்துவிட்டன.

யாருக்குமே, எது, எப்படி என்று தெரியாதபோது, சொல்லப்படுவதையெல்லாம் நாம் நம்ப வேண்டி நேர்ந்து விடுகிறது. கடவுள் இல்லை' என்று ஒருவர் சொன்னால் அதை அவரால் நிரூபிக்கமுடியாது. இருக்கிறார்' என்று சொல்பவராலும் நிரூபிக்க முடியாது. ஆனால், மனம் என்னவோ எதிர்மறை பக்கமாக எளிதில் போய் விடுகிறது. உடன்பாடான அம்சங்களை ஏற்க மனம்தயங்குகிறது. காரணம், அதை நிரூபிக்க வேண்டிய சிரமம் இருக்கிறதே! வழிபாடு,உடன்பாடான அம்சம். சமய விக்கிரகங்கள் உடன்பாடானவை. எதையாவது மறுப்பதால் நட்டம் ஒன்றும்ஏற்படுவதில்லையே!

# இயற்கை அழிவுகளுக்குப் பின்னால் இலுமினேட்டி மர்மம்

இணையவன்

ஏறத்தாழ சுமார் 10 வருடங்களுக்கு முன்னர், ஆசியாவின் தென் பகுதியை ஆட்டம்காண வைத்த ஒரு சம்பவம் சுனாமி எனப்படும் ஆழிப்பேரலை இயற்கையின் சீற்றம். நாமும், உலக விஞ்ஞானிகளும் இது இயற்கையின் சீற்றம் என கூறிக் கொண்டாலும், அந்தப் பேரலைகளின் பின்னாலும் பல மர்ம முடிச்சுக்கள் உள்ளன.

26.12.2004 அன்று 9.3 ரிச்டர் அளவிலான புவி நடுக்கம் இந்தோனேசியாவின் சுமத்திரா பகுதியில் ஏற்பட்டு, அதன் தாக்கம் இந்து சமுத்திரமூடாக தென் இந்தியாவரை பரந்து, பல உயிர்களைக் காவுகொண்டிருந்தது. 24.12.2004 அன்று இந்து சமுத்திர தீவுகளில் கடமையில் இருந்த தனது நாட்டு காவலர்கள் அனைவரையும் விடுமுறை என்ற பெயரில் ஒட்டு மொத்தமாக தனது நாட்டுக்கு அழைத்திருந்தது அமெரிக்கா. (அதற்கு முன்னரும், பின்னரும் அவ்வாறு ஒட்டு மொத்தமாக விடுமுறை அளிக்கப்பட்டதில்லை என்று கூறப்படுகிறது.) அமெரிக்காவின் இந்த செய்கையில் இருந்து தான் இந்த புவி நடுக்கம் இயற்கையா, செயற்கையா என்ற சந்தேகம் உருவானது. Anti இலுமினேட்டி (Illuminati) ஆய்வாளர்களின் கருத்துப்படி.

சமீபத்தில் சுவிஸில் நிலத்துக்கு அடியில் செய்யப்பட்ட இலத்திரன் மோதல்களைப் போன்று, ஆனால் அறிவிக்கப்படாமல் செய்யப்பட்ட ஒரு பரிசோதனையின் விளைவு தான் அந்த திடீர் நில நடுக்கத்துக்குக் காரணமாக இருக்கும் என்று உறுதி கூறுகின்றனர். மேலும் சிலர், அமெரிக்காவின் நவீன ரக அணுகுண்டு சோதனையின் விளைவே அது எனக் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். (2004 இல் ஏற்பட்ட சுனாமி விளைவு, ஹிரோஷிமா மீது போடப்பட்ட அணுகுண்டின் உடனடி விளைவைக்காட்டிலும் சுமார் 700 மில்லியன் பெரிய விளைவு என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.) படம் A மேலே நான் சொன்னவை எல்லாம் அமெரிக்காவுக்கு எதிரான குற்றச் சாட்டுக்களாகவே இருக்கின்றன.)


இதற்கும் இலுமினேட்டிக்கும் என்ன தொடர்பு? கீழ்வரும் படத்தை (படம் A) பாருங்கள். 1991 இல் உருவான இலுமினேட்டி விளையாட்டு அட்டைகளில் இடம்பெற்ற ஒரு படம். மிகப்பெரிய அலைகள் செயற்கையாக உருவாக்கப்படும் என்பதை தெளிவாகக் காட்டியுள்ள படம். இதனடிப்படையில் உறுதியாக அல்லாவிடினும் 2004ல் ஆசியாவைத் தாக்கிய சுனாமி ஒரு திட்டமிட்ட இலுமினேட்டியின் செயலாக இருக்கலாம் என்ற சந்தேகத்தையாவது எமது மனதில் எழுப்பிவிடும் என்று நம்புகின்றேன்.

இந்தச் சந்தேகம் இலுமினேட்டி என்ற நம்பவும் முடியாத, மறுக்கவும் முடியாத சொல்லின் மீது சற்று நம்பிக்கை சார்ந்த சந்தேகத்தை உருவாக்கும். படம் B பதிவில், இலுமினேட்டி விளையாட்டை உருவாக்கியவர் குறித்த சில தகவல்களை பார்த்திருந்தோம். அதில் நான் அவதானிக்க தவறிய ஒரு அருமையான பகுதியை Mohamed Riyaz என்பவர் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்தார். நான் பிரசுரித்த ஸ்டீவ் ஜக்ஸனின் புகைப்படத்தில் அவர் அணிந்திருக்கும் உடையில் முக்கோணம்+கண் அடையாளம் கொண்ட இலுமினேட்டி சின்னம் இடம்பெற்றுள்ளது! (புகைப்படத்தை (படம் B) தெளிவாக பார்க்கவும்.)

மேலும் அந்தப் புகைப்படங்கள் இலுமினேட்டி அட்டை விளையாட்டை உருவாக்கிய பின்னர் எடுக்கப்பட்டவை என்பதையும் அவர் சுட்டிக்காட்டி இருந்தார். இது தொடர்பாக நான் மேலும் தேடியதில் பல இடங்களில் அவருக்கும் இலுமினேட்டிக்கும் எந்தத் தொடர்பும் அடைப்படையில் இருந்திருக்க வாய்ப்பில்லை என்றே எதிர்-இலுமினேட்டி ஆய்வாளர்கள் கூடக் கூறுகின்றனர். ஆனால், இலுமினேட்டி அட்டையிலேயே இதற்கும் ஒரு பதில் உண்டு..

படம் C ஐ பாருங்கள், An Offer You Can't Refuse என்ற வாசகம் மூலம் இலுமினேட்டியின் புதிய உலக கட்டளைகளுக்கு எதிராக செயற்படுவோரும், அந்தக் குழும்ம் பற்றிய ரகசியத்தை கசிய விடுவோரும் இரண்டு முறைகளில் கையாளப்படுகிறார்கள். அவற்றில் ஒன்று, அவர்களுக்கு பெருந்தொகை பணம் கொடுக்கப்பட்டு அவர்கள் வாய் மூடப்படுகிறது. அல்லது அவர்கள் உணர்வுபூர்வமாக மிரட்டப் படுகிறார்கள். மற்றையது இறப்பு. - எதிர்ப்பவர் யார் என்பதை பொறுத்து அவர்களின் அணுகுமுறை இருக்கும் எனலாம்.

A




B




C



# சுயமதிப்பைக் கட்டியெழுப்ப வழிகள் சில

**எங்களால் மாற்றக் கூடிய உறவுகளை மாற்றிக் கொள்ளலாம். மாற்ற முடியாத உறவுகளிலிருந்து தூர விலகி இருக்கலாம். ஆனால் மாற்றவோ, விலகவோ முடியாத உறவுகளின் பாதிப்பிலிருந்து மீள என்ன செய்யலாம்?**

● ஸ்ரீரஞ்சினி



எமது சுயமதிப்பு, நாம் எம்மைப் பற்றி எப்படி எண்ணுகிறோம்? எவ்வாறு உணர்கிறோம்? எத்துணை பெறுமதியான ஆளாக எம்மைக் கருதுகிறோம்? என்பனவற்றை எல்லாம் உள்ளடக்குகிறது. உயர்ந்த சுயமதிப்பு உள்ளவர்கள் தம்மைப் பற்றி மேலாக நினைப்பது போல், சுயமதிப்புக் குறை வானவர்கள் தம்மைப் பற்றித் தாமே தாழ்வாகக் கருதுகிறார்கள்.

பொதுவாக எமக்குக் கிடைக்கும் எம்மைப் பற்றிய குறிப்புகள் தான் எமது சுயமதிப்பை உருவாக்குகின்றன. பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்கள் போன்றவரிடமிருந்தோ அல்லது எம்மிடமிருந்தோ அந்தக் குறிப்புக்களை நாம் தினமும் பெறுகின்றோம். இப்படிக் கிடைக்கும் குறிப்புக்கள் நாம் பெறுமதியற்றவர்கள் என்றோ அல்லது நாம் கூடாதவர்கள் என்றோ சொன்னால் எமது சுயமதிப்புத் தானாகவே தாழ்ந்து போகும். மாறாக அவை நாம் நல்லவர்கள் என்றோ அல்லது ஆற்றல் உள்ளவர்கள் என்றோ சொல்லும் போது அது, எமது சுயமதிப்பைத் தானாகவே உயர்த்தி விடுகின்றது.

முக்கியமாக நாம் அன்பு செலுத்துவர்களிடம் இருந்து வரும் எம்மைப் பற்றிய குறிப்புக்கள் எமது சுயமதிப்பில் குறிப்பிடத்தக்க பெரும் விளைவை ஏற்படுத்துகின்றன. எமது உறவுமுறை ஆரோக்கியமாக இருந்தால், அந்த உறவில் உள்ளவர் எமது பலங்களையும் பலவீனங்களையும் ஏற்றுக் கொள்பவராக இருப்பார். அதனால் எமக்கு உற்சாகம் தந்து எமது சுயமதிப்பு உயர உதவுவார். ஆரோக்கியமற்ற உறவு, எம்மைத் தாழ்த்திப் பேசுவதாய், சகல பிரச்சினைகளுக்கும் எம்மைக் குறை கூறுவதாய் இருக்கும். அவ்வாறு ஓர் உணர்வுரீதியான துன்புறுத்தல் நிறைந்த உறவு எமக்கு இருக்குமானால் அது எம்மில் இருக்கும் உயர்வான சுயமதிப்பைக்கூட படிப்படியாகக் குறைத்து விடலாம். எங்களால் மாற்றக் கூடிய உறவுகளை மாற்றிக் கொள்ளலாம். மாற்ற முடியாத உறவுகளிலிருந்து தூர விலகி இருக்கலாம். ஆனால் மாற்றவோ, விலகவோ முடியாத உறவுகளின் பாதிப்பிலிருந்து மீள என்ன செய்யலாம்?

அதற்கு ஒரு வழி எம்முடன் நாமே கதைப்பதன் மூலம் எங்களுடைய சுயமதிப்பைக் கட்டி எழுப்புவது தான். பொதுவாக எதிர்மறையான குறிப்புக்களைக் கேட்கும்போது எமக்கு நாமே நான் ஒரு முட்டாள் என்றோ இது எனது பிழை, என்னால் தான் இது நடந்தது என்றோ கூறி எம்மை நாமே தாழ்த்திக் கொள்கின்றோம். அப்படியல்லாது எங்களுடைய பலங்கள், நல்ல இயல்புகள் போன்றவற்றை நோக்கிய ஒரு குறிப்பாக நான் ஒரு நல்ல மனிதன், நான் ஒரு பெறுமதியான ஆள் என்ற பொருள்படும் நேர்மறையான பின்னூட்டலைத் தரும் வகையில் எம்முடன் நாம் கதைக்க எம்மை நாமே பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும்.

### சுயமதிப்பைக் கட்டி எழுப்ப எம்முடன் நாமே கதைக்கக் கூடிய சில உதாரணங்கள்


நான் சந்தோஷமாக இருக்க வேண்டியவள்/ன்.
பிழைகள் விட்டு அதிலிருந்து திருந்த எனக்கு உரிமை இருக்கிறது.
வாழ்க்கையில் வெற்றியடையக் கூடிய திறமை எனக்கு உண்டு.
என்னில் அன்புள்ளவர்களும் இருக்கிறார்கள், எனக்குத் தேவையான போது அவர்கள் என் பக்கம் நிற்பார்கள்.
மற்றவர்கள் என்னை மரியாதையுடன் நடத்தவேண்டும் என நான் எதிர்பார்ப்பதற்கான தகுதி எனக்குள்ளது.
பின்வரும் வசனங்களை முடிப்போம்.

1. என்னால் சந்தோஷமாக இருக்க முடியும். நான் சந்தோஷமாக இருந்த ஒரு நேரம் -----------
2. நான் அன்பு செலுத்தப்படக்கூடியவன். என்னைத் துன்புறுத்தாமல் என்னில் அன்பில் செலுத்தியவர்கள் ------------
3. எனக்காகத் தீர்மானம் எடுக்க என்னால் முடியும். நான் நல்லதொரு தீர்மானம் எடுத்த நேரம் --------------
4. என்னிடம் திறமைகள் உண்டு. நான் சிறப்பாகச் செய்யக்கூடிய ஒரு விடயம் ----
5. நான் ஓர் நல்ல சிநேகிதன்/சிநேகிதி. எனது சிநேகிதனுக்கு சிநேகிதிக்குத் தேவைப்பட்ட பொழுதில் நான் உதவிய ஒரு பொழுது ---------
6. நான் திடமான ஓர் ஆள். நான் திடமாக இருந்ததற்கான ஓர் உதாரணம் -----

இவற்றை எங்களுக்கு நாங்களே அடிக்கடி சொல்லிக் கொள்ளுவதன் மூலம் எங்கள் சுயமதிப்பை நாம் வளர்க்க் முயலலாம்.

# மனித இனத்தால் அழிக்கப்பட்ட அதிசயப் பறவை

● மயூரி



இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை பூமியில் வாழ்ந்த ஓர் அதிசயப் பறவை டூடூ(Dodo). ஆனால், இன்றைக்கு அந்த அதிசயப் பறவை உயிரினங்களின் அழிவுக்கான குறியீடாக மாறிவிட்டது. டூடூ போல் சாகாதே' ('as dead as a dodo') என்னும் பழமொழி ஆங்கிலத்தில் உண்டு. மிக மிக சாதுவான பறவையாக டூடூ இருந்ததுதான் அந்த இனம் அழிந்ததற்குக் காரணமாக இருக்கலாம்.

டூடூ மனிதர்களைக் கண்டு அஞ்சி ஓடாத பறவையாக இருந்திருக் கிறது. பார்ப்பதற்கு மிகப்பெரிய உருவ அமைப்பைக் கொண்டிருந்தாலும், காண்பதற்கு நட்பான பறவையாகவும் அது இருந்துள்ளது. இதனால் டூடூவை கேலிக்குரிய பறவை யாகப் பார்த்திருக்கிறார்கள். பறக்க இயலாத சிறிய சிறகுகளை உடைய பறவை இது. இந்த இயல்பால் ஆபத்து வந்தால்கூட டூடூ மிக எளிதில் சிக்கிக் கொள்ளும் தன்மை கொண்டது. எதிர்த்துச் சண்டையும் இடுவதில்லை. டூடூவின் அழிவை, போர்க்குணம் இல்லாத எந்த இனமும், காலமாற்றத்துக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் அழிந்து போகநேரிடும் என்றும் புரிந்து கொள்ளலாம்.

இந்தியப் பெருங்கடலில் மொரீஷியஸ் என்னும் அழகிய தீவைப் பூர்வீகமாகக் கொண்டது டூடூ. இந்தத் தீவில் பல வருடங்களாக மனிதர்களே இருந்ததில்லை. மனிதர்கள் காலடி படாதவரை டூடூக்கள் இங்கு பெருமளவில் செழித்து வாழ்ந்திருக்கின்றன. முதன்முதலில் கடல் மூலம் இந்தத் தீவுக்கு வந்த அரேபியர்கள் ஓய்வு எடுப்பதற்காக இறங்கியுள்ளனர்.

### டச்சுக்காரர்களின் பெருமை

அடுத்து, 1507 ஆம் ஆண்டில் போர்த்துகேயர்கள் இந்தத் தீவுக்கு வந்து தங்கியுள்ளார்கள். இவர்கள் தான் டூடூவை முதலில் கண்டுபிடித்ததாகச் சொல்லப்படுகிறது. டூடூ என்ற பெயரை அவர்கள்தான் இட்டிருக்க வேண்டும். அதற்குப் போர்த்துக்கேய மொழியில் முட்டாள் என்று அர்த்தம். டூடூக்கு முட்டாள் பறவை என்ற பெயரும் உண்டு.

ஆனால், 1598இல் மொரிஷியஸுக்கு வந்த டச்சுக்காரர்கள்தான் டூடூவைக் கண்டுபிடித்ததாக மற்றொரு வரலாற்றுக் குறிப்புச் சொல்கிறது. பெருமளவில் டூடூ வேட்டையாடப்பட்டது டச்சுக்காரர்களின் கால கட்டத்தில்தான். அவர்கள் மெய்பூ என்னும் நகரை உருவாக்கி, அதைத் தலைமையிடமாகக்கொண்டு மொரீஷியஸை ஆண்டு வந்தார்கள்.

### அழிவுக் காலம்

மொரீஷியஸ் இப்படி நாடாக ஆன பின்புதான் டூடூவின் அழிவுக் காலம் தொடங்கியது. டச்சுக்காரர்களுக்குப் பின்னர் பிரெஞ்சுக்காரர்கள் வந்தார்கள். பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து பிரிட்டிஷார் கைப்பற்றினர். மனிதக் குடியேற்றங்கள் தொடர்ந்து அதிகரித்தன. அதனால் இந்தத் தீவில் நாய்கள், எலிகள், பூனைகள், பன்றிகள் போன்ற விலங்குகளின் எண்ணிக்கையும் அதிகரித்தன.

டூடூ சண்டையிடும் இயல்பு இல்லாத பறவை. புற்களால் கூடுகள் அமைத்து, அது இட்ட முட்டைகள் ஏனைய விலங்குகளால் தொடர்ந்து வேட்டையாடப்பட்டன. டூடூவின் எண்ணிக்கை சட்டெனக் குறைந்தது. 1680ஆண்டுக்குள் அவை முற்றிலும் அழிந்துவிட்டன. மனிதர்கள் கண்ணில் பட்டு அதிகபட்சம் 100-150 ஆண்டுகளுக்குத்தான் அவற்றால் உயிர் பிழைத்திருக்க முடிந்திருக்கிறது.


டச்சு ஓவியர் ரோலண்ட் சாவ்ரே 1624இல் டூடூவை படமாகத் தீட்டியுள்ளார். இதுதான் டூடூவைத் தெரிந்து கொள்வதற்கான முதல் சாட்சியாக இருந்தது. அதன் பின்னரும் பலரும் ஓவியங்களில் டூடூவைப் பதிவு செய்துள்ளனர். ஓவியங்களின் அடிப்படையில் அதன் உடல் சாம்பல் நிறத்திலும் கால்கள் மஞ்சள் நிறத்திலும் உள்ளன. டூடூ வாழ்ந்த காலத்தில் அது குறித்த விழிப்புணர்வு இல்லாததால் அது தடமே இல்லாமல் எலும்புத் துண்டுகள் கூட மிஞ்சாமல் முழுவதுமாக அழிக்கப்பட்டுவிட்டது.

### நினைவுச் சின்னம்

மொரீஷியஸ், பிரிட்டிஷின் காலனித்துவத்தின்கீழ் இருந்தபோது, ரிச்சர்டு ஓவன் என்னும் பிரிட்டன உயிரியியலாளர், 1865இல் உதிரி உதிரியாகக் கிடைத்த எலும்புகளை வைத்து டூடூவின் எலும்புக் கூட்டைத் திரும்ப அமைத்தார். அதை வைத்துத்தான் டூடூவின் உருவத்தை ஓரளவு யூகிக்க முடிகிறது. சுமார் 3 அடி முதல் 6 அடி உயரத்துடன் டூடூக்கள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இவற்றின் எடை சுமார் 10 முதல் 20 கிலோ வரையான தாகும்.

டூடூவிற்கு ஒரு சிறப்பம்சம் உண்டு. மொரீஷியஸில் இருந்த கல்வாரியா என்னும் மரத்தின் பழங்கள் தான் டூடூவின் விருப்பமான உணவு. டூடூ இப்பழத்தைச் சுவைத்த பின்னர், அதன் கழிவுடன் வெளியேறும் விதைதான் முளைக்கும் ஆற்றல் பெற்றதாக இருக்கும். டூடூ அழிந்ததால் கல்வாரியா மரமும் அழிந்து போய்விட்டது. ஓர் உயிரினத்தின் அழிவு, சங்கிலித் தொடராக அது சார்ந்துள்ள மற்ற உயிரினங்களின் அழிவாகவும் மாறுவதை இதிலிருந்து உணரலாம்.

ஒரு காலத்தில் வேடிக்கைப் பொருளாக இருந்த டூடூ இந்த உலகில் இருந்து அற்றுப்போய் விட்டாலும், சுதந்திரம் அடைந்துவிட்ட இன்றைய மொரீஷியஸின் பெருமைக்குரிய அரசுச் சின்னமாக அது மாறியிருக்கிறது.






## அறிந்து கொள்ள வேண்டியவை...

நாக்கை அசைக்க முடியாத விலங்கினம்- முதலை
நடக்கத் தெரிந்த பறக்கும் பூச்சி- வெட்டுக்கிளி
கருவுறாத முட்டைகளை இடும் உயிரினம்- முதலை
மூளையில்லாத மீனினம்- நட்சத்திர மீன்
நீந்தத் தெரியாத விலங்கு- ஒட்டகம்
மிக வேகமாகச் செல்லும் பாம்பினம்- பிளாக்மாம்பா
பறக்கவும், தாவவும் தெரியாமல் நடந்தே செல்லும் பறவை, இறக்கை இல்லாத பறவை- கிவி
பித்தப்பை உள்ள ஒரே மான் இனம்-கஸ்தூரி மான்
வாழ்நாள் முழுவதும் நீர் அருந்தாத விலங்கு-எலிக்கங்காரு
மூன்று இதயங்கள் உள்ள மீன் இனம்-(cuttle fish) கட்டிள் மீன்
வெள்ளை நிறத்தை கண்டு பயப்படும் விலங்கு-புலி
உலகில் மிகவும் மெதுவாக நடக்கும் பாலூட்டி- கடல் ஆமை
ஓமோன் இல்லாத உயிரினம்-பக்டீரியா
25 கோடி ஆண்டுகளாக உருமாறாதிருக்கும் பூச்சியினம்- சிலந்தி
மிக நீண்ட ஆயுள் கொண்ட உயிரினம்-நீலத்திமிங்கலம்
270 பாகை வரை தலையைத் திருப்பக்கூடிய பறவை- ஆந்தை
மிகச்சிறிய இதயம் கொண்ட மிருகம்-சிங்கம்
அதிக நீர் அருந்தும் பறவை-புறா
மிகச்சிறிய முட்டையிடும் பறவை- தேன்சிட்டு
பல்லில்லாத முளையூட்டி- தேவாங்கு

எஸ்.தர்சனா
உரும்பிராய் சைவத்
தமிழ் வித்தியாலயம்



## தாஜ்மஹால் அன்பின் சின்னமா?



இந்தியாவில் ஆக்ரா நகரில் உள்ள நதிக்கரையில் அழகுடன் உள்ளது அன்பின் சின்னமாகக் கருதப்படும் தாஜ்மஹால். முகலாய கட்டடக் கலைக்கு இது முக்கிய வரலாற்றுச் சான்றாகும்.
தாஜ்மஹால் வெள்ளைப் பளிங்குக்கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. தாஜ்மஹாலுக்கு எதிரே உள்ள குளமும் அதன் இருபக்கமும் உள்ள பச்சைப் பசேலென்று காணப்படும் சோலையும் உள்ளூர் உல்லாசப் பயணிகளையும், வெளிநாட்டு உல்லாசப் பயணிகளையும் வெகுவாகக் கவர்ந்து வருகின்றது.
முகலாய மன்னர் ஷாஜகான் தனது அன்பு மனைவியான மும்தாஜ் நினைவாகக் கட்டிய கல்லறையே இந்த தாஜ்மஹால் ஆகும். 1632 ஆம் ஆண்டு இதன் கட்டுமானப் பணிகள் அனைத்தும் பூர்த்தியாகின.
தொடர்ந்து 16 ஆண்டுகள் காலமாக 22 ஆயிரம் மனிதர்களின் உழைப்பால் உருவானதே இந்தத் தாஜ்மஹால். கட்டப் பொருள்களைச் சுமந்து கொண்டு வருவதற்கு ஆயிரம் யானைகள் பயன்படுத்தப்பட்டன. ராஜஸ்தானிலிருந்து பளிங்குக் கற்களும் பஞ்சாப்பிலிருந்து ஜஸ்பர் கற்களும், சீனாவிலிருந்து ஜேட் மற்றும் கிரிஸ்டல் கற்களும் இந்தக் கட்டுமானத்துக்கெனக் கொண்டு வரப்பட்டன.
அந்தக் காலத்திலேயே தாஜ்மஹாலைக் கட்டி முடிக்க மூன்று கோடியே இருபது இலட்சம் ரூபா செலவாகியுள்ளது. தாஜ்மஹாலின் நடுப்பகுதியில் மன்னர் ஷாஜகான் மற்றும் அவரது அன்பு மனைவியான மும்தாஜின் கல்லறைகள் அமைக்கப்பட்டுள்ளன.
மஹாலின் உட்புறச் சுவர் முழுவதும் திருக்குர்ஆன் வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். உலக ஏழு அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலைப் பார்வையிட ஆண்டு ஒன்றுக்கு 20 முதல் 30 இலட்சம் உல்லாசப் பயணிகள் வந்து செல்வதாகக் கூறப்படுகின்றது.
இதில் 2 இலட்சம் பேர் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் ஆவார்கள். 22 ஆயிரம் மனிதர்களின் இரத்தத்தையும் வியர்வையையும் சிந்த வைத்து அந்தத் தொழிலாளர்களை அடிமைகள் போன்று நடத்தியதன் மூலமாக கட்டி முடிக்கப்பட்ட இந்தக் கட்டடத்தை அன்பின் அடையாளம் என்று எவ்வாறு கூற முடியும்?

*நேச . வித்தியாசாகர்*
*கிளிநொச்சி.*

## அம்மா....



அன்பை அமிர்தமாக ஊட்டி
அம்மா என்று அழும்போது
ஆர்த்திக் குட்டி எனக் கூறி
ஆசை முத்தமிடுவாள் கன்னத்தில்

இன்னல்களை எல்லாம்
இன்பமாகப் பார்த்து
ஈட்டியை கூட மனதால் தாங்கி
ஈசன் போல நேரில் வரும் தெய்வம் அன்னை

உயிரை மெழுகுபோல் உருக்கி - தன்
உயிராக எம்மை வளர்த்தெடுத்து
ஊசி போல தன்னை ஆக்கி
ஊட்டி விடுவாள் எமக்கு உணவு

எத்தனை கஷ்டங்களையும் தாங்கி
எம்மை சிரிக்க வைத்து
ஏணிபோல தன்னை ஆக்கி
ஏற்றி விடுவாள் எம்மை மேலே

ஒன்றிரண்டு வார்த்தை போதாது
அன்னையை வர்ணிக்க
ஓராயிரம் வார்த்தைகளை
கண்டுபிடிக்க வேண்டும்
ஒருபோதும் தன்னைப் பற்றி நினைக்காது
ஓயாமல் எமக்காக தன்னை உருக்கும்
அன்னைக்காக

நான் உங்களை வரமாகப் பெற - என்ன
தவம் செய்தேனோ என்றால்
நான் தான் உன்னை பெற
தவம் செய்திருக்க வேண்டும் என்பாள் அன்பாக

அன்னை ஓர்ஆலயம்
அவள் இதயம் ஒரு தெய்வம்
அன்னையை என்றும் வணங்கினால்
அல்லல்கள் எமை எட்டியும் பார்க்காது.



***செல்வி.ஆர்த்திகா சுவேந்திரன்,***
*யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.*

## நீதிக்குக் கிடைத்த கௌரவம்

தேவநம்பிய தீஸ மன்னனின் பின்னர் ஆட்சி செய்த சில அரசர்களுக்குப் பின்னர் சோழ நாட்டில் இருந்து இங்கு வந்து ஆட்சி செய்த அசேல மன்னனைத் தோற்கடித்து எல்லாள அரசன் 44 ஆண்டுகள் ஆட்சி செய்தான் என மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது. எல்லாள அரசன் நீதிநெறி பிழளாத நேர்மையான ஓர் அரசனாவான். நண்பர்களினதும், எதிரிகளினதும் வழக்குகளை விசாரிக்கும் போதும் நடுவுநிலை வகித்ததுடன், வழக்கைத் தொடுத்தவர்களையும், வழக்குத் தொடுக்கப்பட்டவர்களையும் ஒரே சமமாக மதிக்கும் பண்பு இவனிடம் காணப்பட்டது. இவன் தனது நற்பண்புகளை வளர்த்துக் கொண்டவனாகவும் காணப்பட்டான்.
நாட்டு மக்கள் தமது தேவைகளை அரசனுக்கு அறிவிக்கும் வசதிகளும் எல்லாளன் காலத்தில் காணப்பட்டன. மனிதர்கள் போன்றே மிருகங்களுக்கும் அவன் சமமான வகையில் கருணை காட்டினான். தனது பிள்ளைகளுக்கும், நாட்டு மக்களுக்கும் ஒரே நீதியை வழங்கினான். மேற்குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் எல்லாள அரசனைப்பற்றி மகாவம்சத்தில் கூறப்பட்ட விடயங்களாகும். எல்லாள அரசன் இலங்கையின் அரசர்களில் நேர்மையானவனாகவும், தார்மீக குணங்கள் மிக்கவனாகவும் விளங்கினான்.
ஒருமுறை துட்டகைமுனுவுக்கும் எல்லாளனுக்கும் இடையே போர் ஏற்பட்டது. அந்தப் போரில் எல்லாளன் மரணமடைய துட்டகைமுனு அந்த இடத்திலேயே எல்லாள மன்னனின் பூதவுடலை அடக்கம்பண்ணி அந்த இடத்தில் ஒரு கல்லறையையும் அமைத்து ஒரு பெரகராவையும் நடத்தி மிக உன்னத முறையில் எல்லாள மன்னனைக் கௌரவித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
மேலும் அந்த இடத்தைக் கடந்து செல்லும் யாவரும் எல்லாளனுடைய கல்லறைக்கு மரியாதை செலுத்திவிட்டுப் போகுமாறு அரச கட்டளையையும் துட்டகைமுனு பிறப்பித்தான். இந்த அரச கட்டளை அப்படியே நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.
மகாவம்சம் எழுதப்படும் காலம் வரையிலும் அரசகுமாரர்கள் அந்த இடத்தைக் கடக்கும் போது, எதுவித மேளதாளங்களை இசைக்காமல் சென்றதாக, மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது. எமது புராதன அரசர்களும், குடிமக்களும் எவ்வளவு நற்பண்புள்ளவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும். இதுபோன்றே மகாவம்சமும் எவ்வளவு தூரத்துக்கு பாரபட்சமற்ற மூலதார நூலாகக் காணப்பட்டுள்ளது என்பதையும் விளங்கிக் கொள்ள இந்த விவரம் உதவியாகவுள்ளது.

*ஆ. கபிலாயன்,*
*மல்லாகம் மகா வித்தியாலயம்.*



# சந்தேகம் மனதில் பரவும் விஷம்

ஒருவர் மேல் இருக்கும் அதீத அன்புதான் சந்தேகத்துக்கு அடிப்படைக் காரணம் என்று விளக்கம் கூறுபவர்கள் சற்று கவனிக்க வேண்டும். அது முழு உண்மையல்ல. இயலாமை, கோபம், மற்றவர்களைப் புரிந்து கொள்ளும் திறமையின்மை, மனஒழுக்கம் இல்லாமை போன்ற தன்மைகளைக் கொண்டவர்கள்தான் அதிகம் சந்தேகம் கொள்வார்கள்.


சந்தேகப்படுகிறவர்களில் சிலர் சந்தேகத்தின் பேரில் மற்றவர்களைப் கையும் களவுமாகப் பிடித்து விட்டது போல் சந்தோஷப்படுவார்கள். அவர்களைக் கேள்வி கேட்டு திணறடித்து, தாங்கள் சாமர்த்தியத்தை தாங்களே புகழ்ந்து கொள்வார்கள். அதனால் ஏற்படும் பின்விளைவுகள் தாக்கும் போதுதான் விபரீதத்தின் விளைவை அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

தொட்ட தற்கெல்லாம் சந்தேகப்படுபவர்கள் ஒருவகை. அந்த சந்தேகப் பேர்வழிகள் பல நேரங்களில் நகைச்சுவையாளர்களாக மாறி விடுவார்கள். தங்களைத் தாங்களே அதி மேதாவியாக்கிக் கொள்ள அவர்கள் மேற்கொள்ளும் முயற்சி பல நேரங்களில் தோல்வியில்தான் முடியும். அதற்குக் காரணம் தவறு செய்பவர்கள் யாரும் மற்றவர் கண்ணில் படும்படி எதையும் செய்ய மாட்டார்கள் என்பது அவர்கள் மூளைக்கு எட்டாது.

எதுவுமே தெரியாதுபோல இருந்து கொண்டே தக்க ஆதாரங்களோடு கூட்டாளியைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விசாரிப்பவர்கள் இன்னொரு ரகம். தவறு செய்வது மனிதனின் இயல்பு. அதனை மாற்றியமைக்க பொறுமை வேண்டும். சந்தேகம் சரிப்பட்டு வராது.

தவறே செய்திருந்தாலும் மன்னிப்பு பலநேரங்களில் மகத்தான மாற்றங்களை உருவாக்கும். சந்தேகம் வாழ்க்கையின் அத்திபாரத்தையே அசைத்து விடும். அதன் பின்னரும் ஏற்படும் மாற்றங்கள் அத்தனை மகிழ்ச்சியாக இருக்காது. காலப்போக்கில் சுற்றியிருக்கும் அனைவரையும் சந்தேக வளையத்துக்குள் கொண்டு வர முயலும்போது உலகமே அவர்களை வெறுக்க ஆரம்பித்து விடும். அப்போது 'நாம் சந்தேகிப்பதெல்லாம் பொய்' என்ற உண்மையை அவர்கள் உணர்ந்து, நடந்து முடிந்த சம்பவங்களால் குற்ற உணர்வு கொள்வார்கள். அதையேநினைத்து காலம் முழுக்கத் துடிப்பார்கள். சந்தேகத்தால் தங்கள் சந்தோஷத்தைக் குழி தோண்டிப் புதைத்துக் கொண்டவர்கள் பலர். நாளடைவில் சந்தேகம் அவர்களை ஒரு மன நோயாளிபோல் ஆக்கி, அவர்களைத் தனிமைப்படுத்தி விடும். சந்தேகத்தால் ஏற்படும் மன அழுத்தம் அவர்களை நோயாளியாக்கிவிடும். அதனால் அவர்கள் காலம் முழுவதும் மன- உடல் நோயாளிகளாக வாழ வேண்டியதாகி விடும்.

சந்தேகமே இல்லாமல் வாழ முடியுமா? முடியும். சந்தேகத்தால் சாதிக்க முடியாததை அன்பால் சாதிக்கலாம். சந்தேகம் என்பது அறியாமையின் வெளிப்பாடு. இயலாமையின் செயற்பாடு.



அன்பால் கட்டுப்படுத்த முடியாத விடயம் எதுவும் இல்லை. ஆனால் அதற்குப் பொறுமை தேவை. நாம் யூகிக்கும் விடயம் உண்மையா பொய்யா என்று தெளிவு பெற அமைதி தேவை. தெளிவும், அமைதியுமாய் இருப்பவர்கள் மனதில் சந்தேகப் பேய் குடிபுகாது.

புதுமணத் தம்பதிகளுக்கு இடையே ஏற்படும் சந்தேகம் அவர்களுக்குள் தேவையற்ற குழப்பத்தையும் பூசலையும் ஏற்படுத்தி விடும். இது அவர்களை எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க விடாமல் அவர்கள் வாழ்க்கையை முடக்கி விடும். அவர்களிடம் இருக்கும் மகிழ்ச்சியைச் சிதைத்து அவர்கள் வாழ்க்கையை கேலிக்குரியதாக்கிவிடும். மற்றவர்கள் அவர்களைக் கேலிப் பொருள்கள் போல் ஆக்கிவிடுவார்கள். அதனால் அவர்கள் மனதில் ஏற்படும் வடு காலம் முழுவதும் மாறாது.

தம்பதிகளில் கணவன்- மனைவியைச் சந்தேகிப்பதும், மனைவி- கணவனைச் சந்தேகிப்பதும் இருவர் வாழ்க்கையையும் அலங்கோலமாக்கி விடும். எல்லோர் முன்னிலையிலும் சந்தேகத்தோடு பார்ப்பது, பேசுவது பின்னால் சென்று விசாரிப்பது இது அனைத்தும் தீராத அவமானத்தை மற்றவருக்கு ஏற்படுத்தி விடும். அதன் பின் ஏற்படும் சமாதானம் இழந்ததை மீட்டுத்தராது. மனதில் மேலோட்டமாகச் சந்தேகம் உருவாகும் போதே அதை கிள்ளி எறியப் பழகிக்கொள்ள வேண்டும். கிள்ளி எறிந்தால் மனம் தெளிவு பெறும். வாழ்க்கை வளம் பெறும்.

சந்தேகத்தால் ஏற்படும் மனஸ்தாபங்கள் நாளடைவில் நீண்டு, நிரந்தர பிரிவுக்கு வழி வகுத்து விடும். அதுமட்டுமல்ல சந்தேகம் என்ற பலவீனத்தை மனதில் சுமந்தவர்களை யார் வேண்டுமானாலும் ஆட்டிப்படைக்கலாம். சந்தேகப் பேர்வழிகளைத் தேடிப் பலரும் வருவார்கள். தங்களால் முடிந்த தொந்தரவுகளை அவர்களுக்குக் கொடுப்பார்கள். போகிற போக்கில் சந்தேகப்படும்படியான விடயம் ஏதாவது அகப்பட்டால் அதையும் அவர்களிடம் கூறி, அவர்களைத் தூண்டி விடுவார்கள். இந்த சந்தேக நபர் அதைய்ும் நம்பி செயல்பட்டு அவமானப்படும்போது, தூர நின்று வேடிக்கை பார்த்துக் கைகொட்டிச் சிரிப்பார்கள். இதற்கெல்லாம் இடம் தராமல் உறுதியாக இருக்கும் வரைதான் வாழ்க்கை வண்டி தடம் புரளாமல் ஓடும். அறிவுள்ளவர்களால்மட்டுமே உண்மையை உணர முடியும். சந்தேக குணம் மூர்க்கத்தனமானது உண்மைகளை அறிய விடாது. சில நேரங்களில் சிலர் சந்தேகம் கொள்வது உண்மையாகக் கூட இருக்கலாம். அப்போது மனம் பதறாமல் தவறுகளைத் திருத்த முயற்சிக்க வேண்டுமே தவிர சந்தேகத்தை குற்றமாக்கி வாழ்க்கையை நரகமாக்கிக்கொள்ளக்கூடாது. சந்தேகம் எப்போதும், யாருக்கும் நன்மை செய்ததில்லை. சந்தேகம் மனதில் பரவும் விஷம். சந்தேகம் இல்லாத வாழ்க்கைதான் நிம்மதியானது.

## விபத்துக்களை தவிர்க்க மான் கொம்புகளில் விசேட 'பெயிண்ட்'



பின்லாந்து நாட்டில் வீதியைக் கடக்கும்போது மான்கள் வாகனங்களில் அடிபட்டு உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகமாக நிகழ்கின்றன. இதனைத் தவிர்ப்பதற்காக, அந்தநாட்டைச் சேர்ந்த விலங்குகள் பாதுகாப்பு அமைப்பு ஒன்று வித்தியாசமான முயற்சியை மேற்கொண்டுள்ளது. மான் கொம்புகளில் பிரதிபலிக்கும் தன்மை கொண்ட விசேட பெயிண்ட்டை ஸ்பிரே செய்து விடுகின்றனர். இந்த விசேட பெயிண்ட்டை பின்லாந்தைச் சேர்ந்த அல்பெடோ 100 என்ற பெயிண்ட் தயாரிப்பு நிறுவனம் தயாரித்து வழங்கியுள்ளது.

இரவில் விளக்கு வெளிச்சத்தில் மட்டும் அந்த பெயிண்ட் பிரதிபலிக்கும். இதனால், வாகனச் சாரதிகள் எளிதாக வீதிகளில் நிற்கும் மான்களை அடையாளம் கண்டு கொள்ள முடியும். இதன்மூலம் வாகனங்கள் மோதி மான்கள் உயிரிழப்பது தவிர்க்க முடியும் ,என்று அந்த அமைப்பினர் கருதுகின்றனர். முதல்கட்டமாக, 20 மான்களுக்கு வண்ணம் தீட்டியுள்ளனர்.

வாகனச் சாரதிகளின் கருத்துக்களைக் கேட்டறிந்து அடுத்த கட்டமாக மான்களின் கொம்புகளில் வண்ணம் அடிக்கும் முயற்சியை துவங்க இருக்கின்றனர். ஆனால் மான்களைப் பிடிப்பது அல்லது நெருங்கிச் சென்று ஸ்பிரே செய்வது தான் கடினமான காரியம் என்கின்றனர் அவர்கள்.

## வீட்டுக்குள் ஏலியன் குட்டி



விண்வெளி மனிதர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

பிரபஞ்சத்தில் பூமி மாதிரியே இருக்கிற வேறு பல கிரகங்களிலும் மனிதர்களைப் போல உயிரினங்கள் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றன. விண்வெளி மனிதர்கள் பறக்கும் தட்டுகளில் பூமிக்கு அடிக்கடி வந்து செல்வதாகவும் நாம் புத்தகத்தில் படித்திருப்போம். அப்படிப்பட்ட விண்வெளி மனிதர்களின் குட்டிக் குழந்தை ஒன்று உங்கள் வீட்டுக்கு வந்தால் எப்படி இருக்கும்....? அமெரிக்காவில் கலிபோர்னியா நகருக்கு அருகில் உள்ள காட்டில் அது போல ஒரு பறக்கும் தட்டு வந்து இறங்குகிறது. அதிலிருந்து ஏலியன்ஸ் என்று அழைக்கப்படும் விண்வெளி மனிதர்கள் இறங்குகிறார்கள்.

அவர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள்? பூமியைக் குறித்து ஆராய்ச்சி செய்வதற்காக. பூமியில் இருப்பவர்களை செவ்வாய்க் கிரகத்துக்கு எல்லாம் அனுப்பி விண்வெளி ஆராய்ச்சி செய்கிறோம் அல்லவா? அதுபோல் பூமியில் உள்ள தாவரங்களைப் பறித்துக் கொண்டிருக்கும்போது திடீரென மனிதர்கள் வந்துவிடுகிறார்கள். ஏலியன்கள் எல்லாம் மனிதர்களிடம் மாட்டிக்கொள்வோம் என்ற பயத்தில் படபட வென ஓடிப்பறக்கும் தட்டுக்குள் ஏறிக் கொள்கின்றன.

அப்போது அந்தக் கூட்டத்தில் இருந்த ஒரு ஏலியன் குட்டி ஓடி வருவதற்குள் அவசரத்தில் மற்ற ஏலியன்கள் பறந்து விடுகின்றன. ஏலியன்களைத் துரத்தி வந்த மனிதர்களின் கண்களில் அந்த ஏலியன் குட்டி சிக்கிக்கொள்ள, அது உயிரைப் பாதுகாத்துக்கொள்ள ஓடி ஒளிகிறது.

இறுதியாக எலியட் என்ற ஒரு சிறுவனுடைய வீட்டிற்குள் வந்துவிடுகிறது. அவனுக்கு ஏலியனைப் பிடித்துப் போய்விடுகிறது. அவன் சொல்வதையெல்லாம் அது சொல்கிறது. அது அவனுக்கு விளையாட்டுப் பொம்மையைப்போல் தெரிகிறது.


உடம்பு சரியில்லை என்று அம்மாவிடம் பொய் சொல்லி ஸ்கூலுக்குப் போகாமல் வீட்டில் இருந்து கொண்டு ஏலியன் குட்டியுடன் பொழுதைக் கழிக்கிறான். அவன் தங்கை கெரிடிக்கும் அதை ரகசியமாக அறிமுகப்படுத்துகிறாள்.

அவன் தங்கையும் அவனும் சேர்ந்து அந்த ஏலியன் குட்டியை அவர்கள் அப்பா, அம்மாவுக்குத் தெரியாமல் மறைத்து வளர்க்கின்றனர். அதற்கு ஆங்கிலம் கற்றுக்கொடுக்கிறார்கள். அம்மா, தங்களுக்குக் கொடுக்கும் உணவை அதற்குக் கொடுக்கிறார்கள். தங்கள் ஆடைகளை அதற்கு மாட்டி அழகுபார்க்கிறார்கள். அதுவும் அவர்களுடன் சந்தோஷமாக விளையாடுகிறது.

ஆனாலும் அந்த ஏலியன் குட்டிக்குத் தங்கள் கிரகத்துக்குப் போகும் ஆசையும் இருக்கிறது. எலியட்டுக்கும் கெரிடிக்கும் விளையாட்டுத் தோழனாக ஆகிவிட்ட ஏலியனை விட்டுப்பிரிய விருப்பமில்லை.

ஒரு பக்கம் விஞ்ஞானிகள், ஆராய்ச்சிக்காகக் குட்டி ஏலியனைத் தேடுகிறார்கள். இன்னொரு பக்கம் இராணுவமும் ஏலியனைத் தேடுகிறது.

- வலையவன்




# பிளாஸ்ரிக் எவ்வாறு உருவானது?

மனிதன் பெரும்பாலான பொருள்களை உருவாக்கும் மூல சூத்திரத்தை இயற்கையிடம் இருந்துதான் கற்றுக்கொள்கிறான் என்றால் மிகையில்லை. அந்த வகையில் பறவையைக் கண்டு விமானத்தையும், எதிரொலி கேட்டு வானொலியையும் படைத்தான். அந்த வகையில் மனிதனுக்கு பிளாஸ்ரிக்கை படைக்கும் எண்ணம் தோன்றியதும் இயற்கையால் படைக்கப்பட்ட 'இயற்கை பிளாஸ்ரிக்கை' கண்டுதான் என்றால் பொய்யில்லை. அது என்ன 'இயற்கை பிளாஸ்ரிக்' இதுவரை கேள்விப்பட்டதில்லையே என்கிறீர்களா.? மாடுகள் (Cow) உள்ளிட்ட கால்நடைகளின் (Cattle) கொம்புகள் (Horns) தான் இயற்கையால் படைக்கப்பட்ட 'இயற்கை பிளாஸ்ரிக்' ஆகும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் கால்நடைகளின் (குறிப்பாக மாடுகளின்) கொம்புகளைப் பற்றி ஆரம்பித்த ஆய்வுகள்தான் பிற்காலத்தில் பிளாஸ்ரிக் உருவாக மூலகாரணமாக அமைந்தன என்றால் மிகையில்லை. பல்வேறு ஆராய்ச்சிகளின் முடிவில் கால்நடைகளின் கொம்புகள், பால்புரதங்களால் (Casein) தான் உருவாக்கப்படுகிறது என்பதை பதினெட்டாம் நூற்றாண்டு வாக்கில் மனிதன் தெரிந்துகொண்டான். கால்நடைகளின் கொம்புகள் பிளாஸ்ரிக்கின் தோற்றத்தை ஒத்துக் காணப் பட்டாலும் கூட அவற்றின் கொம்புகள் மக்கும் திறன் கொண்டவை! இதைத்தொடர்ந்து இயற்கையாக றப்பர் மரங்களிலிருந்து கிடைக்கும் றப்பர் பாலிருந்து பிளாஸ்ரிக் தயாரிக்கும் முயற்சியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வேதியல் நிபுணர்கள் தீவிர முயற்சியில் ஈடுபட்டனர். இந்நிலையில் 1839 ஆம் ஆண்டு சார்லஸ் குட்இயர் (Charles Goodyear, 1800 - 1860) என்ற அமெரிக்கக் கண்டுபிடிப்பாளர் (American Inventor) ரப்பர் மரங்களிலிருந்து கிடைக்கும் பாலுடன் (Rubber Milk) கந்தகம் (Sulfur) கலந்து சூடாக்கி வல்கனைசிங் ரப்பர் (Vulcanizing Rubber) என்ற ஒருவகை ரப்பரை தயாரிக்கும் முறையை கண்டறிந்தார். இந்தக் கண்டுபிடிப்புதான் செயற்கை பிளாஸ்ரிக் உருவாக்கத்துக்கு ஒரு ஊன்றுகோலாக அமைந்தது என்று சொல்லலாம்.

சார்லஸ் குட்இயரின் கண்டுபிடிப்பை முன் மாதிரியாகக்கொண்டு பிரிட்டனைச் சேர்ந்த அலெக்ஸ்சாண்டர் பார்க்ஸ் (Alexander Parkes, 1813 - 1890) என்ற உலோகவியல் வல்லுநர் (Metallurgist Specialist) உலகமே வியக்கும் வகையில் பார்க்ஸின் (Parkesine) என்று அழைக்கப்பட்ட உலகின் முதல் செயற்கை பிளாஸ்ரிக்கை 1856 ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். தாவரங்களிலிருந்து பெறப்பட்ட மரத்தாதுக்களுடன் (Cellulose) நைட்ரிக் அமிலத்தை சேர்த்து சூடாக்கி இதனை அவர் தயாரித்திருந்தார். இந்த பிளாஸ்ரிக், வெப்பப்படுத்தும் போது இளகும் தன்மைகொண்டதாகவும் குளிர்விக்கும் போது இறுகி மீண்டும் தனது பழைய கடினதன்மையை எட்டும் தன்மை கொண்டதாகவும் இருந்தது. இதனால் பிளாஸ்ரிக்கை வேண்டிய தோற்றத்தில் சுலபமாக வடிவமைத்துக்கொள்ள முடிந்தது. லண்டன் மாநகரில் 1862 ஆம் ஆண்டு நடந்த உலக சர்வதேச கண்டுபிடிப்பு கண்காட்சியில் தனது இந்த பிளாஸ்ரிக் கண்டுபிடிப்பை பகிரங்கமாக வெளியுலகுக்குச் செய்து காட்டினார். அவரது இந்தக் கண்டுபிடிப்பு அந்த ஆண்டு சிறந்த கண்டுபிடிப்புகளுக்கான வெண்கலப் பதக்கத்தை தட்டிச்சென்றது. தொடர்ந்து 1856 - ஆம் ஆண்டு Parkesine Company' என்ற பெயரில் உலகின் முதல் பிளாஸ்ரிக் தயாரிக்கும் நிறுவனத்தை ஆரம்பித்து பிளாஸ்ரிக் தயாரித்து விற்பனை செய்ய ஆரம்பித்தார். இவரது செய்முறைப்படி பிளாஸ்ரிக் தயாரிக்க அதிக அளவில் மரத்தாதுக்கள் (Cellulose) தேவைப்பட்டதால் இவரது நிறுவனத்தால் மிகக்குறைந்த அளவே பிளாஸ்ரிக் உற்பத்தி செய்ய முடிந்தது. இதன் காரணமாக வணிக ரீதியில் இவரது பார்க்ஸின் பிளாஸ்டிக் வெற்றிபெற முடியாமல் போய்விட்டது.

பிளாஸ்ரிக் தயாரித்தலின் அடுத்த கட்டம் 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் எட்டப்பட்டது. தற்போது இந்தியாவில் கிரிக்கெட் விளையாட்டு எப்படி உச்சக் கட்டத்தில் இருக்கிறதோ அதுபோல 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமெரிக்காவில் பில்லியர்ட்ஸ் விளையாட்டு உச்சக் கட்டத்தில் இருந்தது. அப்போது பில்லியர்ட்ஸ் விளையாட தேவைப்பட்ட பந்துகள் யானையின் தந்தங்களிலிருந்து (Elephant Tusk) தான் தயாரிக்கப்பட்டன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட யானைகள் பில்லியர்ட்ஸ் பந்துகள் தயாரிப்பதற்காகவே படுகொலை செய்யப்பட்டன. யானைகளின் நிலையை எண்ணி வருத்தப்பட்ட அமெரிக்க கண்டுபிடிப்பாளரான ஜான் வெஸ்லி ஹையாட் (John Wesley Hyatt, 1837 d 1920 AD) இதற்கு மாற்று வழி கண்டறிய தீவிரமாக முயன்றார். தொடர்ந்து ஜான் வெஸ்லி, அலெக்ஸ்சாண்டர் பார்க்ஸின் கண்டுபிடிப்பை முன் மாதிரியாகக் கொண்டு 1868 ஆம் ஆண்டு பருத்தியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட செல்லு லோஸுடன் நைட்ரிக் அமிலம் மற்றும் கற்பூரம் ஆகியவற்றைச் சேர்த்து செல்லுலாய்ட் என்ற புதியவகை பிளாஸ்ரிக் தயாரிக்கும் தொழில்நுட்பத் தைக் கண்டறிந்தார்.





அவரது இந்தக் கண்டுபிடிப்பைப் பற்றி கேள்விப்பட்ட அலெக்ஸ்சாண்டர் பார்க்ஸ் வெஸ்லியுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு 1868 ஆம் ஆண்டு இறுதிவாக்கில் செல்லுலாய்ட் பிளாஸ்ரிக்கில் பில்லியர்ட்ஸ் பந்துகள் தயாரித்து Parkesine Company' மூலமாக விற்பனை செய்ய ஆரம்பித்தனர். இன்று வரை டேபிள் டென்னிஸ் பந்துகள் அவர்கள் தயாரித்த அதே தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தித் தான் தயாரிக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து புகைப்படக்கருவி, பேனா, பொம்மைகள் உள்ளிட்ட ஏராளமான பொருள்கள் தயாரிப்பிலும் பிளாஸ்ரிக் பயன்படுத்தப்பட்டது. மேலும் மோசன் பிக்சர்ஸ் (Motion Picture) மூலம் 1882 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட உலகின் முதல் திரைப்பட தயாரிப்பில் பயன்படுத்தப்பட்ட புகைப்படச்சுருள் (Photo Reel) இவர்கள் தயாரித்த பிளாஸ்ரிக்கை பயன்படுத்திதான் தயாரிக் கப்பட்டது. அவரது கண்டுபிடிப்பின் மகத்துவத்தை சற்று தாமதமாக உணர்ந்துகொண்ட அமெரிக்க அரசாங்கம் 1914 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் வேதியல் கண்டுபிடிப்புகளுக்கு கொடுக்கப்படும் உயரிய விருதான 'பெர்கின் மெடலை' அவருக்கு வழங்கிக் கௌரவித்தது.


அலெக்ஸ்சாண்டர் பார்க்ஸ் மற்றும் ஜான் வெஸ்லி ஹையாட் ஆகியோரது கண்டுபிடிப்புகளை முன்மாதிரியாகக்கொண்டு இன்று நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கும் சின்தடிக் பிளாஸ்ரிக் எனப்படும் 100 வீதம் செயற்கை பிளாஸ்ரிக்கை, பெல்ஜியத்தை சேர்ந்த வேதியல் நிபுணரான ஹென்றிக் பேக்லேண்ட் (Hendrik Baekel and, 1863 d 1944 AD) என்பவர் 1907 ஆம் ஆண்டு கண்டறிந்தார். பேக்லைட் என்று அழைக்கப்பட்ட அவரது பிளாஸ்ரிக்கில் தாவர தாதுக்கள் (Cellulose), பெனோ-பார்மால்டிகைட் , மற்றும் நைட்ரிக் அமிலம் ஆகிய மூலக்கூறுகள் அடங்கியிருந்தன.

மிகச்சுலபமான தயாரிப்பு முறைகள் மற்றும் மிகக்குறைந்த விலை ஆகியவற்றின் காரணமாக பேக்லைட்" வணிக ரீதியில் மிகப்பெரிய வெற்றியை பெற்றது. ரேடியோ தயாரிப்பு, மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட பெரும்பாலான பொருள்கள் இந்த வகை பிளாஸ்ரிக் மூலம் தான் முதன் முதலில் தயாரிக்கப்பட்டது. இதன் 100 வீத மின் கடத்தாத்திறன் பெரும்பாலான எலெக்ரிக்கல் உபகரணங்கள் தயாரிப்பிலும் பயன்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கன.

தொடர்ந்து 1926 ஆம் ஆண்டு பொலிவினைல் குளோரைடு , வகை பிளாஸ்ரிக் தயாரிக்கும் முறையை வோல்ட்டர் செமொன் (Walter Semon) என்பவர் கண்டறிந்தார். இதன் பிறகுதான் குழாய்கள் தயாரிப்பிலும் பிளாஸ்ரிக் பெருமளவில் பயன்படுத்தப்பட்டது. தொடர்ந்து 1937ஆம் ஆண்டு பொலியூரித்தீன் (Polyurethane) வகை பிளாஸ்ரிக் தயாரிக்கும் தொழில்நுட்பத்தை ஓட்டோ பாயர் என்ற ஜேர்மனியைச் சேர்ந்த வேதியல் நிபுணர்கள் கண்டறிந்தார். இதன் பின்னர் பொலிஸ்ட்ரீன் (Polystyrene) வகை பிளாஸ்ரிக் புழக்கத்தில்வர ஆரம்பித்தது. இன்று பெருமளவில் புழக்கத்தில் உள்ள பொலிஎத்திலின் டெரெப்தலைட் (Polyethylene Terephthalate, known as PET (Soft Drinks Water Bottle)) வகை பிளாஸ்ரிக்கை பிரிட்டனைச் சேர்ந்த வேதியல் நிபுணர்களான ஜான் ரெக்ஸ் வின்பில்டு மற்றும் ஜேம்ஸ் டெனன்ட் டிக்சன் ஆகிய இருவரும் இணைந்து 1941 ஆம் ஆண்டு தயாரித்தனர். அதுவரையில் மனித சமுதாயத்துக்கு எந்தவித தீங்கையும் ஏற்படுத்தாமல் சென்றுகொண்டிருந்த பிளாஸ்ரிக்கின் பயணம் தடம் புரண்டு அழிவுப்பாதையை நோக்கி பயணிக்க ஆரம்பித்தது.

உணவுப்பொருள்கள் உள்ளிட்ட பெரும்பாலான பொருள்கள் பிளாஸ்ரிக்கில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வந்தது; பிளாஸ்ரிக் கண்டறிந்த பின்புதான்.

## ஜேர்மனியை விட்டு வெளியேறும் புத்திசாலிகள்



அறிவுக்கூர்மை மிகுந்த தொழில் துறையினர் ஜேர்மன் நாட்டை விட்டு செல்வதாக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.


ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த அரசாங்க ஆணைக்குழு நடத்திய ஆய்வில்இந்தத் தகவல்வெளியாகியுள்ளது. இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பயிற்சி பெற்ற கல்வியாளர்கள், ஆராச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் போன்ற பல்வேறு துறையினர் ஜேர்மனியை விட்டு ஏனைய நாடுகளுக்குக் குடிபெயர்வதாகத் தெரிவித்துள்ளது.


ஜேர்மானியர்கள் பிற நாடுகளுக்கு குடியேறுவதாலும் , பிற நாட்டவர் ஜேர்மனிக்கு குடிபெயர்வதாலும் ஜேர்மனியின் தரம் குறைவாக உள்ளது.

மேலும் ஜேர்மனியில் கடந்த 1996ம் ஆண்டு மற்றும் 2011ம் ஆண்டுக்கு இடையில் மட்டும் மொத்தம் 4,000 கல்வியாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்றும் இதனால் ஆஸ்திரேலியா, பெல்ஜியம், சுவிற்ஸர்லாந்து போன்ற பிற ஐரோப்பிய நாடுகள் மிகுந்த பயனடைந்துள்ளன என்றும் ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இது தொடர்பான அறிக்கையானது ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலா மொர்க்கலிடம் இந்த வாரம் சமர்ப்பிக்கபடவுள்ளது.

# பாம்பு பறப்பதன் இரகசியம்



"இந்த அரிய உயிரினம் பற்றியும் அவை பறந்து செல்லும்விதம் பற்றியும் உயிரியல் ஆய்வாளர்கள் ஆய்வு செய்துவருகின்றனர். காற்றில் சுமார் 100 அடி தூரம் வரை தனது உடலை நெளித்துப் பேலன்ஸ் செய்தபடி, பாம்பு பறந்து செல்வது எப்படி என்ற கேள்வி பல காலமாக இருந்துவருகிறது.



ஊர்வனவற்றில் மனிதன் அதிகம் அச்சப்படுவது பாம்புக்குத்தான். எனினும் இயற்கையின் படைப்பில் அந்த உயிரினங்கள் தங்கள் வாழ்வு முறையைத்தான் பின்பற்றுகின்றனவே தவிர, மனிதனை இம்சிப்பதற்காக அவை படைக்கப்படவில்லை.

அவற்றில் தனித்துவம் வாய்ந்தவை பறக்கும் பாம்பு கள். பெயர்தான் இப்படியே தவிர, உண்மையில் இப்பாம்புகள் பறப்பதில்லை. பார்ப்பதற்கு பறப்பதுபோல இருந்தாலும், காற்றில் சறுக்கிச்செல்கின்றன. உயரமான மரக் கிளைகளி லிருந்து உயரம் குறைவான மரக்கிளைகளுக்குத் தாவிச்செல்லும் தன்மை கொண்டவை இவ்வகைப் பாம்புகள். இரைகளைப் பிடிப்பதற்காகவும், எதிரிகளிடமிருந்து தற்காத்துக் கொள்வதற்காகவுமே இவை இப்படி சறுக்கிச் செல்கின்றன. கிரைசோபெலியா (Chrysopelea) என்ற பேரி னத்தைச் சேர்ந்த இந்தப் பாம்புகளில் ஐந்து வகைகள் உள்ளன. தெற்காசிய வெப்பமண்டல மழைக் காடுகளில் வசிக்கும் இந்தப்பாம்புகள் 2 அடி முதல் -4 அடி நீளம் வளரக்கூடியவை. பல்லிகள், பறவைகள் உள்ளிட்ட சிறிய உயிரினங்களை இவை உணவாகக் கொள்ளும்.

**எப்படிப் பறக்கின்றன?**

இந்த அரிய உயிரினம் பற்றியும், அவை பறந்து செல்லும்விதம் பற்றியும் உயிரியல் ஆய்வாளர்கள் ஆய்வு செய்து வருகின்றனர். காற்றில் சுமார் 100 அடி தூரம் வரை தனது உடலை நெளித்துப் 'பலன்ஸ்' செய்தபடி, பாம்பு பறந்து செல்வது எப்படி என்ற கேள்வி பல காலமாக இருந்துவருகிறது.

அமெரிக்காவின் வெர்ஜீனியா மாகாணத்தில் உள்ள வெர்ஜீனியா பொலிடெக்னிக் இன்ஸ்டிடியூட் அண்டு ஸ்டேட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் ஜேக் ஸோச்சா தனது குழுவினருடன் இணைந்து பாம்பு பறக்கும் இரகசியம் பற்றி ஆய்வுசெய்தார். 3டி பிரிண்டர் உதவியுடன் இந்தப் பாம்பின் உடலின் குறுக்கு வெட்டுத் தோற்றம் போன்ற ஒரு பிளாஸ்டிக் பொருள் தயாரிக்கப்பட்டது. நீரோட்டம் உள்ள ஒரு தொட்டியில் அதை வைத்தபோது நீரின் ஓட்டத்துக்கு ஏற்ப அந்தப்பொருள் விரிந்தும் சுருங்கியும் மாற்றமடைந்ததை ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். அதன்படி, இவ்வகை பாம்புகள் தங்கள் விலா எலும்புகளைக் குறுக்கியும் விரித்தும் உடலைப் பறப்பதற்கு ஏற்ற வகையில் அதிவேகமாக மாற்றிக் கொள்கின்றன என்றும், இந்த விசேஷ பண்பால் அவற்றால் காற்றில் சறுக்கிச் செல்ல முடிகிறது என்றும் ஜேக் ஸோச்சா கூறுகிறார்.

**என்ன பயன்?**

பறவைகள், விலங்குகளின் தனித்தன்மையை ஆய்வு செய்வதில் கிடைக்கும் இன்னொரு பயன், அதேபோன்ற சிறப்புத் தன்மை கொண்ட மனிதப் பயன்பாட்டுக்கு ஏற்ற இயந்திரங்கள், கருவிகளை உருவாக்க உதவியாக இருக்கும் என்பதுதான். விமானம் முதல் நீர்மூழ்கிக் கப்பல்வரை இதற்கு உதாரணம் சொல்ல முடியும். பாம்பு பறக்கும் இரகசியத்தைக் கண்டறிந்துள்ள ஆய்வாளர்கள், இயற்கையின் இந்த அற்புதத் தொழில் நுட்பத்தை, நவீன சாதனங்களில் பயன்படுத்தப்போவதாகத் தெரிவித்துள்ளனர். இந்தப் பாம்பு எம்மைக் கடிக்க வேண்டாம். ஆனால், தலைக்கு மேலே பாம்பு பறந்து வருவதைப் பார்க்க நேர்ந்தால் எமது கதி என்னாவது? இப்பாம்புகளின் விஷம் மனிதனைக் கொல்லும் அளவு ஆபத் தானது அல்ல. தவிர நீங்கள் அதன் அருகில் சென் றால், உங்களுக்குப் பயந்து அது சறுக்கிச் செல்லுமே தவிர, உங்களை நோக்கிச் சறுக்கி வராது என்கிறார் ஒரு சூழலியல் நிபுணர்.






நீங்கள் பாதணி, பேர்ஸ், பெல்ற் அல்லது ஏனைய வகை தோல் உற்பத்திகளை தயாரிக்கும் ஒரு முயற்சியாண்மையாளராக இருப்பின் இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதொரு வாய்ப்பாகும்.

தோல் உற்பத்திகளுக்குத் தேவையான மூலப்பொருள்கள், துணைப் பொருள்கள் மற்றும் இயந்திராதிகளை விற்பனை செய்யும் கொழும்பில் உள்ள முன்னணி வர்த்தகர்களும் துறைசார் பயிற்சியாளர்கள் பலரும் A9 வீதியில் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் ஒன்று கூடவுள்ளனர்.

2014 மார்ச் 8, சனிக்கிழமை,
காலை 10.00 முதல் மாலை 4 வரை

மூலப்பொருள்கள், கருவிகள் மற்றும் இயந்திராதிகளை விநியோகிப்பவர்களுடன் நீங்கள் நேரடித் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை பெறுவதோடு தோல் பொருள்களை உற்பத்தி செய்வது தொடர்பான புதிய தயாரிப்பு நுணுக்கங்களையும் நீங்கள் கற்றுக்கொள்ளலாம்.







இவ் அரிய வாய்ப்பை தவற விட்டு விட வேண்டாம்!

நுழைவு இலவசம்!!!

மேலதிக விரங்களுக்கு கீழ் காணும் நபர்களுடன் தொடர்பு கொள்ளவும்:

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | கர்ஜின் இராஜரத்தினம் | 075 9 871 302 |
| மன்னார் மற்றும் வவுனியா | நோயல் நிர்மலன் | 075 9 871 303 |
| கிளிநொச்சி | M S H முராட் | 075 9 871 301 |
| முல்லைத்தீவு | ஜானகி கனகராசா | 075 9 871 304 |


# இரசாயனக் குப்பைத் தொட்டியாக மாறிவரும் மனித உடல்

ஒவ்வொருவர் இரத்தத்திலும் இன்றைக்குச் சுமார் 300 தொழிலக வேதிப்பொருள்கள் கலந்துள்ளன என்கிறது ஓர் ஆய்வறிக்கை. எமது உடல்கள் வேதி தொழிற்சாலைகளின் குப்பைத் தொட்டிகளாக மாறிவிட்டன. காற்று, நீர், வீடு, அலுவலகம், நாம் பயன்படுத்தும் நுகர்வுப் பொருள்கள் என நாம் சார்ந்துள்ள அனைத்தும் எமக்குள் வேதிப்பொருள்களை மறைமுகமாகச் செலுத்தி வருகின்றன. சந்தைப் பொருளாதாரமும், நுகர்வு கலாசாரமும் இதைத் தீவிரப்படுத்தி, ஒவ்வொருவரையும் மாசடைந்த மனிதர்களாக்கி வருகின்றன.

பிறக்கும் குழந்தைகளையும், கருவில் வளரும் குழந்தைகளையும்கூட இந்த வேதி தாக்குதல் விட்டுவைக்கவில்லை. பிறக்கும் குழந்தையின் உடலில் 200 இற்கும் அதிகமான வேதிப்பொருள்கள் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வொஷிங்டனில் இருந்து செயற்படும் சுற்றுச் சூழல் பணிக் குழு என்ற அமைப்பின் 2005ஆம் ஆண்டின் அறிக்கை, செயற்கை வேதி பொருட்களால் தாக்கப்படுவது கருவறையிலேயே தொடங்கிவிடுகிறது என்கிறது. இக்குழு 2004 ஓகஸ்ட், செப்டம்பரில் ஓர் ஆய்வை மேற்கொண்டது. பிறந்த 10 குழந்தைகளின் இரத்த மாதிரிகளைச் சேகரித்துச் சோதித்தபோது ஒவ்வொரு குழந்தையின் இரத்தத்திலும் 200 தொழிலக வேதிப்பொருள்களும், மாசுபடுத்திகளும் இருப்பது தெரியவந்தது.

குழந்தைகளின் தொப்புள் கொடி துண்டிக்கப்பட்ட, பின்னர் அதிலிருந்து இரத்தத்தை எடுத்து ஆய்வு செய்தபோது அதில் அடங்கியிருந்த வேதிப் பொருள்களின் பட்டியல் நம்ப முடியாததாகவும், அச்சமூட்டுவதாகவும் இருந்தது. பல ஆண்டுகளுக்கு முன்பே தடைசெய்யப்பட்ட தொழிலக வேதிப் பொருள்கள், ஒட்டாத டெஃப்லான் வகை வேதிப் பொருள்கள், துரித உணவை அடைக்கும் பெட்டி உற்பத்தி, ஆடை உற்பத்தி போன்ற தொழில்களில் எண்ணெய்ப் பிசுக்கை நீக்கும் பெர்ஃப் ளோரோ வேதிப்பொருள்கள் போன்றவை தொப்புள் கொடி இரத்தத்தில் இருந்தன. அந்த வகையில் 413 செயற்கை வேதிப் பொருள்கள் இருப்பது கண்டறியப்பட்டது. இவ்வேதிப் பொருள்களில் பெரும்பான்மையானவை புற்றுநோயையும் மூளை நரம்பு மண்டலப் பிரச்சினைகளையும் வளர்ச்சிக் குறைபாடுகளையும் உருவாக்கக் கூடியவை என்பது குறிப்பிடத்தக்கது.

TOKYO SUPER MIX READY MIXED CONCRETE
BEST IN QUALITY (Only River Sand is Used) WIDEST AVAILABILITY FROM THE MARKET LEADER
A Strength that Binds... A Lifetime of use



இலங்கை மற்றும் பிரித்தானியாவின் தரநிர்ணய கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக தயாரிக்கப்படும், என்றும் தரத்தில் முன்நிலை வகிக்கும் ரெடிமிக்ஸ் கொங்கிறீட்டை இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு :-
எழுதுமட்டுவாழ் தெற்கு,
மிருசுவில், யாழ்ப்பாணம்.
021 720 0208

நிமலன்
077 346 62 62
கனேந்திரன்
077 309 99 53

NIPPON CEMENT · TOKYO CEMENT GROUP · TOKYO SUPER ORDINARY PORTLAND CEMENT